காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

உதயன்

சுடர்: 29 கதிர்: 343 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 18, செவ்வாய் 04.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பயன் பெறுவோம்

# இராணுவத்திடமே ஒப்படைத்தோம்

## ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று உறவினர்கள் அழுத்தம் திருத்தமாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4
"இராணுவத்தினரின் அறிப்புக்கு அமைய வட்டுவாகலில் எமது உறவுகளை அவர்களிடம் கையளித்தோம். அவர்களை அருட்தந்தை பிரான்சிஸ்ஸே பொறுப்பெடுத்து இராணுவத்தினரிடம் அழைத்துச் சென்றார். சரணடைந்தவர்களை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சிவப்பு நிற பஸ்ஸில் ஏற்றிச் சென்றதை நேரில் கண்டோம். அதன் பின்னர் அவர்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை." - இவ்வாறு நேற்றுக் காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தனர் காணாமற்போனவர்களின் உறவினர்கள்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது. அதில் சாட்சியமளிக்கும்போதே உறவினர்கள் மேற்கண்டவாறு சாட்சியமளித்தனர்.
தனபாலசிங்கம் புஸ்பாம்பாள் என்பவர் சாட்சியமளிக்

22 ஆம் பக்கம் பார்க்க

"எனக்குத் தெரிந்த, 4 குடும்பங்கள் அந்த பஸ்ஸில் போராளிகளுடன் சென்றனர். அவ்வாறு சென்றவர்களுக்கு இன்று வரையில் என்ன நடந்தது என்று தெரியாது. குடும்பமாகச் சென்ற வர்களில் சிறு குழந்தைகளும் இருந்தனர். அவர்களுக்கும் என்ன நடந்தது என்று இது வரையில் தகவல் எதுவுமில்லை.



நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு அமர்வில் கண்ணீருடன் சாட்சியம் வழங்கும் தாய் ஒருவர்.

## இலங்கை இந்திய இராணுவம் கூட்டுப் பயிற்சி

கொழும்பு, நவ.3
இலங்கை - இந்திய இராணுவத்தினர் இணைந்து இன்று 'மித்திர சக்தி' என்ற பயிற்சிநடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளனர். 42 இந்திய இராணுவத்தைச் சேர்ந்த விசேட துருப்பினரும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிரடிப்படையினர் கடற்படையினர் மற்றும் விமானப்படையினரும், இணைந்து இந்தப் பயிற்சியில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழி பாலத்தின் கீழிருந்து ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ 4
நாவற்குழிப் பாலத்தின கீழிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், கைக்குண்டு விடுதலைப் புலிகளின் தயாரிப்பு என்றும் தெரிவித்தனர்.
நேற்று முற்பகல் பொழுது போக்குவதற்காக அங்கு சென்றிருந்தவர்களே அவற்றைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர் என்றும், தண்ணீரில் அமிழ்ந்தவாறு அவை காணப்பட்

22 ஆம் பக்கம் பார்க்க

## காலநிலை

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவில் மழை பெய்யும் என்று, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. அதனால்மக்கள் அதுகுறித்து அவதானமாகநடந்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து காலி, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

## டெங்கு தீவிரம்

### நேற்று மட்டும் 8 பேருக்கு



யாழ்ப்பாணம், நவ.4
நேற்று மட்டும் எட்டுப் பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்.மாவட்டத்தின் அநேகமான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் டெங்கு தொற்று தீவிரமடையத் தொடங்கியுள்ளது என்று என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அதுகுறித்து மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ற-4)

## இராணுவம், புலிகள் மீது குற்றச்சாட்டுகள்

யாழ்ப்பாணம், நவ. 4
இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராக நேற்றுச் சம அளவில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் யாரால் காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்று தெரியாது என்றும் பலர் சாட்சியங்களில் தெரிவித்தனர்.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற அமர்வில் சாட்சியமளிக்க 57 பேர்

22 ஆம் பக்கம் பார்க்க

## சரமாரியாக ஷெல்லடித்து மக்களை கொன்றது அரசு

### ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ. 4
"எங்களைப் பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல வேண்டாம் என்று யாரும் தடுக்கவில்லை. மாறாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அரசு அறிவித்து விட்டு அங்கே ஷெல்லடித்து மக்களைக் கொலை செய்தது" - இவ்வாறு ஆணைக்குழு முன்பாகத் தாயார் ஒருவர் சாட்சியமளித்தார்.
இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளித்த தனது மகனைக் காணவில்லை என்று தாயார் ஒருவர் சாட்சியமளித்தார். அவரிடம் ஆணைக்குழுவினர், போரின் போது நீங்கள் இடம்பெயர்ந்தீர்களா? என்று கேட்டனர். அதற்கு அவர் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்

22 ஆம் பக்கம் பார்க்க

## சாட்சியாக உள்ளோரை விசாரிக்கின்றது ரி.ஐ.டி

### நேற்றைய அமர்வில் தாய் ஒருவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 4
இராணுவத்தினரிடம் நேரடியாக உறவுகளைக் கையளித்தமைக்கு நேரில் கண்ட சாட்சிகள் என்று தெரிவித்தவர்களிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழு முன்பாக நேரடியாகத் தாயார் ஒருவர் இதனை தெரிவித்

18 ஆம் பக்கம் பார்க்க

## மத நல்லிணக்கத்துக்கு நடவடிக்கைகள் தேவை

### வலியுறுத்துகிறார் பிரிட்டன் தூதுவர்

கொழும்பு, நவ.3
இலங்கையில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.
தூதுவர் ரான்கீன், கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் மத ஐக்கியம் மற்றும் இலங்கையின் ஏனைய விடயங்

18 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவோடு பகையை வளர்க்கிறது இலங்கை

### குற்றஞ்சாட்டுகின்றார் தயான் ஜயதிலக

கொழும்பு, நவ.4
அரசு இந்தியாவுடன் முரண்பட்டுக்கொள்ளும் வகையில் செயற்பட்டு வருகின்றது என்று ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.
சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையில் தரித்து நிற்க அனுமதியளிப்பது குறித் துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
"சீன நீர் மூழ்கிக் கப்பல்களை அனுமதிக்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடம் நேரடியாகக் கோரியி

22 ஆம் பக்கம் பார்க்க

"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# உளவளப் பணியாளரான மகனைக் காணவில்லை

## ஆணைக்குழு முன்பாக தாய் கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ. 4

அருட்தந்தை பிரான்சிஸ் உடன், ஹரித்தாஸ் நிறுவனத்தில் எனது மகன் வேலை செய்தார். 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் பின்னர் எனது மகன் தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என்று தாயார் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார்.

எனது மகன் முல்லைத்தீவில் ஹரித்தாஸ் நிறுவனத்தில் அருட்தந்தையர்களுடன் இணைந்து பணியாற்றினார். போரின் போதும் அங்கு உளவுளப் பணியாளராகப் பணியாற்றினார். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அருட்தந்தையர்களுடன் இணைந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் போது அவர் காணாமற்போய்விட்டார்.

அருட்தந்தை பிரான்சிஸ் உடனா உங்கள் மகன் பணியாற்றினார்? என்று ஆணைக்குழுவினர் கேள்வியெழுப்பினர். அதற்கு தாயார், அருட்தந்தை பிரான்சிஸ்தான் எனது மகனை ஹரித்தாஸ் நிறுவனத்தில் இணைத்தார். அவருடனேயே இருந்தார். போரின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தமை மாத்திரம்தான் தெரியும்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்று இன்று வரை தெரியாது என்று குறிப்பிட்டார். (ற-5)

# இராணுவத்தினர் பிடித்ததாக இதயவீணையில் மகன் பேட்டி

## எங்கு தேடியும் இதுவரை இல்லை என தாய் கண்ணீர்

யாழ்ப்பாணம், நவ. 4

மணலாற்றுச் சண்டைக்குச் சென்ற எனது மகன், இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டிருப்பதாக இதயவீணை வானொலியில் அவனது பேட்டி ஒலிபரப்பானது. ஆனால் இன்று வரையில் எங்கு தேடியும் எனது மகன் கிடைக்கவில்லை என்று தாயார் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தார்.

உப்புடம் 4 ஆம் கட்டடையைச் சேர்ந்த செல்வராணி என்பவரே இவ்வாறு தெரிவித்தார்.

எனது மகன் அமல்ராஜ் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கட்டாய ஆட்சேர்ப்பில் இணைக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி, மணலாற்றில் நடந்த சண்டைக்கு எனது மகன் சென்றார். இதன் பின்னர் அவர் வரவில்லை. இவ்வாறான தொரு நிலையில் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி, இதயவீணை வானொலியில் எனது மகனின் பேட்டி ஒலிபரப்பானது. அதில் இராணுவத்தினரிடம் தான் பத்திரமாக இருப்பதாக குறிப்பிட்டிருந்தான். அப்போது நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தோம். இதன் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து தேடினோம். இராணுவத்தினரிடம் பத்திரமாக இருப்பதால்தான் தேடினோம். ஆனால் இன்று வரையில் கிடைக்கவில்லை. எனது மகன் உயிருடன் இருப்பார் என்றே நம்புகின்றேன் என்று சாட்சியமளித்தார். (ற-5)

**விபத்துகள்**

## சைக்கிள் குறுக்கே வந்ததில் தடம்புரண்டன ஓட்டோ, மோ.சைக்கிள்



இரு வேறு இடங்களில், வீதியின் குறுக்கே திடீரென சைக்கிள்கள் குறுக்கிட்டதால், சடுதியாக நிறுத்த முற்பட்ட ஓட்டோவும் மோட் டார் சைக்கிளும் கட்டுப் பாட்டை இழந்து தடம் புரண்டன. இந்தச் சம்பவங்கள் நேற்றுக் காலை ஏ- 9 வீதியில் நடந்தது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சென்ற மோட்டார் சைக்கிள் கைதடி பிள்ளையார் கோவிலை அண்மித்த போது திடீரென சைக்கிள் குறுக்கே சென்ற தால் மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்ட வேளையில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டார். கிளிநொச்சியைச் சேர்ந்த பாஸ்கரன் விக்னேஸ்வரன் (வயது - 42) என்பவரே அதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை நுணாவில் மத்தி வைரவர் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் வேகமாகச் சென்ற ஓட்டோ வியாபாரத்துக்காக மீன் ஏற்றிச் சென்ற சைக்கிள் குறுக்கிட்டதால், சடுதியாக நிறுத்தப்பட்ட ஓட்டோ தடம்புரண்டு பலத்த சேதமடைந்தது. அதில் எவருக்கும் காயமேற்படவில்லை. (ற-9)

மினுவங்கொடை, நிட்டம்புவ

## விபத்துகளில் இருவர் சாவு; 40 பேர் காயம்



மினுவங்கொடை மெடேமுல்ல மற்றும் நிட்டம்புவ தங்ஓவிட்ட பகுதிகளில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 40 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். மினுவங்கொடை, மெடே முல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2 மணியளவில் காரொன்று வீதியை விட்டு விலகி மின்கம்பமொன்றுடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்துள்ளனர். கவலைக்கிடமான நிலையிலுள்ள ஒருவர் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

அதேவேளை, நிட்டம்புவ, தங் ஓவிட்ட, கம்புருகல்ல பகுதியில் நேற்று காலை 6.55 மணியளவில் மற்றுமொருவிபத்துஇடம்பெற்றுள்ளது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் ஒன்றோடு ஒன்று மோதியதில் இந்த விபத்து சம்ப வித்துள்ளது என்று பொலி ஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்தை அடுத்து தனியார் பஸ்ஸும் காரொன்றும் குறித்த பஸ்களில் மோதியுள்ளன. விபத்தில் காயமடைந்த 40க்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் வறக்காபொல மற்றும் வத்து பிட்டிவல வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்ற காணாமற் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளித்தோர்களில் சிலர்













பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்


சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 18 செவ்வாய் (04.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 343

# லயன் வாழ்க்கைக்கு முடிவு கட்டும் காலம் வந்துவிட்டது

## மலையக மக்களுக்கு தனித்தனி வீடு அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, நவம்பர் 04

**மலையக மக்களின் லயன் வாழ்க்கைக்கு முடிவுகட்டவேண்டிய காலம் வந்துவிட்டது என நேற்றுச் சபையில் வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து மலையக மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பான இடங்களில் தனித்தனி வீடு களைக் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தது.**



நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மண்சரிவு இடரில் பெரும் துன்பத்தைச் சந்தித்த மீரிய பெத்த மக்கள் தமது துன் பத்தைத் தாங்கிக்கொண்டு எம்மை வரவேற்றனர். அவர் களின் துயரத்தில் நாம் பங் கெடுக்கின்றோம். மண்ணில் புதையுண்ட சடலங்கள் மீட்கப் பட வேண்டும். தற்போதைய

(22ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிக்கின்றது பாரிசவாதம் புகை, குடியைக் கைவிடுங்கள்

### எச்சரிக்கின்றது மருத்துவர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 4

சகல வயதினரையும் தாக் கக்கூடிய பாரிசவாத நோய் இலங்கையில் அதிகரித்து வரு கின்றது. ஆனால் அது தொடர் பான விழிப்புணர்வு குறைவா கவுள்ளது என்று கூறியுள்ள யாழ். மருத்துவர் சங்கம் அதி லிருந்து விடுபடப் புகைத்தல், மது அருந்துதல் என்பனவற் றைக் கைவிடுமாறு கோரியுள் ளது.

இந்த நோய் தொர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு யாழ்.போதனா வைத் தியசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வருடாந் தம் 25 ஆயிரம் பேருக்குப் பாரிச வாத நோய் ஏற்படுகின் றது. இந்த எண்ணிக்கை வரு

(22ஆம் பக்கம் பார்க்க)

## நம் நாட்டில் தேர்தல் திகதியை தீர்மானிப்பது ஜோதிடர்களே

கொழும்பு, நவ. 4

தேர்தல் இடம்பெறும் திகதியை தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானிப்பதற்குப் பதிலாக சோதிடர்களே தீர்மானிக்கின் றனர் என எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல திணைக்களங்களுக்கான செலவின ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர், மேலும் தெரி வித்தவை வருமாறு:-

தேர்தலொன்றை நடத்து வது தொடர்பாக ஜனாதிபதி தீர்மானிக்க முடியும். அதே வேளை, தேர்தல் ஆணையா ளருக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். ஆனால், இன்று தேர்தல் திகதியை சோ திடர்களே தீர்மானிக்கின்றனர். அரச ஊழியர்கள் சட்டத்தை மதிக்கவேண்டும். பொலிஸார் சட்டத்தைப் பாதுகாக்கவேண்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குப் பாடசாலைகளும் பதுளைக்கு உதவவேண்டும்

### மாகாணக் கல்வி அமைச்சர் கோரிக்கை

கிளிநொச்சி,நவ. 4

பதுளை மாவட்டத்தில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும், மாணவர்க ளுக்கும் வடக்கு மாகாணப் பாடசாலைகள் அனைத்தும் இயன்றளவு நிதியுதவி வழங்க வேண்டும் என வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா வேண்டுகோள் விடுத் துள்ளார்.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர் களுக்கான பாராட்டு விழாவில் முதன்மை விருந்தினராக நேற் றுக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

பதுளையில் மண்சரிவி

(22ஆம் பக்கம் பார்க்க)



## உரிய மரியாதை அளிப்போருக்கே தேசியத் தேர்தலில் மு.கா. ஆதரவு

கொழும்பு, நவ. 4

இனிமேல் தமது கட்சியைப் பொறுத்தமட்டில் பதவிகள் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கமாட்டாது. பதவிகளை நம்பியிருந்தால் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக் கான தீர்வுகளைக் காண முடி யாது. எந்தவொரு தரப்பாலும் முஸ்லிம் காங்கிரஸின் வாக் குப்பலம் பெறுமானமுள்ளவை யாக கணக்கில் எடுக்கப்படு வதைப் பொறுத்தே தேர்தல் தொடர்பில் தீர்மானம் மேற் கொள்ளப்படும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொத்துவில், பசறிச்சேனை யில் பத்ரியா பள்ளிவாசலுக் கான அடிக்கல் நடும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பாடசாலையில் 7 வருடம் இருந்தால் இடமாற்றம் உறுதி

யாழ்ப்பாணம், நவ. 4

7 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் பணிபுரி யும் அதிபர், ஆசிரியர்கள் இட மாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற அதிகாரிகள், ஆசி ரியர் தொழிற்சங்கங்கள் மற் றும் வடமாகாண அதிபர் சங் கங்களுடனான சந்திப்பில் மீள வலியுறுத்தப்பட்டுள்ளது.

வருடாந்த அதிபர், ஆசிரி யர் இடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற போதே இது தொடர்பில் வலி யுறுத்தப்பட்டது.

7 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் பணிபுரி யும் அனைத்து அதிபர்களுக் கும் இடமாற்றம் வழங்கப்பட

(22ஆம் பக்கம் பார்க்க)

## நானாட்டான் வெள்ளத்தில்



மன்னார், நவ. 4

கடும் மழை காரணமாக மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்

(22ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி-கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

அச்சுவேலி, நவ.4

அச்சுவேலி - கொழும்பு பஸ் சேவையை அச்சுவேலி பஸ் நிலையத்தில் நடைபெற்ற வைபவத்தில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையின் முகாமையாளர் என்.கந்த சாமி ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப வைபவத்தில் அச்சு வேலி பொலிஸ் நிலையப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு நூலகங்களுக்கு இந்தியா உதவி

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கில் வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தினால் ஒரு தொகுதி நூல்கள் வடக்கு மாகாண சபையிடம் நேற்று கையளிக்கப் பட்டன. வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங் களிலும் உள்ள நூலகங்களுக்கும் பகிர்ந்த ளிக்கும் வகையில் ஆயிரத்து 700 நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் எஸ்.தட்சணா மூர்த்தியால் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரனிடம் கடந்த மாதம் 29 ஆம் திகதி கையளிக்கப்பட்ட நூல்கள் நேற்று நூலகங் களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. யாழ். பொது நூலகத்துக்கான நூல்களை முதலமைச்சரும் பிரதித்தூதுவரும் இணைந்து வழங்கினர். (த-14)

## போதனா வைத்தியசாலையில் கன்ரீன் அமைப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், நவ. 4

சுகாதார அமைச்சு மற்றும் மத்திய பொறியியல் கட்டட நிறு வனத்தின் தாமதம் காரண மாக யாழ்.போதனா வைத்திய சாலையில் சிற்றுண்டிச்சாலை அமைத்துக் கொடுப்பதில் தாம தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

வைத்தியசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலை உரிய வசதி களுடன் இன்மையால் அத னைத் தற்காலிகமாக முன் னர் கண் விடுதி இயங்கிய பிரி வுக்கு மாற்றி இயங்க வைப்ப தோடு சிற்றுண்டிச்சாலைக் கென தனியான கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பது என் றும் தீர்மானிக்கப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறைச்சாலைப் பாடசாலையில் 16 பேர் இம்முறை சா/த பரீட்சைக்கு

கொழும்பு, நவ.4

வட்டரெக்கவில் அமைந்துள்ள சிறைச்சாலைகள் நல் லொழுக்கப் பாடசாலையில் கல்வி பயிலும் சிறைக் கைதிகள் 16 பேர் இம்முறை இடம்பெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

சிறைச்சாலைகள் சார்ந்த பாடசாலை ஒன்றில் இருந்து சிறைக் கைதிகள் தரப்பு ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவது இதுவே முதற் தடவையாகும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரான துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

பெண்கள் மீதான வன்புணர்வுகள், கொள்ளையடிப்புக்கள், களவுகள், போதைப் பொருள் விற்பனை உள்ளிட்ட பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 18-30வயதுக்கும் இடையிலான இளம் சிறைக் கைதிகள் தரப்பே மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது ஒரு வருட காலமாக கல்வி அமைச்சின் கீழ் நடத்தப்படும் இந்த நல்லொழுக்கப் பாடசாலையில் 100 சிறைக் கைதிகள் வரையில் 9.10.11ஆகிய தரங்களில் கல்வி பயின்று வருகின்றனர்.

அதிபர் ஒருவர் உள்ளடங்கலாக 7ஆசிரியர்கள் இங்கு கற்பித்தல்செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். (வ-22)

## தாவர உற்பத்தி மற்றும் விற்பனை கண்காட்சி

தாவர உற்பத்தி மற்றும் விற்பனைக் கண்காட்சி ஒன்றை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்துவதற்கு வடமாகாண விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தாவர உற்பத்தி மற்றும் விற்பனைக் கண்காட்சியை நாளை தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சி விற்பனைக் கூடத்தில் பயன்தரும் மரங்கள், பழமரக் கன்றுகள், நாற்றுக்கள் போன்றவைவிற்பனை செய்யப்படவுள்ளன. மக்கள் பயன்தரும் தாவரங்களை நடுகை செய்வதன் மூலம் அதிக பயனைப் பெற முடியும். (வ-17-14)

---


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 06 . 10 . 1921



உதிர்வு 05 . 10 . 2014

திருமதி
## சொர்ணலட்சுமி தாமோதரம்பிள்ளை

அன்புடனே எமைப்பெற்று வளர்த்து
ஆதரித்துத் தினம் பேணிக்காத்து
இன்புடனே நாம் வாழ என்றென்றும்
ஏற்ற வழிகள்பல சொல்லி வழிகாட்டிக்
காப்பாற்றி வளர்த்தெடுத்து வாழ்வுதந்து
காசினியை விட்டகன்ற எம்தெய்வம்
எம் தாயே! தினம் தினமும் உங்கள் நினைவு
எமது நெஞ்சில் அனுதினமும் நிறைந்திருக்கும்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறித் தேற்றியோருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(C/17285)(7.6.3)



## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பெணார்ட் சின்னையா

(முன்னாள் புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்)



யாழ். சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பெணார்ட் சின்னையா 27.10.2014 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ராசக்கோண்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி ஆன் பொளஸ்சம் (மலர்-ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், யஸ்மின், டன்ஸ்ரன் (இலங்கை), றொபின்ஸ், றெறன்ஸ், றமேஷ், யதீஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அரசரட்ணம், சரஸ்வதி, விஜயலஷ்மி, பரஞ்சோதி, பஞ்சாச்சரம், பொன்னுசாமி, உமாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், றஞ்சன், சிவாஜினி (இலங்கை), பவானி, வசந்தி, மீரா, தர்ஷனி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிற்றம்பலம், பொன்னம்பலம், பூமணி, பரமேஸ்வரி, சோதி, விஜயலட்சுமி, ராணி-மரியநாயகம், வெண்டர்கோன்- ஜோய்ஸ், வின்சர்கோன் - பிளோமினா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மார்க், சங்கீதா, டிலான், றோஷல், அன்றியா, எரிக்கா, மத்தியு, மறீயோ, நிவேதா, நவீனா, சாஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 08.11.2014 சனிக்கிழமை மு.ப. 11.00 - ந.ப. 12.00 மணிவரை Christ the King cemetery, 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8 Canadaவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. : 245 9239
Canada - 0019054721652 (53719)(7.6.3) தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மாரிமுத்து

(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)



வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாரிமுத்து 02.11. 2014 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்மணி (பொன்னார் ரீச்சர்-கனடா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான சிவயோகம், சிவபாக்கியம், சண்முகம், கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வடிவேல் (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், குணவதனியின் (கனடா) அன்பு மாமனும், வினோதனின் (கனடா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற வர்களான சிவசுப்பிரமணியம், சபாபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.11.2014) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலோலை வீதி,
வட்டுத்தென்மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி/17538)(4.6.3)

தகவல்: மருமக்கள்.



## நினைவலைகள்

26ஆம் ஆண்டு 2ஆம் ஆண்டு

மண்ணில் 22.02.1912
விண்ணில் 05.11.1988



மண்ணில் 26.02.1924
விண்ணில் 05.11.2012

அமரர்
**பேதுறுப்பிள்ளை ஜேம்ஸ் அமிர்தநாயகம்**
[ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி]

திருமதி
**அலெக்சாந்திரா அமிர்தநாயகம்**
[ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்]

"ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம்
புகுந்துள்ளேன் என்னை கைவிட்டு விடாதீர்"

வாழும் காலத்தில் மனவுறுதி, தாழ்ச்சி, எளிமை
இறைபக்தி ஆகிய பண்புகளை வெளிப்படுத்தி
கல்விச் சுடரை மாணவர்களில் ஏற்றி
அன்பு வழியைக் காண்பித்து இன்று இறைபதம்
வாழும் எம் பெற்றோரை, ஆசான்களை
என்றும் மறவோம் எம் வாழ்வில்

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலிகள் நாளை (05.11.2014) புதன்கிழமை யாழ்.அடைக்கல அன்னை ஆலயம் (OLR) காலை 6.00 மணிக்கும், யாழ். குழந்தை யேசு ஆலயம் (ஆச்சிரமம்) காலை 6.00மணிக்கும், பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயம் மாலை 5.00 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பாசமுடன் நினைவு கூரும்

யாழ்ப்பாணம். பிள்ளைகள், உறவுகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## செல்லத்துரை கணநாதன்

தோற்றம் 11 . 07 . 1950
மறைவு 05 . 10 . 2014

திதி: பூர்வபக்க துவாதசி
04.11.2014

உம் தந்தை தன் நூறாவது பிறந்த நாளுக்கு
உம்மை அழைத்துச் சென்றாரோ
நீர் அங்கே அவர் பிறந்த நாளுக்கு
சென்று விட்டீர்
இங்கே உம் உறவுகள் தவிக்கின்றன
உமக்காக

"தர்மகிரி,"
அராலி கிழக்கு,
அராலி. (53599)(4.3.6)

குடும்பத்தினர்.

## மருத்துவமனை விடுதிக்கு ரி.வி. அன்பளிப்பு

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை நிர்வாகத்தினரின் கோரிக்கையின் பேரில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டி.வி.டி. பிளேயர் என்பவற்றை மருத்துவமனை சிறுவர் விடுதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.
இந்த நிகழ்வு கடந்தமாதம் 29 ஆம் திகதி சிறுவர் விடுதியில் இடம்பெற்றது.
அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ். கிளை முகாமையாளரால் இவை மருத்துவமனை பதில் மருத்துவ அத்தியட்சகர், மருத்துவ கலாநிதி திவாகர் மற்றும் சிறுவர் விடுதியின் பொறுப்பு மருத்துவர் மருத்துவ கலாநிதி றஜீவன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.
இதன்மூலம் சிறுவர்களுக்கு பயனுள்ள நிகழ்ச்சிகள் உடனடியாகவே காண்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (வ-36)

## இந்து மயானத்துக்கு சுற்றுமதில் அமைப்பது குறித்து கோரிக்கை

அளவெட்டி, நவ.4
மல்லாகம், நரியிட்டான் இந்து மயானத்துக்குச் சுற்று மதில் அமைப்பது தொடர்பாக கோரிக்கை கடிதங்கள் மல்லாகம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் வலி. வடக்கு பிரதேச செயலகம், வலி. வடக்கு பிரதேச சபை, வடமாகாண சபை என்பவற்றுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
ஏற்கனவே மயானத்தில் மேற்குப் பக்கம் 18 அடி உயர சுவர் அமைக்கப்பட்டுள்ளதால் மேற்குப்புறமாக குடியிருக்கும் மக்கள் சிரமங்களின்றி வாழ்வது போல், சுடலையின் வடக்கு தெற்கு பகுதிகளுக்கு ஏற்கனவே 6 அடி உயரத்துக்கு கட்டப்பட்டுள்ள சுவர்களை 18 அடி உயரமாக அமைத்துத்தர வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.
வடக்கு - தெற்கு பகுதிகளில் முன்பள்ளி, சனசமூக நிலையம் மற்றும் குடியிருப்புக்களும் அமைந்துள்ளதால் மயானத்தில் எரிக்கப்படும் உடல்களிலிருந்து எழும் புகை, நாற்றம் என்பன அந்தப் பகுதி வாழ் மக்களின் குடியிருப்புக்கள் ஊடாக வெளியே செல்வதால் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.
இதனால் சூழல் மாசடைகின்றது. மேற்குப்புற மதில் போன்று 18 அடி உயரத்துக்கு சுவர் அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மல்லாகம் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கம் மேற் குறித்தவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-36)

## குருதிக்கொடை நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ.4
பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய கல்வாரி ஒன்றிய அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட குருதிக் கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.
யாழ். போதனா மருத்துவமனையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் குருதிக் கொடையாளிகளிடமிருந்து இரத்தத்தை சேகரித்தனர். வருடாந்தம் இடம்பெறும் இந்த இரத்ததான நிகழ்வில் நேற்றுமுன்தினம் 60 இற்கும் மேற்பட்டோர் குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக் கது. (வ-135)

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர்
உயர்திரு.செ.சேதுராஜா
அவர்களின்
தன்னலமற்ற சேவைக்கு மதிப்பளித்துக் கௌரவிக்கும் வண்ணம்
கல்லூரிச் சமூகத்தினர் மற்றும் பிரதேச மக்கள்
ஒன்றிணைந்தெடுக்கும்
மணிவிழா
காலம் : 2014.11.06, வியாழக்கிழமை மு.ப.9.00 மணி
இடம் : கல்லூரிக் கலையரங்கு


அதிபர் அவர்களின் அபிமானிகள்,
கல்லூரியின் பழைய மாணவர்கள்,
பெற்றோர், நலன் விரும்பிகள்
அனைவரையும் இந்நிகழ்வில்
கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்!
மணிவிழா ஏற்பாட்டுக் குழுவினர்

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.4
பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் எழுதிய 'வட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும்' என்ற நூல் வெளியீடு கைலாசபதி கலையரங்கில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணமும்-
சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் விஞ்ஞான பீட பீடாதிபதி குமார வேலும் கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதனும் கலந்து கொள்வர். (வ-ரி)

## சமயதீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சைவ சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலையில் சபை மண்ட பத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று சபைச்செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.
பாடசாலைகள் தத்தமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சைவ சமய தீட்சை வழங்க விரும்பின் சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கலைஞர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.4
கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக வடக்கு மாகாண கலாசார, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக வட மாகாண கல்வி, பண்பாட்டுத் துறை, விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித் தார்.
வவுனியாவில் இடம்பெற்ற கலைஞர்களுக்கான வடக்கு மாகாண முதலமைச்சர் விருது வழங்கும் நிகழ்வில் கருத்துரை வழங்கும் போது ஐம்பது கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டுத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஒவ் வொரு மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐம்பது கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நட்வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தத் திட்டம் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (வ-7)

KIDS PARK ELOCUTION CLASS
Kids Park Pre School & Day Care Campus சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
528, Palaly Road, Thirunelvely.
"English Throught Feelings" உணர்வுகளூடான ஆங்கிலம்
ELOCUTION CLASS புதிய பிரிவுகள் ஆரம்பம் - 23.11.2014 காலை 9.00 மணி
- தங்கள் சிறார்களின் சிறப்பான எதிர்காலத்திற்கு ஆங்கில மொழித் தேர்ச்சியை வழங்கும் அரிய சந்தர்ப்பம்!
- இங்கிலாந்து நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி, பரீட்சைகள் Colombo, CALSDA நிறுவன வழிகாட்டலில்,
  * 6 வயதிற்குக் கீழ் 3+, 4+ ஆரம்பக்கல்வி தரம் I - Spoken English & Speech and Drama
  * 8 வயதிற்குக் கீழ் ஆரம்பக்கல்வி தரம் 2, தரம் 3 - Spoken English & Written English
சனி, ஞாயிறு காலை 8.30 - 10.30 வரை விசேட நிபுணத்துவம் வாய்ந்த ஆங்கில விரிவுரையாளர்களினால்... ஆங்கிலத்தை மகிழ்ச்சிகரமான ஆடல், பாடல், பேச்சு உச்சரிப்பு, எழுத்து, ஆக்கவேலை, வர்ணம் தீட்டல், நாடக ஆற்றுகை விளையாட்டு (விசேட விளையாட்டு முற்றத்தில்)
- பொருத்தமான பெற்றோர்களுக்கான வழிகாட்டல், வழிகாட்டி நூல்கள் உபகரணங்கள் வழங்குதல்.
- சிறார்களுக்குத் தனித்தனிக் கவனிப்பு, விசேட வழிகாட்டல், ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட மாணவர்கள்! மாதாந்தம் மாணவர் முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடல்...
கடந்த பரீட்சையில் 98 வீதமானோர் அதிசிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் மாபெரும் கலை நிகழ்வும் "English Night" எமது மண்ணில் நிகழவுள்ளது.
தொடர்புகளுக்கு : 528, பலாலி வீதி, திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
தொலைபேசி இல. 021 222 2106





8 வயதுக்குக் கீழ்ப் பிரிவில் அதிசிறந்த பெறுபேற்றை தேசிய ரீதியில் பெற்று பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பரிசு பெறும் முதற்தொகுதி சிறார்கள்.
(53760)(7.6.3)

அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிறார் கல்விப் புதிய பிரயோகங்கள் என்ற சர்வதேச கருத்தரங்கில் பங்கு பற்றிய நிபுணத்துவ ஆலோசகர்
பாலசுப்பிரமணியம் தனபாலன்
B.A.(Cey), PGDE (Merit)
M.Phil in Pre School Education,
Dip.in.Psychology 1st Class,
Cert.in.Vocational Guidance (Singapore)
Reading Ph.D.University of Jaffna.


சிறார்களுக்கான விசேட ஆங்கில முகாமை நெறிப்படுத்தும் பாடநெறி இணைப்பாளர் சிவசுப்பிரமணியம் முகுந்தன் ஆங்கில விரிவுரையாளர்
B.A.PGDE, M.Ed.

சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்
1976 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின்
சேவையில் இணைந்து 04.11.2014 இல்
ஓய்வுபெறும் கிளை முகாமையாளர்
தியாகராஜா
சிவகுமாரன்
அவர்களை சங்கானை மக்கள் வங்கி ஊழியர்கள்
சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர் தனது 38 வருட வங்கிச் சேவையில்
காங்கேசன்துறை, கன்னாதிட்டி, சங்கானை
மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளராகப்
பணியாற்றி, வங்கி வாடிக்கையாளரின்
நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுள்ளார்.
இவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக
வாழ்வதற்கு இறைவன் துணை புரிவார் என
வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

Best Wishes
வாழ்த்துபவர்கள் :
மக்கள் வங்கி
புதிய முகாமையாளரும், வங்கி ஊழியர்களும்
(C/53757)(5.6.3)

# வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சங்கமே இலங்கையில் மிகப் பெரிய தொழிற்சங்கம்

யாழ்ப்பாணம், நவ.4
இலங்கையிலேயே அதிகளவான உத்தியோகத்தர்களைக் கொண்ட தொழிற்சங்கமாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் உள்ளது. அதேபோன்று தென்னிலங்கையில் அரச உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் முடிந்தளவு தாய்ச் சங்கத்தின் ஊடாக எமது சங்கத்தக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது என்று யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் செந்தூரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான மாநாடு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் இருந்து தான் தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தென்னிலங்கையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், அந்த அரசுகளுடன் பேச்சு நடத்திச் சட்டதிட்டங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான நலன்கள் தொழிற் சங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

தொழிற்சங்கத்தின் ஆதரவு இல்லாமல் எந்த நடவடிக்கைகளும் சங்கங்களால் மேற்கொள்ளப்பட முடியாத நிலையில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தொழிற்சங்கம் சங்கத்துக்குரிய பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதற்குத் தொழிற்சங்கத்தில் அதிகளவு உத்தியோகத்தர்கள் இருக்கின்றமை காரணமாக அமைந்துள்ளது - என்றார்.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கை விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான ஜெகத் குமார் தெரிவிக்கும்போது,

கடந்த காலங்களில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இருந்தபோது அடிப்படை வசதிகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உத்தியோகத்தர்கள் இருந்துள்ளனர். தற்போது 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமையில் இருக்கும்போது அரச உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் எந்த ஒரு அதிகார சபையும் திணைக்களமாக மாற்றப்படவில்லை. ஆனால் சமுர்த்தி அதிகார சபை திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி திட்டப் பணிப்பாளர் மகேஸ்வரன், பிரதிப் பணிப்பாளர் ரகுநாதன் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர். (த-14)

## தாக்குதலில் ஒருவர் காயம்

வலி.வடக்கு, நவ. 4
ஆலயத்தில் இடம்பெற்ற பிணக்கைத் தொடர்ந்து ஒருவர் தும்புத் தடியினால் தாக்கப்பட்டுத் தலையில் காயமுற்ற நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகன் ஆலயத்தில் இரவு இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து ஆலயத்துக்கு வெளியால் வந்து நின்று அங்கு இடம்பெற்ற நிகழ்வைப் பற்றிச் சிலர் கதைத்துக் கொண்டு நின்றதாகவும், அந்தவேளை ஒருவர் அருகில் உள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் இருந்த தும்புத் தடியை எடுத்து வந்து தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் அமிர்தலிங்கம் (வயது-41) என்பவர் தலையில் காயத்துடன் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-86)

## மன்னாரில் நிவாரணம் மும்முரமாக சேகரிப்பு



மன்னார், நவ. 4
கொஸ்லந்தை நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் சேகரிக்கும் பணி மன்னார் பகுதியில் மும்முரமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மேற்படி இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உலர் உணவுப் பொருள்கள், உடை வகைகள்,மற்றும் பணம் ஆகியவை மன்னார் மக்களிடமும்,வர்த்தகர்களிடமும் கடந்த சனிக்கிழமை முதல் வடமாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன் தலைமையில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிவாரணம் சேகரிக்கும் பணி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது. சேகரிக்கப்படும் பொருள்கள் பொதி செய்யப்பட்டுநாளை மறுதினம் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் மன்னாரில் இருந்து செல்லும் குழுவினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.

மன்னார் மக்களும், வர்த்தகர்களும் போதிய அளவு ஆதரவையும், உதவிகளையும் பணமாகவும்,பொருளாகவும் வழங்கி வருவதாக நகர சபை உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ் மேலும் தெரிவித்தார். (த-56)

## மாந்தையில் வறட்சியால் வாடிய 750 குடும்பங்களுக்கு நிவாரணம்

மன்னார், நவ. 4
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 750 குடும்பங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சு இலகு வேலைத் திட்டத்தின் கீழ் 45 லட்சம் ரூபாவை வறட்சி நிவாரணமாக வழங்கியுள்ளது. இந்தப் பணம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் போதியளவு பருவமழை பெய்யாமையால் ஏற்பட்ட வறட்சிகாரணமாகவிவசாயத்தையே நம்பி வாழ்ந்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளானதுடன், அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுத் தருமாறு மாந்தை கிழக்குப் பிரதேச செயலரிடம் கோரியி ருந்தன.

விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதேச செயலர் இடர் முகாமைத்துவ அமைச்சருடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து எடுத்து விளக்கியதையடுத்து அமைச்சர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 45 லட்சம் ரூபாவை வறட்சி நிவாரணமாக வழங்கியுள்ளார்.

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாண்டியன் குளம், கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம், சிராட்டி குளம், மூன்று முறிப்பு, விநாயகர் புரம், பூவரசங்குளம், கரும் புலியான், வன்னி விளாங்குளம், நட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலி நகர் ஆகிய 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வசிக்கும் 750 குடும்பங்களுக்கு இலகு வேலைத்திட்டத்தின் கீழ் தலா ஆறாயிரம் ரூபா வீதம் பகிர்ந்து வழங்கப் பட்டுள்ளது. இந்தப் பணம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (த-115)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்றுசெவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளரும் குறித்த பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி நாக ரஞ்சினி ஐங்கரனும் கௌரவ விருந்தினராக சுன்னாகம் மயிலணி வித்தியாலய அதிபர் திருமதி றி, தனஞ்செயனும் கலந்து கொள்வர். (வ)


## டீசல் கார் விற்பனை

நல்ல நிலைமையில் உள்ள 31SRI 3006 Morris Ford கார் விற்பனைக்கு உள்ளது.
விவரங்களுக்கு:
12/1, இராசதுரை றோட், வயிரவர்புளியங்குளம், வவுனியா.
024 222 0118 (53724) (7.6.3)



## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## விற்பனைக்கு

எமது சங்கத்தில் பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உள்ளன. தேவைப்படுவோர் சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்வதோடு, இப் பொருள்களைப் பார்வையிட்டு இதற்கான கூறுவிலையை 15.11.2014 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

01.உடைந்த இரும்புக்கதிரைகள்
02.பழைய இரும்புகள்
03.பாவித்த வாகன ரயர்கள்
04.பாவித்த வாகன பற்றரிகள்
05.வெற்றுப்போத்தல்கள்
06.பழைய திராந்திகள்

(சி/17539)(4.6.3) தலைவர்.



## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கடை வாடகைக்கு

எமது சங்கத்திற்குச் சொந்தமான பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள களஞ்சியப் பாவனைக்கும் வியாபாரத்திற்கும் ஏற்றதுமான கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். வாடகைக்குப் பெற விரும்புபவர்கள் தங்களால் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகையையும் வாடகையையும் குறிப்பிட்டு காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விண்ணப்பங்கள் யாவும் சங்க நெறியாளர் குழுவில் பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.
கடையின் நீளம் - 44 அடி X அகலம் 9.75 அடி

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொலைபேசி இல. 021 222 2148, 021 222 2969,
விண்ணப்ப முடிவுதிகதி : 15.11.2014 தலைவர்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி சின்னம்மா இராசு



பண்பின் சிகரமாய் பாசத்தின்
உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு
வழிகாட்டியாய்
உற்றார், உறவினர் பிள்ளைகளுக்கு
எல்லாம் இனியது செய்து
என்றும் இனியவளாய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
எம் உள்ளங்களில் உங்கள் நினைவு
நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
28.04.1937

மறைவு
13.11.2013

52, கன்னரலேன்,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (53729) (4.6.3)

இ.உதயகுமார் [மகன்-உதயன்]
மருமகள், பேரப்பிள்ளைகள்
தகவல்: ஜனோஜன் [பேரன்- கனடா]


## மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி

* வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் தனியார் வைத்தியத்துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் பயிற்சிநெறி
* பகுதி நேரமாகக் கற்கலாம்
* வயதெல்லை கிடையாது
* A/L பெறுபேறு காணாதவர்களும் கற்கலாம்

LAVA HOSPITALS
120,Temple Road,Jaffna.
077 316 4617 (53728)(5.6.3)



## தேவை

விநியோக முகவர் நிலையம் ஒன்றுக்கு பெண் கணினி இயக்குநர் தேவை. அத்துடன் துவிச்சக்கர வண்டி ஊடான லொத்தர் விற்பனையாளர் தேவை. (53717) (7.6.3) தொடர்பு : 021 221 9222



## இடமாற்றம்

டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி
(இலுப்பையடிச் சந்தி)
உடைந்த பிளாஸ்ரிக் ஒட்டுதல் பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
தொடர்பு : 077 592 5088/021 222 8680


## மரண அறிவித்தல்

## கந்தர் செல்வம்



குட்செட் வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செல்வம் நேற்று (03.11.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர்-சின்னாச்சி (அருமை) தம்பதியரின் பாசமிகு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், சாரதாதேவி, தர்சிகா (பட்டு), சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), ஜோதீஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வம், சதாசிவம், மதிவதனி (பிரான்ஸ்), பிறேமலதா (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், சுதர்சன் (இத்தாலி), பிரகலாதன் (இத்தாலி), சுதர்ஜினி, யசோதரா, டனுஜா (பிரான்ஸ்), சாதுஜா (பிரான்ஸ்), விதுரன் (பிரான்ஸ்), நிராஞ்சலி (இத்தாலி), அக்சஜன் (இத்தாலி), அபிசா (இத்தாலி), நிருஜா (இத்தாலி), துஷ்யந்தன், பிரசாந், துவாரகன், தஜீதரன், றஜனி (இத்தாலி), யாழினி (இத்தாலி), பிரதீபன் (பிரபா) ஆகியோரின் அன்புப் பேரனும், மதீசன் (இத்தாலி), தரணிகா, சரண்ஜன், தனுஷ்கா (இத்தாலி), ஜனார்த்தன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
குட்செட் வீதி, (ஸ்ரேசனடி) கோண்டாவில். (53726) (7.6.3)
077 415 6204

## தீவகத்தில் நெற்செய்கை இம்முறை கடும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.4
தீவுப் பகுதியில் இம்முறை 85 ஹெக்டேயர் நிலப்பரப்பிலேயே விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அநேகமான விவசாயிகள் இந்தமுறை நெற்செய்கையில் ஈடுபடாது தவிர்த்துக் கொண்டனர்.

வேலணை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 50 ஹெக்டேயரிலும், புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 35 ஹெக்ரேடரிலும் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த 85 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயிகர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள அதேவேளை வயல்களில் போதியளவு மழை நீர் இன்றிக் காணப்படுகின்றது. மழை தொடர்ந்து பொய்யாதுவிட்டால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட லாம் என்று பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பெரும் போகத்தின் போது தீவுப் பகுதியில் கூடுதலான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுப் பெரும் அழிவைச் சந்தித்தனர். போதிய மழை பெய்யாமையினால் வயல்களில் நெற்பயிர்கள் தண்ணீர் இன்றிப் பாதிக்கப் பட்டன. அநேகமான வயல் களில் கடும் வறட்சி, வெயி லினால் நெற் பயிர்கள் கருகி நாசமாகின.

இதனால் பெரும் நட்டமடைந்த விவசாயிகள் இந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கையில் அதிக ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
(சு-17)

# 10,833 ஹெக்டேயரில் யாழில் நெற்செய்கை

- மழை தொடர்வதால் பயிர்கள் நல்ல நிலையில்
- பிஜி 406 இன விதை நெல்லே அதிகளவு விதைப்பு
- மேட்டு நில விதைப்புக்கு மழை போதாது என்கிறார்கள் விவசாயிகள்

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்.குடாநாட்டில் இதுவரை 10 ஆயிரத்து 833 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். ஆரம்பத்தில் மழை வீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டாலும் தற்போது குடாநாட்டில் அநேகமான இடங்களில் மழை பரவலாகப் பெய்து வருகின்றது.



இதனால் வயல்களில் நெற்பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுவதாக விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, மேட்டு வயல் நிலங்களில் மழை வெள்ளம் வற்றிக் காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் இரண்டாம் கட்ட அடி உரத்தைப் போட முடியாது சிரமப்படுகின்றனர். தாழ்ந்த நில வயல்களில் வெள்ளம் ஓரளவு காணப்படுவதால் விவசாயிகள் உரம் இடுவதிலும், களை பிடுங்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, மேலும் ஆயிரம் ஹெக்டேயர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் மழையை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். இதற்காக அவர்கள் வயல்களைச் சீர்ப்படுத்தி வருகின்றனர்.

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கமநல சேவை நிலையங்கள் ஊடாக இந்த உர விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்த முறை பெரும்போக நெற்செய்கையில் கூடுதலாகப் பிஜி 406 இன் விதை நெல்லையே பயன்படுத்தி உள்ளனர்.

அதனைவிட ஏரி 362, ஆட்டக்காரி, மொட்டைக்கறுப்பன், பெரிய வெள்ளை போன்ற இனங்களைச் சேர்ந்த விதை நெல்லையும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.
(சு-17)

## காரைநகர் பிரதேச சபையின் தலைவருக்கும், செயலருக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 4
காரைநகர் பிரதேச சபையின் தவிசாளருக்கும், செயலாளருக்கும் இடையிலான பிரச்சினை நீதிமன்றம் சென்றதையடுத்து இருவரையும் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிமன்று, பிரச்சினைகளைச் சட்டப்படி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர மக்களுக்கான சேவைகள் பாதிப்படையக்கூடாது என்று கூறி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணை முறியில் இருவரையும் விடுவித்தது.

தன்னைப் பொல்லால் அடிக்க வந்தார் என்று தலைவருக்கு எதிராகச் செயலாளர் ஊர்காவற்துறைப் பொலிஸில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து அமைதிக் குலைவு என்று பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கின்போதே இருவருக்கும் எச்சரிக்கை செய்த நீதிமன்று, பிணை முறியில் அவர்களை விடுவித்தது. தலைவருக்கு எதிரான வழக்கில் அவர் 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக் கப்பட்டார்.

குறித்த சபையின் செயலாளர் சபைக்குத் தாமதமாக வருகிறார் என்றும் , குறித்த நேரத்துக்கு முன்னரே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிடுகிறார் என்றும், பணியாளர்கள் தலைவருடன் தொடர்புகளைப் பேணுவதைத் தடுக் கிறார் என்றும் தலைவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஷ் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.
(சு-4)



காரைநகரில் மழைவேண்டி விவசாயிகளால் கொடும்பாவி எரிக்கப்பட்டது. குடாநாட்டில் பரவலாக மழை பெய்து வருகின்றபோதிலும் காரைநகர் பிரதேசத்தில் கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக மழை பெய்யவில்லை. இதனால் வயல் நிலங்களில் நெற்பயிர்கள் கருகிவருவதுடன் அடிப்படைத் தேவைகளுக்கோ குடிப்பதற்கோ நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் அந்தரிக்கின்றனர். இதனால் ஊர் மக்கள் கூடி கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொடும்பாவி கட்டி ஊர் வீதிகளில் இழுத்துச் சென்று வயல்கரையில் எரியூட்டினர்.
(சு-250)

## இராணுவத்தால் பயன்படுத்தப்படும் கட்டடங்களின் விவரம் திரட்டல்

வடக்கு மாகாண சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் படையினரால் பயன்படுத்தப் படும் அரச மற்றும் தனியார் காணிகள், கட்டடங்களின் விவரங்கள் மாகாணசபை அவைத்தலைவர் செயலகத்தினால் ஆவணப்படுத்தலுக்காகத் திரட்டப்படுகின்றன.

மாகாண சபை எல்லைக்குட்பட்ட அனைத்து உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் படையினரால் பயன்படுத்தப்பட்டும் அரச மற்றும் தனியார் காணி மற்றும் கட்டடங்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் சகல உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

காணி உரிமையாளர் பெயர், காணி அமைவிடம், முகவரி, பிரதேச செயலர்பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, காணியின் பரப்பளவு ஆகிய விடயங்களுடன் ஏனைய பொருத்தமான விடயங்களையும் அனுப்பிவைக்குமாறு அறிவித்துள்ளார். (சு-9)

## விதைகளை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய நிலையம் நீர்வேலியில்



யாழ்ப்பாணம், நவ.4
யாழ்.மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் பிராந்திய நிலையம் ஒன்று நீர்வேலி, பூதர்மடம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுமார் 27 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தப் பிராந்திய சேவை நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு பிராந்தியப் பொறுப்பதிகாரி அ.ரமணிதரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

**விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ரோகினி நாணயக்கார, கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம், விதை நடுகைப் பொருள்கள் பிரதிப் பணிப்பாளர் ச.சதீஸ்குமார், ஆராய்ச்சி நிலையப் பதில் பொறுப்பதிகாரி திருமதி பா.பாலகௌரி, கிளிநொச்சி மாவட்டவிதைஅத்தாட்சிச் சேவை பொறுப்பதிகாரி எஸ்.செல்வக்குமார் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு கட்டத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர்.**

விதை அத்தாட்சிப் படுத்தும் சேவை நிலையத்துக்குத் தனியான கட்டட வசதிகள் இது வரை அமைக்கப்படவில்லை. இந்தச் சேவை நிலையத்தின் பணிகள் யாவும் திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலேயே இடம்பெற்று வந்தன.

தற்போது இந்தக் கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் யாவும் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிராந்திய விதை அத்தாட்சியப்படுத்தும் சேவையின் பொறுப்பதிகாரி ரமணிதரன் தெரிவித்தார். (சு-17)

## சங்கங்களில் விலை போடாமல் வறட்சி நிவாரணப் பொருள்கள்

தென்மராட்சி,நவ.4
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் கட்டணம் குறிப்பிடாமல் வறட்சி நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நிவாரணம் வழங்கும் அட்டையில் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அரிசி, கடலைப் பருப்பு, எண்ணெய் ஆகியவை விநியோகிக்கப்படுகின்றன. வழங்கப்படும் அட்டையில் பொருள்களின் விவரங்கள் எழுதப்படுகின்றபோதிலும் அவற்றின் விலை விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

**வழங்கப்படும் அட்டையில் பொருள்களின் விவரங்கள் எழுதப்படுகின்ற போதிலும் அவற்றின் விலை விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர்.**

**இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது, அண்மையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உருளைக் கிழங்கு வழங்கியபோதும் விலை விவரங்கள் குறிப்பிடப்படவில்லையெனப் பொருத்தமில்லாத பதில் வழங்கப்பட்டது.**

**சங்கங்களில் ஏற்கனவே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அரிசியே வழங்கப்பட்டதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**
(சு-9)

## பொலிஸாரை தகாத சொல்லால் திட்டியவர் கைது

கைது செய்யப்பட்ட நபரை விடுவிக்கக் கோரி பொலிஸ் நிலையத்துக்கு மதுபோதையில் வந்த 26 வயது இளைஞர் பொலிஸாரை தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளார். இந்தச் சம்பவம்கடந்த2ஆம்திகதிஇரவு பளையில் இடம்பெற்றது.

இந்த இளைஞரை கைது செய்த பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு சென்ற போது பரிசோதனையில் ஈடுபட்ட மருத்துவரையும் தூஷண வார்த்தைகளால் ஏசியுள்ளார். **இந்த இளைஞரை நேற்று முன்தினம் பளைப் பொலிஸார் நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றனர்.**
(சு-9)

# வவுனிக்குளம் புனரமைப்பால் 6,060 ஏக்கரில் நெல் விதைப்பு

முல்லைத்தீவு, நவ. 4

வவுனிக்குளம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளமையால் 6ஆயிரத்து 60 ஏக்கர் விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படும் வவுனிக்குளம் கடந்த காலங்களில் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்பட்டதுடன் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்களும் சேதமடைந்திருந்தன. இதனால் இந்தக் குளத்தின் கீழ் உள்ள சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு எந்த விதமான பயிர்ச் செய்கைகளுக்கும் உட்படுத்தப்படாமல் காணப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 600 மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளம் புனரமைப்புக்குத் தெரிவு செய்யப்பட்டு அதன் புனரமைப்புப் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன.

அதாவது அணைக்கட்டு, வான்பகுதி என்பன உயர்த்துதல், நீர் விநியோக வாய்க்கால்கள் புனரமைத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 24 அடி நீர் கொள்ளளவுடையுதாக இருந்த குளத்தின் அணைக்கட்டு வான் பகுதி 25 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

குளத்தின் கீழ் உள்ள 6ஆயிரத்து 60 ஏக்கர் பயிர்செய்கை நிலங்களில் 4ஆயிரம் ஏக்கரில் மட்டுமே இதுவரை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

குளத்தின் அணைக்கட்டு உயர்த்தப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளமையால் குறித்த 6 ஆயிரத்து 60 ஏக்கரிலும் பயிர்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் உள்ள சுமார் 2ஆயிரத்து 100 விவசாயக் குடும்பங்களும் நன்மையடையவுள்ளன என்றும் கூறப்பட்டது. (த-55)

## அதி கூடிய விலைகளில் உர வகைகள் விற்பனை

*விவசாயிகள் விசனம்*

கிளிநொச்சி, நவ. 4

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களில் அதி கூடிய விலைகளில் உர வகைகள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு 5 ஏக்கருக்கான மானிய உர விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு விவசாயிகளும் மேலதிகமாக மேற்கொள்ளும் செய்கைகளுக்குரிய உர வகைகளைத் தனியார் வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கண்டாவளைப் பிரதேசத்தின் கோரக்கன்கட்டு, கிளிநொச்சி, பரந்தன் ஆகிய பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் அதிகூடிய விலைகளில் உரம் விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் அதற்கான சிட்டைகளை வழங்கவோ அல்லது உத்தரவாத விலையான ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யவோ தங்களால் முடியாது என வர்த்தகர்கள் தெரிவித்து வருவதாப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (த-55)

## தமிழ்த் தாய்க்கு மரியாதை வழங்காத சிங்கள மாணவர்

வவுனியா, நவ.4

வடக்கு மாகாண கலை பண்பாட்டுப் பெருவிழாவில் தமிழ்த் தாய் வாழ்த்தின்போதும் அகளங்கன் எழுதிய தமிழ்த்தாய் வணக்கப் பாடல்களின்போதும் விழாவில் கலந்துகொண்ட சிங்களப் பாடசாலை மாணவிகள் எழுந்து நின்று மரியாதை செலுத்தவில்லை என பலராலும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் இடம்பெற்ற வடக்கு மாகாணக் கலை பண்பாட்டுப் பெருவிழாவின் இரண்டாம் நாள் மாலை நேர நிகழ்வில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விழா ஆரம்பமானதும் தமிழ்த் தாய் வாழ்த்தும், நிகழ்வுகளில் அகளங்கனின் தமிழ் தாய் வணக்கப் பாடல்களும் இடம்பெற்றன. இதன்போது தமிழ் மக்களுடன் நிகழ்வைக் கண்டுகளிக்க வந்த இரண்டொரு சிங்களத் தாய்மார்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தியபோதும் நிகழ்வில் தமது பாரம்பரிய நடனத்தை மேடையேற்ற வந்திருந்த சிங்கள மாணவிகள் எழுந்து நிற்காமல் அமர்ந்திருந்து கதைத்துக் கொண்டிருந்தனர் எனக் கூறப்பட்டது. இது குறித்து விழாவில் கலந்து கொண்ட பலரும் விசனம் வெளியிட்டனர். (த-7)

## 1,620 மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர் விநியோகத் திட்டம்

*கிளிநொச்சியில் பணிகள் முன்னெடுப்பு*



கிளிநொச்சி, நவ. 4

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கட்டுமானப்பணிகள் ஆயிரத்து 620 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் உள்ள மக்களுக்கான குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரத்தினபுரம் பகுதியிலும் பரந்தன் குமரபுரம் பகுதியிலும் குடிதண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் தற்போது பிரதான குழாய்கள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுமார் ஆயிரத்து 620 மில்லியன் ரூபா செலவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் முன்னெடுக்கபபட்டு வரும் இந்தத் திட்டத்தின் கீழ் 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 40ஆயிரம் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள முடியும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-55)




*ஓமந்தையிலுள்ள பொதுச்சந்தையில் 'எங்கள் கிராம உழவர் சந்தை' கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் ரிசாத் பதியுதீனால் திறந்துவைக்கப்பட்டது.*

*வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குரிய இந்தச் சந்தை நீண்டகாலமாக இயங்காதிருந்தது. இந்த நிலையில் இது புனரமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சந்தையில் விவசாயிகள் உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்ய முடிவதுடன், மரக்கறிகளை வெளியூர்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த)*

## ஒலுமடுவில் 2,044 ஏக்கரில் நெற் செய்கை

முல்லைத்தீவு, நவ.4

முல்லைத்தீவு ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழ் 2ஆயிரத்து 44 ஏக்கர் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் ஒலுமடு கமநலசேவை நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறு குளங்களின் கீழ் ஆயிரத்து 286 ஏக்கர் நெற்செய்கையும், மானாவாரியாக 758 ஏக்கரும் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

இவ்வாறு காலபோக நெற்செய்கையில் இறுதி விதைப்புத் திகதி கடந்த 30ஆம் திகதி எனவும், கால்நடை கட்டுப்பாட்டுத் திகதி கடந்த 25ஆம் திகதி முதல் 2015பெப்ரவரி 25ஆம் திகதி வரையான காலப்பகுதி எனவும் தீர்மானிக்கப்பட்டு அதன்படி செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், இந்தச் செய்கைகளுக்கான மானிய உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் ஒலுமடு கமநலசேவை நிலையம் தெரிவித்துள்ளது. (த-55)

## பொதுநோக்கு மண்டபம் முழுமையாக புனரமைப்பு



முல்லைத்தீவு, நவ.4

முல்லைத்தீவு மூன்று முறிப்புக் கிராமத்தில் போரினால் சேதமடைந்த பொதுநோக்கு மண்டபம் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மூன்று முறிப்பு கிராமத்தில் கடந்த 2003ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் கடந்த காலப் போரினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. அது மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமலும் இருந்தது.

இதனையடுத்து இப் பகுதி மக்கள் தமது ஆரம்ப சுகாதாரத் தேவைகள், கிராம மட்ட அமைப்புக்களுக்கான கலந்துரையாடல்கள் எனப் பல்வேறு தேவைகளுக்கு ஒன்று கூடக் கூடிய மண்டப வசதிகள் இல்லாததால் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. இதனையடுத்துக் குறித்த மண்டபத்தைப் புனரமைத்து தருமாறு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ஊடாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் நிதியுதவியுடன் 11 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு அதன் வேலைகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன என்றும், மிக விரைவில் அது திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார். (த-55)

## இறங்குதுறை ஒன்றை அமைத்துத் தாருங்கள்

*அன்னை வேளாங்கண்ணி மீனவர் கோரிக்கை*

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி நாச்சிக்குடா அன்னை வேளாங்கண்ணி கிராமத்தில் வாழும் சுமார் 150 இற்கும் மேற்பட்ட கடல் தொழில் குடும்பங்கள் இறங்குதுறையொன்றை அமைத்து தருமாறும் குடியிருப்பு வீதிகளைப் புனரமைத்து தருமாறும் கோரிக்கைவிடுத்துள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள நாச்சிக்குடா அன்னை வேளாங் கண்ணி கிராமத்தில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 1970 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை இந்தக் கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய சிறிய வீதிகள் வரை எதுவுமே இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் இங்குள்ள குடும்பங்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்குச் சாதாரண சைக்கிள்களில் கூடப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படும் வீதிகளைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ள இப் பகுதி மக்கள், தாம் கடல் தொழிலையே வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வரும் நிலையில் தமது பகுதியில் இறங்குதுறை ஒன்றை அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-55)

## ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி வேண்டாம்

### ஜோன் அமரதுங்க கோரிக்கை

கொழும்பு, நவ.5

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டாம் என எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க அரசிடம் கோரியுள்ளார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டுமாயின் பாப்பரசரின் இலங்கைப் பயணத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம்.

பாப்பரசர் இலங்கை வரும் போது ஜனாதிபதி தேர்தல் நடத்துவது கத்தோலிக்க மக்களுக்கும், பாப்பரசருக்கும் இழைக்கும் அநீதியாகும்.

எனவே கத்தோலிக்க மக்கள் பாப்பரசரை சுதந்திரமாக சந்திக்க ஏற்பாடுகள் செய்யும் வகையில் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும்.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட உள்ளதாக பரவலாக பேசப்படுகின்றது. ஜனவரி மாதம் 13ஆம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு வரவுள்ளார். தேர்தல் நடைபெறும் காலத்தைப் போன்றே தேர்தலின் பின்னர் ஒன்று இரண்டு வாரங்களுக்கு சற்று பதற்றமான நிலைமை நீடிக்கும் என்பது அனைத்து மக்களும் அறிந்ததே.

தேர்தல் காலங்களில் ஊரடங்குச் சட்டம், அவசரகால சட்டம் போன்றவை நடைமுறைப்படுத்தப்படும். பாப்பரசரின் வருகையின் போது இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. பாப்பரசரின் இலங்கைப் பயணம் முடிந்து சில வாரங்களின் பின்னர் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோருகின்றேன்" என அவர் தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கை பொலிஸ் சேவை அரசியல் மயமாகியுள்ளது

### குற்றஞ்சாட்டுகின்றார் ரணில்

கொழும்பு, நவ.4

இலங்கையில் பொலிஸ் சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டு உள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுக் குற்றம்சாட்டியுள்ளார். நாட்டை பாதுகாக்க வேண்டியதே பொலிஸாரின் பணி, அரசைப் பாதுகாப்பதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"பொலிஸார் அரசைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்படுவது தெளிவாக தெரிகின்றது. அதேவேளை எதிர்க்கட்சிகள் நிகழ்வுகளைஏற்பாடு செய்யும் போது அவர்கள் நேர்மையாக, பக்கச்சார்பற்ற விதத்தில் செயற்படுவதில்லை.

சமீபத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில்பேரணியொன்றை நடத்தியபோது அதற்குப் பல தடைகள் விதிக்கப்பட்டன. ஆனால் அரச கூட்டங்களுக்கு அவ்வாறான தடைகள் எதுவும் விதிக்கப்படுவதில்லை.

ஜனாதிபதி சமீபத்தில் பல பொலிஸ் அதிகாரிகளை சந்தித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொலிஸ் சேவையை மேலும் அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கை போல் இது தோன்றுகிறது."- என்று தெரிவித்துள்ளார். (ற)



இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரன்கின், கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகாநாயக்க தேரர்களை சந்தித்துள்ளார். நேற்று கண்டிக்குச் சென்ற அவர், முதலில் அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம ஸ்ரீபுத்தரக்கித்த தேரரை சந்தித்தார். இதன் போது தூதுவரிடம் பேசிய புத்தரக்கித்த தேரர், இலங்கை அரசு இன மற்றும் மதங்களை அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை எனக் கூறியுள்ளார். பயங்கரவாதத்தை அடக்கி நாட்டுக்கு சமாதானத்தை கொண்டு வந்தமை தொடர்பில் அமெரிக்காவும் பிரிட்டனும் உண்மையை சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை எனவும் மகாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் தலதா மாளிகைக்கு சென்று வழிப்பாடுகளில் ஈடுபட்ட தூதுவர், பின்னர் மல்வத்தை மகா நாயக்கர் ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்துப் பேசினார்.

## இணைய மோசடி தொடர்பில் 200 முறைப்பாடு

கொழும்பு, நவ.5

இணையதள மோசடி தொடர்பாக ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 200 முறைபாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை கணினி அவசர உதவி பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 2,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தமக்கு கிடைக்கப்பெற்ற முறைபாடுகளில் 100ற்கு 90 வீதமானவை போலி முகப்புத்தக கணக்குகள் தொடர்பானவை என அந்த பிரிவு கூறுகின்றது. (ற)

## நிலத்தின் தன்மை பற்றி அறிவியுங்கள்

கொழும்பு, நவ.4

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் நிலம் உறுதியற்ற தன்மையில் இருக்குமாயின் அது குறித்து தமது அமைப்பினருக்கு அறிவிக்குமாறு தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தம்முடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு புவியியல் ஆய்வு நிபுணர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன், தமது மாவட்ட காரியாலங்களில் உள்ள தமது அமைப்பின் அதிகாரிகளிடமும் அறிவுரைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், பதுளை, நுவரெலியா, மாத்தளை, கேகாலை, கண்டி, ரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அறிவிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பின் விசேட நிபுணர்கள் சிலரும் பதுளை மற்றும் நுவரெலிய மாவட்டங்களில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இயற்கை சீற்றம் காரணமாக 11 ஆயிரத்து 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ற)

## மஹிந்த போட்டியிட்டால் இரத்தக்களரியாகும் நாடு

### அனுரகுமார திஸநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, நவ.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடும் விவகாரம் நாட்டை இரத்தக் களரிக்குள் தள்ளும் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க எச்சரித்துள்ளார்.



நாடு அரசியல் ரீதியாக ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ள அவர் இது நாட்டை பலவீனப்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு எது நல்லது எது கெட்டது என்பதை மதிப்பிடுவதே பொதுமக்கள் என்ற அடிப்படையில் எமது கடமை. ஆனால் ஆளும்கட்சி இந்த நாட்டின் அரசியல் அமைப்பை மதிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ளது. அதனால் நாடாளுமன்றத்தில் அவர்கள் நினைத்தவாறு அரசமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளலாம். ஆனால் அரசு அவ்வாறு செய்ய தயங்குகின்றது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்ற அச்சமே இதற்கு காரணம். எவரும் இந்த நாட்டின் அரசமைப்பை மீறி தேர்தலில் போட்டியிடவோ அல்லது ஜனாதிபதி பதவியில் அமர்வதற்கோ ஜே.வி.பி. அனுமதியளிக்காது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## சில பௌத்த துறவிகளால் மதத்துக்கே அவமானம்

### பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவிப்பு

சில பௌத்த துறவிகளின் நடவடிக்கைகள் பௌத்த மதத்திற்கு அவமானமாக மாறியுள்ளன என்றும் அவர்களின் காவிகள் கூட மாறிவிட்டன எனவும் பிரதமர் டி.எம். ஜயரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சில மதத்தலைவர்கள் தேவையில்லாமல் அரசியலில் ஈடுபடுகின்றனர். அத்துடன் புத்த மதத்தையும் புத்த பகவானையும் அரசியலுடன் சம்பந்தப்படுத்துகின்றனர்.

பௌத்த துறவிகள் ஜனாதிபதியாக வர வேண்டும் என்றும் புத்தரும், பௌத்த மதமும் கோரவில்லை. இது காவி உடைக்கு அவமானமானது.

இலங்கை என்பது பல இன மற்றும் மதங்களை கொண்ட நாடு என்பதோடு அனைத்து மக்களுக்கும் சம உரிமை உள்ளது. சகல சமூகங்களும் ஒன்றிணைய வேண்டும். நாம் ஐக்கியப்பட வேண்டும். நாம் அனைவரும் இலங்கையர்களாக இருக்க வேண்டும். இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்ற அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்திகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்.

அனைத்து சமூகங்களின் ஆதரவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறுவார்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் திணைக்களம் குறித்து கமலேஷ் சர்மா கூறியது சரியே

### தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கூறுகின்றன

கொழும்பு, நவ.4

தேர்தல் திணைக்களம் பற்றிய கமலேஷ் சர்மாவின் கருத்து சரியானதே என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை தேர்தல் திணைக்களம் பூரண சுயாதீனத்தன்மையுடன் இயங்குவதில்லை என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஸ் சர்மா குற்றம் சுமத்தியிருந்தார். அது குறித்தே பெபரல், கபே மற்றும் தேர்தல் கண்காணிப்பிற்கான மனித உரிமை வலையமைப்பு அமைப்பு என்பன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் தேர்தல் பரப்புரைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி நாள் தோறும் பொதுத்துறை ஊழியர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார் என்றும் அவை குற்றம் சுமத்தியுள்ளன.

தாதியர், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். நாள் தோறும் 5000க்கும் மேற்பட்டவர்கள் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும் அதற்கான அடிப்படை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அவை மேலும் குறிப்பிட்டுள்ளன.

"அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, குருணாகலில் தேர்தல் செயற்பாட்டு காரியாலயம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளார். அதற்கு பல அரச அதிகாரிகள் ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்" எனவும் பெபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

காரியாலய திறப்பு விழா நிகழ்வுகளுக்கு இதேவிதமாக அரச அதிகாரிகளை அழைக்க வேறும் தரப்பினருக்கு சந்தர்ப்பம் கிடையாது என்று குறிப்பிட்டுள்ள அவர், இவ்வாறான ஒரு நிலைமை ஆரோக்கியமானதல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முறைமையின் குறைபாடாகவே இதனை நோக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். ஆளும் கட்சியினரின் செயற்பாடுகள் சுயாதீனமான தேர்தலுக்கு வழியமைக்குமா என்பது சந்தேகமே என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்க ஊழியர்கள் மீது தேவையற்ற அழுத்தங்களை பிரயோகிக்கும் நடவடிக்கையானது தெளிவான தேர்தல் சட்ட மீறலாகும் என தேர்தல் கண்காணிப்பிற்கான மனித உரிமை வலையமைப்பு அமைப்பின் சட்ட ஆலோசகர் சமிந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

சுயாதீனமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், பொலிஸார் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் போது சுயாதீனமான தேர்தல்களை எதிர்பார்க்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பு திணைக்களத்தின் நன்மதிப்பு தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். தேர்தலின் நேர்மைத்தன்மை தொடர்பில் பிரச்சினை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ரஜினி முருகன் ஆரம்பம்



சிவகார்த்திகேயன், கீர்த்தி, ராஜ்கிரண் நடிக்கும் ரஜினி முருகன் படப்பிடிப்பு காரைக்குடியில் தொடங்கியது. இதில் தயாரிப்பாளர் திருப்பதி பிரதர்ஸ் சுபாஷ் சந்திரபோஸ், இயக்குநர் லிங்குசாமி, ராஜேஷ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காரைக்குடியில் தொடர்ந்து 40 நாள்கள் படப்பிடிப்பு நடக்கிறது. இரண்டாவது கட்ட படப்பிடிப்பு மதுரையில் 25 நாள்கள் நடக்கிறது. இமான் இசை அமைக்கிறார். வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தை இயக்கிய பொன்ராம் இயக்குகிறார். கிராமிய பின்னணியில் தயாராகும் இந்தப் படத்தில் சிவகார்த்திகேயன் ரஜினி ரசிகராகவும், சூரி, கமல் ரசிகராகவும், ராஜ்கிரண் எம்.ஜி. ஆர்.ரசிகராகவும், லட்சுமிமேனன் விஜய் ரசிகராகவும் நடிப்பதாகக் கூறப்படுகிறது. இது முழு நீள நகைச்சுவைப் படம்.

# கடலுக்கு அடியில் தொலைந்த நகரம்



உலகின் வெளிப்படுத்தப்படாத மர்மங்களுள் ஒன்றாகக் கருதப்படும் அட்லாண்டிஸ் என்ற தொலைந்த நகரம் எங்கே இருந்தது? இப்போது எங்கே இருக்கிறது? இதன் அழிவுக்குக் காரணம் என்ன? போன்ற பல கேள்விகளுக்கு இன்று வரை சரியான பதில் கிடைக்கவில்லை. கிரேக்கத்தில் வாழ்ந்த தத்துவ அறிஞரான பிளேட்டோ தான், முதன் முதலில் அட்லாண்டிஸ் பற்றிக் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக குறிப்பிட்டுள்ளார். அட்லாண்டிஸின் கட்டடக்கலை, பொறியியல் துறை, விழாக்கள் பற்றியும் குறிப்பிட்ட பிளேட்டோ இது கற்பனைக் கதையல்ல என்றும்- இது யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத ஒரு சிறந்த இடமாக விளங்கியது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் மையப் பகுதியில் சுற்றுச் சுவரோடு மூன்று கால்வாய்களை ஊடறுத்து அமைந்திருந்த அதன் தலைநகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அட்லாண்டிஸின் செல்வச் செழிப்புப் பற்றிக் பிளேட்டோ குறிப்பிடுகையில்; வேறு எந்த ராஜ மாளிகையிலும் காண முடியாத அளவிட முடியாத அளப்பரிய செல்வம் அங்கு குவிந்து கிடந்தது எனவும் அதுவே அட்லாண்டிஸின் அழிவுக்கு வழி வகுத்திருக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.


மேலும் அவர் அங்கு வாழ்ந்த மனிதர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், அவர்கள் ஏனைய மனிதர்களோடு ஒப்பிட முடியாத அளவுக்கு அழகாலும் அறிவாலும் செல்வத்தாலும் மேம்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார். பின்னர் ஒரு துயரமான நாளில் ஏற்பட்ட பெரும் சுனாமியால் அட்லாண்டிஸ் முழுவதுமே



கடலால் விழுங்கப்பட்டது. அதோடு அந்த இடமும் ஒருவராலும் தேடிக் கண்டு பிடிக்க முடியாத, ஒருவராலும் கடக்க முடியாத இடமாகிவிட்டது என்றும்- அவர் குறிப்பிட்டுள்ளார். இது எந்த காலப்பகுதியில் நிகழ்ந்தது என்று இதுவரை தெரியாததால் அட்லாண்டிஸின் காலப் பகுதியும் தெரியவில்லை.

ஆனால் அட்லாண்டிஸ் இருந்ததற்கான சாத்தியப்பாடுகள் நிறைய இருந்தாலும் அதனை நிரூபிப்பதற்கான விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் இன்று வரை கிடைக்காததே அட்லாண்டிஸ் மீதான சுவாரஸ்யத்தையும் தேடலையும் அதிகரித்துள்ளது.




# கொடிய விலங்குகளுடன்

## குடும்பம் நடத்தும் விநோத நபர்



அமெரிக்காவில் நபர் ஒருவர் சிங்கம், புலி மற்றும் சிறுத்தையுடன் வாழ்ந்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்த கார்ல் போவர்ட் (வயது-43), என்ற நபர் தனது ஒரு கண்ணின் பார்வையில் குறைபாடுள்ளவர். இவர் 6 புலிகள், 2 சிங்கம் மற்றும் சிறுத்தை ஒன்றுடன் தினமும் வாழ்ந்து வருகின்றார். மேலும் 2 கரடிகளையும், 2 முதலைகளையும் வளர்த்து வருகிறார். தினமும் விலங்குகளுடன் விளையாடி மகிழ்கின்றார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்; மிருகங்களுடன் பழகுவது ஆபத்தானது என்பதால் நான் எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்கிறேன் என்றும் குறிப்பாக அவற்றுக்கு இறைச்சி உணவு அளிக்கும் போது மிகவும் விழிப்புடன் இருப்பேன் எனவும் தெரிவித்துள்ளார். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு சிறுத்தைக் குட்டிகளை வாங்கிய கார்ல், தனது வீட்டின் பின்புறமே விலங்கியல் பூங்காவை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நச்சின்னு கடி

உப்! ஒரு 10 ரூபாய் இருந்தா கொடு!
என்னிடம் சுத்தமா இல்லை
பரவாயில்லை! கொடு நான் சுத்தம் பண்ணிக்கிறேன்!



இந்த ஊரில் தங்க வீடு கிடைக்குமா..?
கிடைக்காது! கூரை வீடு, ஓட்டு வீடு, மாடி வீடுதான் கிடைக்கும்!

தம்பி நீ என்ன படிச்சிருக்க?
பி.ஏ.
அடப்பாவி! படிச்சதே ரெண்டு எழுத்து! அதையும் தலை கீழா படிச்சிருக்கே!

உங்களுக்கு ஏதாவது விற்பனை அனுபவம் இருக்கிறதா?
ஓ! நிறைய! என் வீடு, கார் மற்றும் என்னுடைய மனைவியின் அனைத்து நகைகளுமே விற்றிருக்கிறேன்!

மனைவி: நீங்களாவது உங்கள் நண்பரிடம் சொல்லக் கூடாதா? அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்லை!
கணவன்: நான் ஏன் சொல்ல வேண்டும்! பாவிப்பயல் எனக்கு அவன் சொன்னானா?



# முந்தானை முடிச்சில் கிருபா

தென்றல், உறவுகள் சங்கமம் தொடர்களில் நடித்து வந்த தேவி கிருபா, தற்போது முந்தானை முடிச்சு தொடரில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இது குறித்து அவர் கூறியதாவது: இதற்கு முந்தைய தொடர்களில் சேலை கட்டி அடக்க ஒடுக்கமான பெண்ணாக நடித்தேன். வயதை மீறிய தோற்றத்துடன் நடித்தேன். முந்தானை முடிச்சில் நவீன உடை அணியும் பெண்ணாக நடிப்பதால் சந்தோஷமாக இருக்கிறது.

தொடர்களில் நடிப்பதோடு நிகழ்ச்சி தொகுப்பாளர் வாய்ப்புக்களும் நிறைய வருகின்றன. அதற்கான பயிற்சி எடுத்துக் கொண்டு அந்த பணியை செய்யலாம் என்று நினைக்கிறேன் - என்றார்.

# சிங்கர் முத்து சிறுவர் சேமிப்பு கணக்கிடமிருந்து சிறுவர்களுக்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்



தேசிய சேமிப்பு வளர்ச்சியானது பெரும் அபிவிருத்தி இலக்குகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இலங்கைக்கு மிகவும் முக்கிய காரணியாக விளங்குகின்றது. இதன் போது நாட்டின் இளம் பராயத்தினரிடம் சேமிக்கும் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மேற்குறிப்பிட்ட செயற்பாட்டுக்கு நேரடி பங்களிப்பை வழங்கும் ஒரு முறையாகும். இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனமான சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சீ. ஊடாக சிங்கர் முத்து சிறுவர் சேமிப்பு கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டமையானது அந்நோக்கத்தை முன்னிலைப்படுத்தியாகும். இது தொடர்பாக சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சீ. நிறுவனத்தின் வியாபார அபிவிருத்தி முகாமையாளர் இமான் பெரேரா மற்றும் வைப்பு முகாமையாளர் மாதவ தில்கரத்ன ஆகியோர் மேலதிக கருத்துக்களை தெரிவித்தனர்.

வாடிக்கையாளர்கள் சேமிப்பு கணக்கொன்றில் பணத்தை வைப்பிலிடும் போது குறிப்பிட்ட நிதி நிறுவனத்தின் நிலைப்புத்தன்மை மற்றும் நம்பிக்கை தொடர்பாக அதிக கவனம் கொள்வர். சிங்கர் நாமமானது 13% வருடங்களுக்கு மேல் இலங்கை வாடிக்கையாளர்களிடம் கட்டியெழுப்பிய நம்பிக்கை மற்றும் சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சீ. கடந்த தசாப்தில் சிங்கர் குழுமத்தின் இணை நிறுவனமாக நிதித்துறையில் பெற்றுக்கொண்டுள்ள நிலைப்புத்தன்மையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. சிறுவர் சேமிப்புக்கணக்கு துறையில் நவீன குறியீட்டு நாமமாக சிங்கர் முத்து சிறுவர் சேமிப்பு கணக்கிற்காக இலங்கை வாடிக்கையாளர்களிடம் சிறந்த வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் தற்போது அது மேலும் வளர்ச்சியடைந்து வரும் போக்கை காட்டுகின்றது.

தற்போது சிங்கர் பினான்ஸ் நிறுவனம் நாடளாவிய ரீதியில் விரிவடைந்துள்ள 20 கிளைகளைக் கொண்டுள்ளதுடன் இந்த அனைத்து கிளைகளையும் ஒன்றிணைத்து சிறுவர் தினத்துக்காக ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை விசேட விரிவாக்கல் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது

அதன்படி சிங்கர் பினான்ஸ் கிளைகள் நிறுவப்பட்டுள்ள அனைத்து நகரங்களிலும் தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலைகளில் 2014 ஆம் ஆண்டு 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து சிறுவர்களுக்கும் சிங்கர் முத்து கணக்கொன்றைப் பரிசாக வழங்குவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதிலிருந்து எதிர்காலத்தில் அவர்களது பெற்றோர்களின் வழிகாட்டுதலில் கீழ் அவர்களது சேமிப்பு திறன் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் அந்தக் கணக்கினை மேம்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

சிங்கர் முத்து சேமிப்பு கணக்குக்காக அதிக வட்டி வீதத்தை வழங்கப்படவுள்ளதுடன் கணக்கின் மீதி ஐயாயிரம் ரூபா, ஐம்பதாயிரம் ரூபா, ஒரு லட்சம் ரூபா, மூன்று லட்சம் போன்ற தொகை வரையில் சேமிக்கும் போது சிறுவர்களை உற்சாகப்படுத்தும் முகமாக விசேட பரிசுகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபா. ஐம்பதாயிரம் சேமிப்பு மீதிக்கு சைக்கிள் ஒன்றும் ரூபா ஒரு லட்சத்துக்கு எழுது மேசை தொகுதி ஒன்றும் மற்றும் மூன்று லட்சத்துக்கு மடிக்கணினி ஒன்றும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

ஒக்ரோபர் மாதம் முழுவதும் சிங்கர் மெகா காட்சியறைகளில் சிங்கர் முத்து சிறுவர் சேமிப்பு விரிவாக்கல் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அருகிலுள்ள சிங்கர் மெகா காட்சியறைகளில் அல்லது அருகிலுள்ள சிங்கர் பினான்ஸ் கிளையில் இது தொடர்பான மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த அனைத்து உற்சாகமூட்டுதல்களின் ஊடாக சிறுவர்களிடத்தில் சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதின் ஊடாகப் பொருளாதார வளர்ச்சிக்காகத் தேசிய சேமிப்பை அதிகரிப்பதற்கு சிங்கர் பினான்ஸ் நிறுவனம் பெறுப்புடன் செயற்படுகின்றது. அத்துடன் சிறுவர்களிடத்தில் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காகச்சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் மிகவும் பாராட்டத்தக்கதாகும் இலங்கையின் சிறுவர்கள் மற்றும் பெற்றோருக்கு சிங்கர் முத்து உடன் கைகோர்த்துக்கொண்டு அதன் ஊடாக தேசிய சேமிப்பு வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சீ. நிறுவனம் உங்களை அன்புடன் அழைக்கின்றது. (கு)

# மெலிஞ்சிமுனை கிராமத்துக்கு கொமர்ஷல் வங்கியின் நீர்த்தாங்கி



யாழ். குடாநாட்டின் தீவகப் பிரதேசத்தில் உள்ள ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மெலிஞ்சி முனை கிராமத்துக்கு கொமர்ஷல் வங்கியின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் அந்தக் கிராம மக்களின் குடிதண்ணீர் வசதியை மேம்படுத்தும் பொருட்டு உழவு இயந்திரமும் குடிதண்ணீர் தாங்கியும் கடந்த 29ஆம் திகதி அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன்போது 3ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவுடைய குடிதண்ணீர் தாங்கியும் மக்கள் தண்ணீரை எடுத்துச் செல்லக் கூடிய 25 லீற்றர் கொள்ளளவுடைய 100 கலன்களும் வழங்கப்பட்டது.

மெலிஞ்சிமுனை கிராமத்தில் ஏறத்தாழ 225 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். சுண்ணாம்புக் கற்களாலான புவியியல் நிலப்பரப்பைக் கொண்ட இந்தக் கிராமத்தில் நீண்ட காலமாக மக்கள் குடிதண்ணீருக்கு பலத்த சிரமத்தை எதிர்கொண்டு வந்தனர். இந்த மக்களின் வாழ்வாதார தொழிலாக கடற்றொழிலைப் பிரதானமாக கொண்டுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்தக் குடிதண்ணீர் தாங்கி வசதி மூலம் ஏறத்தாழ 500 இற்கு மேற்பட்ட மக்கள் நன்மை அடைகின்றனர்.

**இந்தக் குடிதண்ணீர் தாங்கி மூலம் தமக்குத் தேவையான தண்ணீர் வசதியை சாட்டியில் உள்ளநன்னீர்கிணற்றில் இருந்தும் யாழ்.குடாநாட்டில் இருந்தும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.**

தண்ணீர்த் தாங்கி கையளிக்கும் வைபவம் மெலிஞ்சிமுனையில் உள்ள புனித கிறிஸ்து அரச தேவாலய முன்றில் கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் றோய் நீக்லஸினால் அந்தப் பிரதேசத்துக்கான பங்கு தந்தையும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளருமான அருட்திரு மரியதாஸிடம் அபிவிருத்திக் கடன் பிரிவு தலைவர் சிரேஷ்ட முகாமையாளர் எல்மோ சூரியாராச்சியும், வங்கியின் வடபிராந்திய கிளை முகாமையாளர்களும் ஊழியர்களும் பங்குபற்றினர்.

இந்தத் திட்டம் கொமர்ஷல் வங்கியின் அபிவிருத்திக் கடன் பிரிவினதும் வேலணைக் கிளையினதும் ஒருங்கிணைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடற்றொழில் பாதிப்பின்மூலம் தமது வருமானத்தை இழந்து தவிக்கும் குறித்த சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கடல் பாசி வளர்ப்பு சம்பந்தமாக செயற்பட்டறை ஒன்றும் கடந்த 26ஆம் திகதி கொமர்ஷல் வங்கி வேலணைக் கிளையில் நடைபெற்றது. இதில் நயினா தீவு, புங்குடுதீவு, அனலை தீவு, மண்டைதீவு, தம்பாட்டி, அல்லைப்பிட்டி, வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த அண்ணளவாக 100 பயனாளிகள் பங்கு பற்றினார்கள். **இந்தச் செயற்பட்டறையின் வளவா**ளர்களாக இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட முகாமையாளர் திருமதி றஜனி விஜயாளன், இந்தியாவில் இருந்து வருகை தந்த கலாநிதி எம்.சண்முகம் - பொது முகாமையாளர் அக்குவாறி புறொசஸ்ஸிங் லிமிட்டெட், கெயீலிஸ் நிறுவனத்தின் வியாபார செயற்பாட்டு பிரிவின் தலைவர் கே.சிவராம், கடற்றொழில் அபிவிருத்தி அலுவலர் எஸ்.சலீபன் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

கொமர்ஷல் வங்கியின் வேலணைக் கிளையானது தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசித்த மக்கள் மீள்குடியேறிய பொழுது அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கிளையின் மூலம் ஏறத்தாழ 750 பயனாளிகளுக்கு 100 மில்லியன் மேற்பட்ட நுண்பாக கடன்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கு)

# உலக சேமிப்புத் தினத்தை முன்னிட்டு செலான் வங்கியின் நிகழ்ச்சித் திட்டம்

ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட உலக சேமிப்புத் தினத்தை முன்னிட்டு செலான் வங்கியினால் நாடளாவிய ரீதியில் சேமிப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பொலனறுவை மாவட்டத்துக்கான செலான் வங்கியின் செலான் வீட்டுக்கு வீடு 2014 சேமிப்பதற்கான வழி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நிகழ்வு கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை பொலனறுவை நகரக் கிளையின் ஏற்பாட்டில் பொலனறுவை ஜயந்திபுர பிரதேசத்தில் இடம்பெற்றது. செலான் வங்கியின் பொலனறுவை நகரக் கிளையின் முகாமையாளர் துஷான் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செலான் வங்கியின் பொலனறுவை நகரக் கிளையின் உதவி முகாமையாளர் உட்பட உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வர்த்தக நிலையங்களுக்கும், வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் சென்ற செலான் வங்கியின் பொலனறுவை நகரக் கிளையின் முகாமையாளர் உள்ளிட்ட அதன் உத்தியோகத்தர்களினால் செலான் வீட்டுக்கு வீடு 2014 சேமிப்பதற்கான வழி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விஷேட கையேடும், செலான் வங்கியின் சேமிப்பு கணக்குகள், நிலையான வைப்பு கணக்குகள், வெளிநாட்டு சேமிப்புக்கணக்கு மற்றும் நிலையான வைப்புக்கள் தொடர்பான விஷேட கையேடும் பொது மக்களுக்கும், வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் உரிமையாளருக்கும் வழங்கி வைக்கப்பட்டதுடன் அது தொடர்பான விளக்கமும் அளிக்கப்பட்டது. (கு-10)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஏழைகள் விடும் கண்ணீர் எவரையும் சும்மா விடாது

கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும் என்றொரு சொல்வழக்கு நம்மவர்கள் மத்தியில் உண்டு. மலையகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பெரிய மண்சரிவும், அதில் புதையுண்டு போயுள்ள மக்களும், அதனால் நிர்க்கதிக்குள்ளாகி தவிக்கும் அவர்களின் இரத்த உறவுகளின் நிலையும், இன்று அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஐ.நா. நிறுவனம் போன்ற தரப்புக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக ஆகிவிட்டுள்ளது. இதனால் அந்த மக்களின் வாழ்வில் இனிமேலாகுதல் ஒரு நல்ல திருப்பம் ஏற்படும் என்று நம்புவோமாக.

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் கூலிகளாக தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்ட இந்த ஏழைத் தொழிலாளர்களின் மூதாதையர், தென்னாபிரிக்க அடிமைகளை விடக் கேவலமாக, அந்த வேளையில் ஆட்சிபுரிந்த அரசுகளாலும் அவர்களின் முகவர்களான தோட்டத்துரைமாரினாலும் நடத்தப்பட்டு வந்துள்ளனர். மாட்டுத் தொழுவங்கள் போன்று வரிசை வரிசையாக மலைச்சரிவுகளில் அமைக்கப்பட்ட லயன் அறைகளில் அவர்கள் குடும்பம் குடும்பமாக வாழ்க்கை நடத்தும்படி செய்யப்பட்டனர். அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதில் அந்த முதலாளிகள் காட்டிய அக்கறை அளவுக்கு அவர்களின் சேமநலனில் அக்கறை கொள்ளவில்லை. நாடு சுதந்திரம் அடைந்து வெள்ளையர் வெளியேறிய போதும்கூட, தங்கள் தோட்ட நிறுவனங்களும் பிரிட்டிஷ் அரசும் கோடிகோடியாக சம்பாதிப்பதற்கு உதவிய இந்த ஏழைகள்பால் அக்கறை காட்டாமல் 'அம்போ' என்று கைகழுவி விட்டுச் சென்றுவிட்டன. அதன் பின்னர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொண்ட ஐ.தே.கட்சியானால் என்ன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியானால் என்ன, அவர்களுடன் இணைந்துகொண்ட இடதுசாரிகளானால் என்ன, தோட்ட மக்களை வேண்டா வெறுப்புடனேயே நடத்தினர். ஐக்கிய தேசியக் கட்சியினர் கொண்டுவந்த இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தினாலும், வாக்குரிமை அபகரிக்கப்பட்டதனாலும், பாதிக்கப்பட்டு நாடற்றவர்களென அவர்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தார்கள். சிறிலங்கா அரசின் மொழியுரிமைச் சட்டங்களாலும் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று அந்த மக்கள் இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டிருப்பது மனிதநேயம் கொண்ட அனைவரையும் மனம் கலங்கச் செய்துள்ளது. வடக்கிலிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்காக நிவாரணப் பொருள்களுடன் அங்கு சென்றுள்ளனர். இவர்களில் பலருக்கு அந்த மக்களின் வாழ்க்கை நிலைமை இதுவரை தெரிந்திருக்காது. அங்கு ஏற்பட்டுள்ள மனித அவலம்தான் அவர்களை அங்கு கொண்டு சென்றுள்ளது.

பதுளை கொஸ்லந்தை மற்றும் மலையகத்தின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்ட மண்சரிவு தொடர்பாக ஏற்கனவே 2005 ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக அமைச்சர் ஒருவரும் அதிகாரிகளும் கூறியிருக்கின்றார்கள். தோட்ட நிர்வாகிகள் அசமந்தமாக இருந்துவிட்டதாக பழிபோடும் இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களும் வேறு இடங்களுக்குச் செல்லாமல் இருந்துவிட்டனர் என்கிறார்கள். உண்மையில் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் அக்கறை இருந்திருக்குமானால், எச்சரிக்கை விடுத்ததோடு நிற்காமல் மாற்று ஏற்பாடுகளை செய்யும்படி தோட்ட நிர்வாகிகளை நிர்ப்பந்தித்திருக்க வேண்டும். தொழிலாளர்களை இடம்மாறச் சொன்னால் அவர்கள் எங்கே போவது? மாற்று இடம் ஏற்பாடு செய்துதவ வேண்டாமா? வெளியேறிச் செல்பவர்களுக்கு இரண்டு மூன்று தகரங்களைக் கொடுத்து அனுப்புகிறார்கள். அவைகளை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்வது என்று ஒரு தொழிலாளி கேட்டுள்ளார்.

புதையுண்ட மக்களைத் தேடுவதும் தப்பியிருக்கும் உறவினர்களைத் தேற்றுவதும் ஒரு புறமிருக்க, இனிவரப் போகின்ற காலத்திலாகுதல் இந்த மக்கள் நிம்மதியாக நாட்டின் ஏனைய மக்கள் போன்று நிலச்சரிவுகள் ஏற்படாத பகுதிகளில் குடியமர்த்தப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கென 50 ஆயிரம் குடியிருப்புக்களை உருவாக்கப் போவதாக கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் மட்டுமன்றி இந்த முறையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அது வெறும் தேர்தல் குண்டாக இருக்காமல் உடனடியாக செயற்படுத்தப்படுவதற்கு இது நல்ல சந்தர்ப்பம். மலையகத் தொழிற் சங்கங்கள் குறிப்பாக அரசோடு ஒட்டிக்கொண்டிருக்கும் இ.தொ.காங்கிரஸ் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மலையக மக்கள் நிரந்தரமாக நல்ல சுகாதாரமிக்க குடியிருப்புக்களில் ஏனைய மக்களைப் போல் கௌரவமாக வாழ்வதற்கு வழிசெய்ய கடமைப்பட்டிருக்கின்றன. நாட்டின் வறுமைக்கோட்டுக்கு மிகமிக கீழ்நிலையில் வாழுகின்ற இந்த மக்களின் ஆதரவிலும் சந்தாப் பணத்திலும் தலைவர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் தங்களை உயர்த்திக்கொண்டுள்ள இவர்கள் வெறும் பத்திரிகை அறிக்கைகளோடு நின்றுவிடாது சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி அந்த மக்களை உய்விக்க வேண்டும். இல்லையெனில் அந்த ஏழைகள் விடும் கண்ணீர் எவரையும் சும்மா விட்டுவைக்காது.

# மலையக மக்களைக் கலங்கடித்த சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்



இலங்கையில் 9,75,000 இந்திய வம்சாவளியினர், பிரஜா உரிமை இல்லாமல், நாடற்றவர்களாக நாதியற்று இருந்த காலத்தில், அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்பதற்காக, சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தம் 1964 ஒக்ரோபர் 30 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

1815ஆம் ஆண்டு கால கட்டத்தில், கண்டி அரசு வீழ்த்தப் பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையின் மையப் பகுதியான மலையகத்தில், கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பி செய்கைக்கான பணிகளுக்கு தொழிலாளர்கள் தேவைப் பட்டதால், தமிழகத்தின் திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய பகுதி களிலிருந்து தொழிலாளர்களை கடற்கரை வரை கூட்டம் கூட்டமாக நடத்தி அழைத்துச் சென்றனர்.

அங்கிருந்து கடலில் பயணித்தபோது"பலர், தவறுதலாக வங்கக் கடலில் விழுந்து மாண்டனர். இறுதியில் அவர்களை மன்னாரில் இறக்கி மலையகம் வரை அடர்ந்த காடுகள் வழியாக அழைத்துச் சென்றபொழுது, பலர் நோய்வாய்ப் பட்டும், காட்டு விலங்குகளுக்கு இரையாகியும் இறந்தனர். இந்தப் பயணத்தின்போது உணவு, தண்ணீர் என்பன வழங்கப்படவில்லை

1842 இல் இருந்து 1945 வரை இந்தியாவிலிருந்து நான்கு முறை இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோரை மனித நேயமின்றி அடிமைகளைப் போல் அழைத்துச் சென்றனர். பிரடெரிக் நோர்த் என்ற ஆங்கிலேயர் பரிபாலனத்தில், இலங்கையில் இருந்த ஆங்கிலேயரின் அரசுகள் இந்திய வம்சாவளியினரை, மனிதர்கள் என்று நினைக்காமல் நடத்தின.

தமிழ்நாட்டில் அன்றைக்கு அரச அலுவலகங்கள் செங்கல் பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், சிவகாசி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றுக்குத் தலைமையிடமாக திருச்சியில் 'பிளான்டேஷன் கோஸ்ட் ஏஜென்சி' என்ற அமைப்பு செயற்பட்டது. இதன் மூலம் தமிழகத்திலுள்ள ஏழ்மையான மக்கள் இலங்கைக்கு தோட்டத் தொழிலுக்காக அனுப்பப்பட்டனர்.

தோட்டத் தொழிலில் ஈடுபட்டபோது அங்குள்ள கடுங்குளிரும், சூழலும் ஒத்துகொள்ளாமல் 70,000 இந்திய வம்சாவளியினர் இறந்ததாக "கொழும்பு ஒப்சேவர் நாளிதழ்" அப்போது தெரிவித்தது. பஞ்சம், வறட்சி, கொள்ளை நோய் ஆகியன அந்த மக்களை வாட்டி வதைத்தன.

ஒரு கட்டத்தில் கோப்பிப் பயிர்கள் சரியாக விளையவில்லையென்று கூறி, ஆங்கிலேயர்கள் தேயிலை, இறப்பர், தென்னை ஆகியவற்றைப் பயிரிட்டனர். கடுமையாக உழைத்த அந்தத் தொழிலாளர்கள் கங்காணி முறையில் கண்காணிக்கப்பட்டனர்.

பயத்திலும், அச்சத்திலும் தொழிலாளர்கள் வாழ வேண்டிய நிலைமை காணப்பட்டது. காலை 6 மணியிலிருந்து இரவு 7 மணி வரை கடும் உழைப்பு. அந்த உழைப்பின்போது, காட்டில் உள்ள அட்டைகள் அவர்கள் இரத்தத்தை உறிஞ்சின. அங்கிருந்து அவர்கள் தப்பிப் போக முடியாதவாறு வேலிகள் இருந்தன. தப்ப முயன்று அகப்பட்டால் கடுமையான தண்டனை உண்டு. இது சுருக்கமான வரலாறு.

இலங்கை,1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. அன்றைய தினத்திலிருந்து இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டு, சட்ட விரோதமாகக் குடியேறியவர்களாக அறிவிக்கப்பட்டனர்.

விடுதலை பெற்ற இலங்கை அரசு அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் படும் அவஸ்தைகள், அன்றைய பிரதமர் நேருவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. நேரு இதுகுறித்து இலங்கைப் பிரதமரான கொத்தலாவலையிடம் பேசினார்.

1954இல் டில்லி வந்த கொத்தலாவலை, நேருவின் கையைப் பிடித்துக் கொண்டு, நீங்கள் இலங்கை வந்தபோது, உங்கள் கூட்டத்தின் மீது எங்கள் நாட்டினர் கல் வீசினார்கள் என்று எங்கள் மீது கோபம் காட்டாதீர்கள். இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைப்புத் தாருங்கள் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார். பின்னர் நேரு - கொத்த லாவலை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், மலையக தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்க இலங்கை அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது மட்டுமல்லாது, நேரு காலமான பின்பு, இந்திய வம்சாவளியினரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதிலேயே இலங்கை கவனமாக இருந்தது.

நேருவின் அணிசேராக் கொள்கை, பஞ்சசீலம் இவற்றின் அடிப்படையில், அண்டை நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும், சீன - இந்தியப் போர் போன்றவைகளைக் காரணமாக வைத்தும், சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தை உருவாக்க சரியான நேரம் இதுதான் என்று- முடிவு செய்து சிறிமாவோ பண்டாரநாயக்கா 1964 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதி டில்லி வந்தார்.

சிறிமாவோவின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றதி.

அதனைத் தொடர்ந்து இலங்கையின் வற்புறுத்தலால், சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம் கையொப்பமானது. இந்திய அரசு இலங்கையின் கோரிக்கையை வாய்மூடி ஏற்றுக் கொண்டது.

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுவரண் சிங், தமிழக அமைச்சர் வி. ராமய்யா ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் அந்த ஒப்பந்தத்துக்கு இசைவு கொடுக்கப்பட்டது. தமிழக அமைச்சரான வி.ராமய்யா அப்போது வாய் திறந்து எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.

இந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கையில் பிரஜா உரிமையற்று, நாடற்றவர்களாக இருக்கும் 9,75,000 பேரில் 5.25 லட்சம் பேரை இந்தியா, திருப்பி அழைப்பதெனவும், 3 லட்சம் பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதெனவும், மீதமுள்ள 1.5 லட்சம் பேரின் நிலையை பிற்பாடு முடிவெடுப்பது என்கிற ஒப்பந்தம் 1964ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதிஅன்று கையெழுத்தானது.

இதே 1964 ஆம் ஆண்டில் சேது சமுத்திரத் திட்டம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த பின்பும், கிடப்பில் போடப்பட்டதும், கச்சத்தீவு தமிழர்களின் விருப்பத்துக்கு மாறாக காவு கொடுக்கப்பட்டது என்பதும் வேறு விடயம். தமிழகத் தலைவர்களான அண்ணா, ராஜாஜி, ம.பொ.சி. போன்றோர் தமிழகத்தின் கருத்து அறியாமல் இந்த ஒப்பந்தம் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது என வினா எழுப்பினர்.

ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டில் கையெழுத்தானாலும், 1967ஆம் ஆண்டில்தான் நடைமுறைக்கு வரும் என்று ஒப்புக் கொண்டனர். ஆனால், 1965 - 66 லேயே சில தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களை இந்தியாவுக்கு அனுப்பியது இலங்கை அரசு.

ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து தமிழர்களை எப்படி அழைத்துச் சென்றார்களோ, அதேபோன்று சாரை சாரையாக கப்பலில் ஏற்றி தூத்துக்குடியிலும், சென்னையிலும் படகு மூலம் இராமேஸ்வரத்திலும் கைதிகள் போன்று இந்திய மணலில் இறக்கி விட்டனர். என்ன வேதனை?

அப்படி வந்து இறங்கியவர்களுக்கு இந்தியா, தொடர்பற்ற மண்ணாகத் தெரிந்தது. தங்களுடைய மூதாதையரின் மண்ணில் திக்குத் தெரியாமல் திகைத்தனர். இங்குள்ள மாறுபட்ட சூழலில், சீவனத்துக்கு வழியில்லாமலும், தொழில் தொடங்க கடனுக்கு மன்றாடுதல் எனவும் நிலைகுலைந்து போயினர்.

மீண்டும் தேயிலைத் தோட்டத் தொழிலுக்காக கொடைக்கானல், நீலகிரி, மூணாறு, வால்பாறை, கர்நாடகத்தில் உள்ள சிக்மகளூர், கேரளா, டார்ஜிலிங் வரை பயணித்தனர். பலர் துயரம் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர்.

இந்திய மண்ணோ, அவர்களைத் தங்களுடைய சகோதரர்கள் என நினைக்காமல், 'சிலோன்காரர்கள்' என்ற பிரிவினையோடு பார்த்தது. இதனால் பலர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு பைத்தியக்காரர்களான கதைகளும் உண்டு. இதே நிலைமை இன்று வரை நீடிக்கிறது.

பல குடும்பங்கள் வேதனையான வாழ்க்கையை இன்றும் அனுபவித்து வருகின்றன. 1983ஆம் ஆண்டு கலவரங்களுக்கு பின் ஈழத்திலிருந்து வந்து அகதிகளாக இருப்போர் இப்போது படுகின்ற துன்பங்களைப் போன்று தான், அன்று மலையகத் தமிழர்களும் சொந்த நாட்டுக்குத் திரும்பிய பிறகும் கஷ்டங்களை அனுபவித்தனர். மனித உரிமைகள், மானுடம் எனப் பேசிடும் நாம், 50 ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேறிய சாஸ்திரி- சிறிமாவோ ஒப்பந்தம், மலையக மக்களை சாவுக் குழிக்கும், அடிமைச் சாசனத்துக்கும் அழைத்துச் சென்றது என்ற ரணமான செய்தியைப் பதிவு செய்யும் நிலையில் இருக்கின்றோம். பிஜித் தீவு கோப்பித் தோட்டத்தில் தமிழர்கள் பட்ட பாடுகளை கண்ட பாரதி, 'விதியே விதியே, தமிழ் சாதியை என் செய்ய நினைத்தாய்?' என்று பாடினானே. அந்த வரி தான் நினைவுக்கு வருகிறது.

*நன்றி தினமணி.*

04 NOV 2014



# பதுளையின் அவலங்களுக்கு பெரிய 'மனிதர்'களும் காரணம்



ராஜராஜன்

பதுளையில் இடம்பெற்ற மண்சரிவு மலையகத்தில் வாழ்கின்ற அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையை வெளி உலகத்துக்குத் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது. மண்சரிவினால் நூற்றுக்கணக்கான அப்பாவித் தோட்டப்புற மக்கள் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டது மட்டுமல்லாது அவர்களின் எதிர்காலமும் பெரும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. மண்சரிவு இடம்பெற்றபோது பாடசாலைக்குச் சென்றிருந்த 75 சின்னஞ்சிறுசுகள் தமது பெற்றோரை இழந்து நட்டாற்றில் விடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்குப் பலர் முன்வந்துள்ள போதிலும், பெற்றோரை இழந்து தவிக்கும் இந்தச் சிறார்களை ஆற்றுகைப் படுத்துவது எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதியில் எத்தனைபேர் வசித்தார்கள், இவர்களில் எத்தனை பேர் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்தனர் என்ற விவரங்கள் கூடத் தெரியாத நிலையில் அமைச்சர்கள் சிலர் இருக்கின்றனர் என்பதை அறியும்போது கடும் எரிச்சலும், ஆத்திரமும் தான் ஏற்படுகின்றன. குறிப்பாக மலையக மக்களின் தலைவரெனத் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை உதிர்த்திருக்கிறார். "மக்களைப் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியமை தொடர்பாக எமது கவனத்துக்கு எவரும் கொண்டு வரவில்லை. அவ்வாறு இருக்கையில் எனக்கு எவ்வாறு அது குறித்துத் தெரியும்? சோதிடமா பார்க்க முடியும்? தற்போதுதான் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. நான் இது குறித்து உடனடியாக ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். அவர் இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருக்கிறார்" பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் ஒருவர் இவ்வாறு பொறுப்பற்ற விதமாகத் தெரிவித்திருப்பது வேதனையைத் தருகின்றது.

மேலும், 75 சிறார்கள் தமது பெற்றோரை இழந்து தவிக்கும் நிலையில் பாதிப்பு ஏற்பட்ட இடத்தில் சுமார் 45 முதல் 50 பேர் வரையில் வசித்திருக்கலாம். அதுவும் வெறுமனே ஊகம் தான் என அமைச்சர் கூறியதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

அண்மையில்தான் பதுளை, மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்று முடிந்துள்ளது. அரசியல்வாதிகள் வாக்குச் சேகரிக்கும் பொருட்டு பாதிக்கப்பட்ட பகுதிக்கும் சென்றிருப்பார்கள் அங்கு கிடைக்கக்கூடிய வாக்கு விவரங்களையும் சேகரித்திருப்பார்கள். குறிப்பாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மருமகனும் ஊவா மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமான் பதுளையில் தமிழ்மக்கள் வசிக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றிருப்பார். ஆகவே பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்திருப்பார். ஆனால் ஏழை மக்களிடம் வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அவர்களின் வாக்குகளைச் சுருட்டிக் கொள்ளும் அரசியல்வாதிகள் பின்னர் அவர்களை மறந்து விடுவார்கள் என்பதற்கு பதுளை கொஸ்லந்தை மண்சரிவுச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும். தற்போது அந்தப் பகுதி மண்ணால் மக்களின் உடல்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படும் சமாதி போன்றதொரு நிலையிலேயே காணப்படுகின்றது. இறந்தவர்களின் உடல்களை ஒருதரம் பார்க்க வேண்டுமென்ற துடிப்புடன் வேதனையில் கரைந்து கொண்டிருக்கும் உறவினர்களின் மனக் குமுறலை அரசியல்வாதிகளோ அல்லது அரச அதிகாரிகளோ கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. வழக்கம் போலவே சாக்குப் போக்குக் கூறி காலத்தைக் கடத்துவதிலேயே அவர்கள் குறியாய் நிற்கின்றனர்.

இந்தியாவிலிருந்து கப்பல்களில் ஏற்றி வரப்பட்டு கூலித் தொழிலாளர்களாக மலையகத்தில் இறக்கிவிடப்பட்டவர்கள் தான் இன்று அங்கு வாழும் இந்திய வம்சாவளி மக்கள். அவர்கள் ஆரம்பம் முதல் இன்று வரை அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தலைமைதாங்கி வழி நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் மலையகத் தலைமைகள் தமது வாழ்க்கையைச் செழிப்பாக்குவதிலேயே குறியாக இருக்கின்றன. தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளென அங்கு பல இருக்கின்றபோதிலும் இங்கு வாழும் சாதாரண மக்களின் வாழ்வில் இதுவரை விடிவு கிடைக்கவில்லை. மாறாக அவர்களின் நிலை மோசமாகிச் செல்வதையேகாண முடிகின்றது. தொழிற்சங்கச் சந்தா என்ற பெயரில் பல லட்சம் ரூபா இவர்களிடமிருந்து பெறப்படுவதையும் காணமுடிகின்றது. ஆனால் இவற்றை வசூலிக்கும் தொழிற்சங்கங்கள் இவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மெத்தனமாகவே செயற்படுவதைக் காணமுடிகின்றது. அதேவேளை, சந்தாப் பணத்தையும் வாக்குகளையும் பெறுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளன.

அந்நியர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மிகமோசமான லயன் குடியிருப்புக்கள் மலையகத்தின் பல பகுதிகளிலும் இன்றும் கூடக் காணப்படுகின்றன. ஓரளவு படித்தவர்களும், வசதி படைத்தவர்களும் நகரங்களை நாடிச் செல்ல, ஒன்றுக்குமே வழியில்லாத வறிய அப்பாவி மக்கள் தோட்டங்களிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். இவர்களை மலையகத்தின் நவீன அடிமைகள் என்று அழைத்தாலும் தவறில்லை. ஏனென்றால் இவர்களின் நிலை அந்த வகையைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. தற்போது மண்சரிவு ஏற்பட்ட பிரதேசம் ஒரு குக்கிராமம் எனக் கூறப்படுகின்றது. இங்கு வாழ்ந்த ஒன்றுமறியாத் அப்பாவி மக்களின் வாழ்க்கை ஒருசில நொடிகளில் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டே குறித்த பிரதேசம் மண்சரிவு அபாயமுள்ள இடமாக தேசிய அகழ்வாராய்ச்சி நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டபோதிலும், அங்கிருந்த மக்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்பது ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. மேலும், இங்குள்ள அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் மக்களின் உயிர்கள் மீது எவ்வளவு அக்கறையுடன் இருந்தார்கள் என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

எதற்கெடுத்தாலும் ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கிறோம், கடிதம் எழுதியிருக்கின்றோம் என்று கூறிக் கூறியே மக்களை ஏமாற்றிவரும் மலையக அரசியல்வாதிகள் இனியாவது தமது பொறுப்புக்களை உணர்ந்து நேர்மையுடன் செயற்பட வேண்டும். இதில் அவர்கள் தவறுவார்களாயின் கொஸ்லந்தை மீரியபெத்தையில் ஏற்பட்டுள்ள அவலம் வேறு இடங்களிலும் இடம்பெறுவதற்கான சாத்தியங்களே அதிகரிக்கும்.

ஆகவே இனியும் தாமதிக்காது அபாயம் காணப்படாத இடங்களில் மலையகத்தில் வாழும் மக்களுக்கு இடங்களை வழங்கி நிரந்தரமான வீடுகளையும் அமைத்துக்கொடுக்க வேண்டும். எந்த வேளையிலும் எதுவும் நிகழலாம் என்ற அச்சத்தைத் தவிர்த்து அந்த மக்கள் வாழக்கூடிய நிலை உருவாக்கப்படல் வேண்டும். மலையகத்தின் தொழிற்சங்கவாதிகளே! அரசியல்வாதிகளே! அங்கு வாழ்பவர்கள் உங்களின் உடன்பிறப்புக்கள் என்ற எண்ணத்துடன் செயற்படுங்கள். உங்களுக்குக் கிடைத்த வாழ்வும் செல்வாக்கும் அவர்கள் வழங்கிய பிச்சை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அப்போதுதான் மலையகத்தில் புன்னகை விரியும்.

# மரங்களை நடுவோம் மக்களைக் காப்போம்

வீ.கே.ஆர்.

ஒரு நாட்டின் நிலப் பரப்பில் மூன்றில் ஒருபாகம் காடுகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது நியதியாகும். மரங்கள் நிறைந்த பகுதிகளையே நாம் காடுகள் என அழைக்கின்றோம். ஆதி காலத்தில் காடுகளே மனிதர்களின் உறைவிடங்களாக இருந்ததால் அவை அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கின. காலப்போக்கில் மனிதர்களிடையே நாகரிகம் வளர வளர அவர்கள் காடுகளை அழித்து தமக்குரிய இல்லிடங்களை அமைத்துக் கொண்டனர். அன்று ஆரம்பித்த மரங்களை அழிக்கும் நடவடிக்கைகள் இன்றும் தொடர்கின்றன.

மரங்கள் ஓரறிவு படைத்தவையென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவற்றுக்கு உணர்வுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் ஆறறிவு படைத்த மனிதர்கள் ஓரறிவு படைத்த மரங்களைப் பேணிக் காப்பது தலையாய கடமையாகும்.

மரங்களால் இந்த மண்ணுக்கும், மனிதர்களுக்கும் ஏராளமான நன்மைகள் கிடைக்கின்றன. மனிதர்களின் ஆயுளுக்குத் தீங்கை விளைவிக்கும் காபனீரொட்சைட் வாயுவை மரங்கள் உள்வாங்கிக்கொண்டு நன்மை பயக்கும் பிராண வாயுவை வெளிவிடுகின்றன. மேலும், மரங்கள் தாம் உள்வாங்கிய காபனீரொட்சைட் வாயு சூரியஒளி, நீர் ஆகியவற்றின் உதவியுடன் எமக்குப் பயன்தரும் பொருள்களைத் தயாரித்து வழங்குகின்றன. மழை காலங்களில் ஏற்படும் நில அரிப்புக்களை மரங்கள் கட்டுப்படுத்துகின்றன. கோடை காலங்களில் குளிர்மையான நிழலைத் தந்து மனிதர்கள் மட்டுமல்ல, மிருகங்களையும், பறவைகளையும் இளைப்பாறுவதற்கு உதவி செய்கின்றன. கடுமையான காற்று வீசும்போது மரங்கள் அதனைத் தடுப்பதால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைந்து காணப்படுகின்றன. கடந்த போர் இடம்பெற்ற காலப்பகுதியில் ஏவிவிடப்பட்ட எறிகணைகளை மரங்கள் தம்மீது தாங்கி மனிதர்களைக் காப்பாற்றிய சம்பவங்கள் ஏராளமாக இடம்பெற்றுள்ளன. தம்மை அழித்து மனிதர்களைக் காத்த மரங்களின் செயலை மனிதர்கள் மறந்துவிடுவது நன்றி மறப்பதற்கு ஒப்பானது. தற்போது வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளதால் அதிக ஒலியும் எழுப்பப்படுகின்றது. மரங்கள் ஒலியை ஓரளவாவது கட்டுப்படுத்தி மனிதர்களுக்கு உதவுகின்றன.

முன்னரெல்லாம் மக்களின் பசியைப் போக்குவதில் பனை மரங்கள் முக்கிய பங்கை வகித்தன. பனையிலிருந்து பல்வேறு உணவுப்பொருள்கள் கிடைத்ததால் கற்பகதரு என பனை மரங்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. ஆனால் இன்று வகை தொகையின்றிப் பனை மரங்கள் அழிக்கப்படும் நிலைதான் தொடர்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் பனை மரங்களைப் பார்க்க முடியாததொரு நிலையும் உருவாகிவிடும். ஆகவே அழிக்கப்பட்ட பனை மரங்களுக்கு ஈடாக பனம் விதைகளை நட்டு பனை வளத்தைப் பெருக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.




இந்த நிலையில் வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வடக்கில் நவம்பர் மாதம் முழுவதும் மரநடுகை இடம்பெறவுள்ளது. இந்தவருடம் மழை வீழ்ச்சியும் ஓரளவு கைகொடுக்கும் நிலையில் இந்தத் திட்டம் வெற்றியளிக்குமென எதிர்பார்க்கலாம். ஆகவே பொதுமக்கள் பிறரை எதிர்பார்த்துக் காத்திருக்காது தாமாகவே முன்வந்து பயன்தரு மரங்களை நட வேண்டும். இதனால் எதிர்காலச் சந்ததியினர் பெருநன்மை அடைவார்கள். மரங்களை நடுவோம் மண்ணையும், மக்களையும் காப்போம்.

# மீனவருக்கு விதிக்கப்பட்ட தூக்கு மனிதகுலத்துக்கு விடுத்த சவால்

### நடிகர் கமலஹாசன் கண்டனம்

சென்னை, நவ.4



தமிழக மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை மனிதாபிமானத்துக்கும் மனிதகுலத்துக்கும் விடுக்கப்பட்ட சவால் என்று நடிகர் கமலஹாசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. 2011 கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைப் பிடித்து போதைப் பொருள் கடத்தியதாக இலங்கை அரசு பொய் வழக்குத் தொடர்ந்தது. அவர்கள் ஐந்து பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த சர்வாதிகார செயலை பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கண்டித்தன. சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகமும்போராட்டக்காரர்களால் முற்றுகையிடப் பட்டது. இலங்கையின் இந்த சர்வாதிகார செயல் குறித்து தொலைக்காட்சி ஒன்று கமலிடம் கேள்வி எழுப்பியது. அதற்குப் பதிலளித்த கமல்ஹாசன் இலங்கைக்கு கடும் கண்டனத்தை தெரிவித்தார்.

இதைவிடக் கேவலமான மனித உரிமை மீறல் இருக்க முடியாதுஎன்றஅவர், இலங்கையின் இந்த நடவடிக்கை மனிதாபிமானத்துக்கு மட்டுமின்றி மனிதகுலத்துக்கேவிடுக்கப்பட்ட சவால் என்றார். (வ)

# உடைந்தது தமிழக காங்.

## தனிக்கட்சி ஆரம்பித்தார் வாசன்

சென்னை, நவ.4



காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள ஜி.கே.வாசன், புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் திருச்சியில் கட்சியின் பெயர், கொடியை அறிவிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது இவ்வாறு தெரிவித்த அவர், திருச்சியில் விரைவில் நடக்க உள்ள பொதுக்கூட்டத்தில் கட்சியின் பெயர், கொடியை அறிவிக்க உள்ளதாகக் கூறினார்.

தொண்டர்கள் கொடுத்த ஆதரவுடன் காமராஜர், மூப்பனார் வழியில் புதிய கட்சியைத் தொடங்க முடிவு செய்யப்பட்டதாக கூறிய வாசன், திருச்சியில் நடைபெற உள்ள பொதுக் கூட்ட திகதி சில தினங்களில் அறிவிக்கப்படும் என்றார்.

மேலும், வளமான தமிழகம் தான் தமது புதிய இயக்கத்தின் குறிக்கோள் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழக காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அட்டையில் காமராஜர், ஜி.கே. மூப்பனார் படங்கள் இடம் பெற்றிருந்தமை தொடர்பாக, காங்கிரஸ் கட்சி தலைமையுடன் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்த பி.எஸ். ஞான தேசிகன் கடந்த 30ஆம் திகதி தனது பதவியை ராஜினாமா செய்தார்.அவரைத்தொடர்ந்து, மாநில பொருளாளராக இருந்த கோவை தங்கமும் பதவி விலகினார். இவர்கள் 2 பேரும் முன்னாள் ஜி.கே. வாசனின் ஆதரவாளர்கள். ராஜினாமா செய்தது குறித்து, ஜி.கே. வாசனை சமரசம் செய்யும் வகையில், கட்சி மேலிடம் ஞானதேசிகனுக்கு மாநில தலைவர் பதவியை வழங்கும் என்று நம்பியிருந்தனர் அவரது ஆதரவாளர்கள். ஆனால், எல்லோரது நம்பிக்கைக்கும் மாறாக திடீரென தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அறிவிக்கப்பட்டார். இதுஜி.கே.வாசன் ஆதரவாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (வ)

## காதல் முத்தப் போராட்டம் இளைஞர்கள் 30 பேர் கைது



தென்னிந்தியாவின் கொச்சி நகரில் பொது இடத்தில் நின்று கட்டிபணைத்து முத்தமிட்டு நூதன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்காக கடற்கரையில் இளைஞர்கள் கூடியபோது அதனைத் தடுக்கும் நோக்கில் அவர்களில் சுமார் முப்பது பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அடுத்தவரின் ஒழுக்கத்தை ஒழுங்குசெய்வதாக கூறிக் கொண்டு நடக்கும் அத்துமீறல்கள் அதிகமாகிவிட்டதால், காதல் முத்தம் என்ற இந்தப் போராட்டத்தை தாங்கள் நடத்துவதாக சமூக ஆர்வலர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆண்களும் பெண்களும் அளவுக்கு அதிகமான நெருக்கம் காட்டுவதை அனுமதிக்கிறார்கள் என்று கூறி கொச்சியின் தேநீர்க்கடை ஒன்றை கடும்போக்கு இந்துக்கள் சிலர் அடித்து உடைத்ததன் எதிரொலியாக இந்த முத்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க மாநில உயர்நீதிமன்றம் மறுத்திருந்தாலும், சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஆள்களைக் கைதுசெய்ததாக மாவட்ட பொலிஸ்துறைத் தலைமை அதிகாரி கூறினார்.

இந்தியப் பண்பாட்டுக்கு முரணானது என்று கூறி இந்து மற்றும் முஸ்லிம் என இரண்டு மதத்தினருமே இந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்த்திருந்தனர். (வ)

## மோடி சிறந்த பேச்சாளர் செயற்பாடுதான் மந்தகதியில்

### கெஜ்ரிவால் கூறுகிறார்

டில்லி, நவ.4

பிரதமர் நரேந்திர மோடி சிறந்த பேச்சாளராக உள்ளார். அவரது செயற்பாடுகள் தான் மந்தமாக இருக்கின்றன என்று ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"பிரதமர் நரேந்திரமோடி ஒரு சிறந்த பேச்சாளாராக இருக்கிறார். அவர் இதுவரை சரியான கருத்துக்களையே கூறி வருகிறார்.

ஆனால், அவரது செயற்பாடுகள் தான்மந்தமாகவே காணப்படுகின்றன. அவரது வாக்குறுதிகளில்பெரும்பாலானவை இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இனிமேல் அவர் என்ன செய்யபோகிறார் என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்"- என்றார். (வ)

# நில ஒதுக்கீடு முறைகேட்டில் சிக்குகிறார் ஜெயந்தி நடராஜன்

### விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு

டில்லி, நவ.4



தனியார் நிறுவனத்துக்கு அரசு நிலத்தை ஒதுக்கீடு செய்ததில் நடைபெற்ற முறைகேடு குறித்து முன்னாள் மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜனிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜார்க்கண்ட் மாநிலம், மேற்கு சிங்யும் மாவட்டத்தில் வனத்துறைக்கு சொந்தமான 512.43 ஹெக்டேர் நிலம், ஜிண்டால் ஸ்டீல் பவர் லிமிடெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டின்போது விதிமுறைகள் தளர்த்தப்பட்டதாக முறைப்பாடு எழுந்தது.

அதைத்தொடர்ந்து, அந்த நிறுவனத்துக்கு எதிராக சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. அதையடுத்து, அந்த நிறுவனத்திடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணை விவரங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றப் பத்திரிகை பதிவு செய்ய சி.பி.ஐ. தீவிரம் காட்டி வருகிறது. இதில் வனத்துறை அதிகாரிகள் சிலரது பெயரும் இடம்பெறும் என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில், மத்திய, மாநில அரசுகளின் தகவல்களையும் சி.பி.ஐ. ஆராய்ந்து வருகிறது. இந்தவழக்குத்தொடர்பாக சுற்றுச்சூழல் அமைச்சக அதிகாரிகள் மற்றும் ஜிண்டால் ஸ்டீல் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களிடமும் சி.பி.ஐ. தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அதையடுத்து, நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோது, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த ஜெயந்தி நடராஜனிடமும் விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (வ)

# எல்லையில் ஊடுருவிய சீனப் படை விரட்டியடிப்பு



லே, நவ.4

காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஏரி வழியாகவும், தரைவழியாகவும் ஊடுருவிய சீன ராணுவத்தினரை இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையினர் விரட்டியடித்தனர்.

காஷ்மீர் எல்லைப் பகுதியில் சீன ராணுவம் ஊடுருவும் சம்பவம் அடிக்கடி நடக்கிறது. சீன ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது, காஷ்மீரின் லடாக் எல்லை பகுதியில் ஊடுருவிய சீன ராணுவத்தினர் சில தினங்கள் முகாம்கள் அமைத்து தங்கினர். ராணுவ உயர் அதிகாரிகள் நடத்திய பேச்சுக்குப் பின்னும், சீன வெளியுறவுத் துறை உத்தரவு பிறப்பித்த பின்பே அவர்கள் முகாம்களை மூடி வெளியேறினர்.

இந்தநிலையில் லே பகுதியில் இருந்து 168 கி.மீ தூரத்தில் பாங்கூங் ஏரி உள்ளது. இந்திய-சீன எல்லையில் அமைந்துள்ள அந்த ஏரியில் சமீபத்தில் சீன ராணுவத்தினர் தங்களது ரோந்துப் படகில் 5 கி.மீ தூரம் இந்திய எல்லையில் உள்ள பிங்கர் 4 என்ற பகுதியில் ஊடுருவினர்.

அதையறிந்த இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையினர், தங்கள் படகில் சென்று அவர்களைத் தடுத்து நிறுத்தினர், அதேபோல் ஏரியை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள சாலை வழியாகவும் சீனப் படையினர் ஊடுருவியிருந்தனர். அவர்களையும் இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். இரு தரப்பினரும் இது எங்கள் எல்லைப் பகுதி என குறிக்கும் பேனர்களுடன்அணி வகுத்து நின்றனர். அதையடுத்து சீன ராணுவத்தினர் தங்கள் பகுதிக்கு திரும்பிச் சென்றனர். நீர் வழியாகவும், தரை வழியாகவும் ஒரே நேரத்தில் ஊடுருவிய சீன ராணுவத்தினரை. இந்தோ திபெத் எல்லைபாதுகாப்புப்படையினர் விழிப்புடன் செயற்பட்டு விரட்டியடித்துள்ளனர். (வ)

## வாகா எல்லையில் கொடி அமர்வு நிகழ்வு மூன்று தினங்களுக்கு ரத்து

இந்திய - பாகிஸ்தான் இடையே வாகா எல்லையில் நடைபெறும் கொடி அமர்வு நிகழ்ச்சி 3 நாள்களுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் இந்திய - பாகிஸ்தான் கொடி அமர்வு நடைபெறும் வாகா எல்லையில் மாலை நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் 3 பேர் உட்பட 55 பேர் உயிரிழந்தனர். மேலும் 200 பேர் காயமடைந்தனர்.

இந்தியாவின் அமிர்தசரஸிலிருந்து பாகிஸ்தான் செல்லும் நுழைவாயிலாக வாகா எல்லை அமைந்துள்ளது. அங்கு இந்திய - பாகிஸ்தான் ராணுவத்துக்கு இடையே கொடி அமர்வு நிகழ்ச்சி முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. (வ)



# அதிகாரபூர்வமற்ற கறுப்புப் பண பட்டியலை வெளியிட மாட்டோம்

### மத்திய நிதியமைச்சர் தெரிவிப்பு

டில்லி, நவ.4



கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் பற்றிய அதிகாரபூர்வமற்ற பட்டியலை வெளியிடுவது விசாரணையைப் பாதிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி வானொலியில் நேற்று உரையாற்றிய போது, வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தைமீட்பதற்கு அனைத்துவித நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்று குறிப்பிட்டார். அப்படியெனில் கறுப்புப்பணம் பதுக்கிய இந்தியர்கள் அனைவரின் பெயரையும்வெளியிட வேண்டும்என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தமது பேஸ்புக் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள அருண் ஜெட்லி, "கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் பற்றிய அதிகார பூர்வமற்ற பெயர்ப் பட்டியலை வெளியிடுவதுவிசாரணையைப் பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டின் பொருளாதாரத்தின்மீது பாதிப்பை ஏற்படுத்துவதுடன், வெளிநாடுகள் இந்தியாவுக்கு அளிக்க வேண்டிய வரிகளை நிறுத்தும் சூழ்நிலையும் உருவாகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களின் பட்டியலைப் பொறுத்தவரை, அந்தந்த நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி முறையாகவும், நேர்மையாகவும் விசாரணை நடத்தப்படும்" என்றும் ஜெட்லி உறுதியளித்துள்ளார். (வ)

## மனித குண்டுத் தாக்குதல் 55 பேர் உடல் சிதறிச் சாவு

### இந்திய - பாக். வாகா எல்லைப் பகுதியில் பயங்கரம்





லாகூர், நவ.4

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வாகா எல்லைச் சாவடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் 3 பேர் உட்பட 55 பேர் உயிரிழந்தனர். சுமார் 200 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண காவல்துறை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

இருநாட்டு தேசியக் கொடிகளையும் இறக்கும் நிகழ்ச்சியைக் கண்டுவிட்டு அதிகமானோர் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்போது, அங்குள்ள நுழைவுப்பகுதி ஒன்றில் மர்ம நபர் ஒருவரை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தினர். அதையடுத்து, அந்த மர்ம நபர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

இந்தத் தாக்குதலுக்கு, பெஷாவரில் கிறிஸ்தவ தேவாலயத்தில் கடந்த ஆண்டு மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி 78 பேரைக் கொன்ற அல்குவைதாவுடன் தொடர்புடைய ஜந்துல்லா என்ற அமைப்புஉரிமைகோரியுள்ளது. வசிரிஸ்தான், ஜார்ப்-இ-அஜப் பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. 20 வயது இளைஞர் ஒருவர், 25 கிலோ வரை வெடி பொருள்களைத் தனது உடலில் கட்டி வந்து வெடிக்கச் செய்தது தெரிய வந்துள்ளது என்றார் - அவர்.

### பிரதமர் மோடி கண்டனம்

வாகா எல்லை அருகே நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்குப் பிரதமர் நரேந்திரமோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் வலைத்தளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது: "இந்தத் தாக்குதல் மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. இது தீவிரவாதிகளின் கோழைத்தனமான செயலாகும். இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தோர் விரைவில் நலம் பெற இறைவனை வேண்டுகிறேன்" என்று மோடி அதில் குறிப்பிட்டுள்ளார். (வ)

## பாக். விமான தாக்குதலில் தீவிரவாதிகள் 13 பேர் சாவு

பெஷாவர், நவ.4

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் செயற்பட்டு வரும் தீவிரவாதிகள் மீது நிகழ்த்தப்பட்ட விமானத் தாக்குதலில் 13 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அந்த நாட்டுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளதாவது: போர் விமானங்கள் மூலமாக கைபர் மாவட்டத்தில் சனிக்கிழமை நடத்திய தாக்குதலில், 13 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும், சிப்பா, அகக்கேல், நலாமலிக்டேன் கேல் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற விமானத் தாக்குதல் நடவடிக்கையில், தீவிரவாதிகள் பயன்படுத்திய ஐந்து பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன.

அதே மாவட்டத்தில் பர்ரா, தீரா ஆகிய பகுதிகளில் இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையின்போது, தீவிரவாதிகள் இராணுவ வீரர்களை நோக்கிச் சுட்டனர். இதில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைபர் பழங்குடிப் பகுதியில் இராணுவம் நிகழ்த்தி வரும் கைபர்-1' தாக்குதல் நடவடிக்கையில், இதுவரை 50 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது. (வ)

## அமெரிக்காவில் தீ விபத்து; 5 பேர் சாவு

வொஷிங்டன், நவ.4

அமெரிக்காவில் மெய்ன் மாகாணம் போர்ட்லாந்து நகரில் குடியிருப்பு கட்டமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். ஒருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

போர்ட்லாந்து நகரில் தெற்கு மெய்ன் பல்கலைக்கழகம் அருகே அமைந்துள்ள குடியிருப்புக் கட்டடமொன்றில் மாணவர்கள் பலர் வசித்து வந்தனர். அங்கு சனிக்கிழமை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அந்தத் தீ விபத்தில், 5 பேர் உயிரிழந்தனர். ஒருவருக்கு பலத்த தீக் காயம் ஏற்பட்டது.

மாணவர்களில் எவரேனும் உயிரிழந்தனரா என்பதுகுறித்த விவரம் வெளியிடப்படவில்லை. கட்டடத்தின் முகப்பு பகுதியில் முதலில் தீப் பிடித்ததாகவும், பின்னர் அது குடியிருப்பின் பிற பகுதிகளுக்கு வேகமாகப் பரவியதாகவும் மாகாண தீயணைப்புத்துறைத் தலைவர் ஜோ தாமஸ் கூறினார். (வ)

## பர்கினா பாசோ நாட்டில் புதிய ஜனாதிபதியாக ராணுவத் தளபதி



அவுகாடவுகவோ, நவ.4

பர்கினா பாசோ நாட்டை 27 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த அதிபர் பிளாசி காம்போரேவுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். அதைத்தொடர்ந்து, அவர் பதவிநீக்கப்பட்டார். தற்போது இராணுவத் தளபதி ஐசக் யாகோபா ஜிடா இடைக்கால புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்கு ஆபிரிக்க குடியரசு நாடுகளில் பர்கினா பாசோவும் ஒன்றாகும். இங்கு கடந்த 27 ஆண்டுகளாக பிளாசி காம்போரே ஜனாதிபதியாக விளங்கினார். அவரது அடக்குமுறை ஆட்சியில் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தேர்தல்கள் நடைபெறவில்லை என்று பொதுமக்களும் எதிர்க்கட்சிகளும் கடந்த வெள்ளியன்று தலைநகர் அவுகாடவுகவோ உட்பட பல்வேறு நகரங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இது வன்முறையாக மாறி கலவரம் வெடித்தது.

இதில் நாடாளுமன்ற கட்டடம் உட்பட பல்வேறு அரசு கட்டடங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. இதில் 30 பேர் உயிரிழந்தனர். மேலும் 100 பேர் படுகாயம் அடைந்தனர். அதைத்தொடர்ந்து, பர்கினா பாசோவில் ஜனாதிபதி நீக்கப்பட்டு, இராணுவ ஆட்சி நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு தேர்தல்நடைபெறும் வரை இராணுவம் இடைக்கால ஆட்சியை மேற்கொள்ளும் என்று இராணுவ தலைவர் ஹனோரே தரோரே அறிவித்தார். முன்னாள் ஜனாதிபதி பிளாசி காம்போரே குடும்பத்தினரும் ஐவரி கோஸ்ட்டில் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், பர்கினா பாசோ நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறும் வரை இடைக்கால ஜனாதிபதியாக இராணுவத் தளபதி ஐசக் யகோபா ஜிடா பொறுப்பேற்பார் என்று இராணுவம் அறிவித்தது.

அதைத் தொடர்ந்து இராணு வத் தளபதி ஐசக் யகோபா ஜிடா புதிய அதிபராக நேற்று முன்தினம் மாலை பொறுப்பேற்றார்.

பர்கினா பாசோ நாட்டின் புதிய ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்றதற்கு எதிர்க்கட்சிகளும், அமெரிக்க மற்றும் மேற்கு ஆபிரிக்க யூனியன் நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (வ)

## எபோலா வைரஸை ஆயுதமாக பயன்படுத்த ஐ.எஸ்.ஐ.எஸ். திட்டம்

தற்போதைக்கு உலகை அச்சுறுத்தி வரும் இரண்டு விடயங்கள் எபோலா வைரஸும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும் தான். இந்நிலையில், தீவிரவாதிகளும் நோய்க் கிருமியும் ஒன்றிணைந்து செயற்படப் போவதாக, ஸ்பெயின் பாதுகாப்புத்துறை கண்டறிந்துள்ளது.



ஐ.எஸ். போராளிகள் மேற்கு நாடுகளிலுள்ள ஆதரவாளர்களுக்கு எபோலா வைரஸை இரசாயன ஆயுதமாகப் பயன்படுத்தி அந்த வைரஸை கொண்ட ஊசிகளை பொதுமக்களுக்கு குத்துவது உள்ளிட்ட சாத்தியமான வழிமுறைகள் அனைத்தையும் கையாண்டு பொதுமக்களைக் கொல்வதற்கு அழைப்பு விடுத்துள்ளதாக ஸ்பெயினின் பாதுகாப்புக்கான ராஜாங்க செயலாளர் பிரான்சிஸ்கோ மார்ரினெஸ் தெரிவித்துள்ளார்.

தனி ஓநாய் தாக்குதல்கள் என அழைக்கப்படும் தாக்குதல்களை நடத்துவது தொடர்பில் போராளிகளிடையே இடம் பெற்ற உரையாடல் ஒன்று கண்டறியப்பட்டதை அடுத்து அதில் உள்ள அச்சுறுத்தலை பாரதூரமான ஒன்றாகவே தான் கருதுவதாக பிரான்சிஸ்கோ மார்ரினெஸ் தெரிவித்தார்.

ஐ.எஸ். போராளிகள் இணையத்தளங்களைப் பயன்படுத்தி தமது போரை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார். போராளிகள் எபோலா வைரஸ் மட்டுமல்லாது நஞ்சுகள் மற்றும் ஏனைய கொடிய வைரஸ்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முடியும் எனத் தங்கள் உரையாடலில் பேசிக்கொண்டதாக மார்ரினெஸ் குறிப்பிட்டார். (வ)

## சர்வதேச எதிர்ப்பை மீறி கிழக்கு உக்ரைனில் தேர்தல்

சர்வதேச எதிர்ப்பையும் மீறி கிழக்கு உக்ரைன் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இடங்களில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில்உள்ள டொனெட்ஸ்க் நகர் உள்ளிட்ட பகுதிகளை டொனெட்ஸ்க் மக்கள் குடியரசு என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களதுகட்டுப்பாட்டின் கீழுள்ள மற்றொரு நகரான லுகான்ஸ்க் மற்றும் அதனை அடுத்துள்ள பிரதேசத்தை லுகான்ஸ்க் மக்கள் குடியரசு என கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில், அந்தப்பகுதிகளில் தேர்தல் நடத்த கிளர்ச்சியாளர்கள் முடிவு செய்தனர். தேர்தல் மூலம் டொனெட்ஸ்க், லுகான்ஸ்க் பகுதிகளுக்கு புதிய ஜனாதிபதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் படவுள்ளனர். இதற்கு ரஷ்யா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய யூனியன், நேட்டோ நாடுகள் இந்தத் தேர்தல் நடத்தப்படுவதை வன்மையாகக் கண்டித்துள்ளன.



ரஷ்ய மொழி பேசும் கிழக்கு உக்ரைன் பகுதியில் நடைபெறும் இந்தத் தேர்தல், அங்கு நிலவி வரும் பதற்ற நிலையை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்றுகருதப்படுகிறது. எனினும் ரஷ்யாவின் ஆதரவு உள்ள நிலையில், வாக்கெடுப்பு நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கியது. இந்தத்தேர்தலைக்கண்காணிக்க சர்வதேச பார்வையாளர்கள் எவரும் இருக்கவில்லை.

உக்ரைனின் அதிகார மையத்திலிருந்து விலகி இருக்கவும் தங்களுக்கு இப்போதுள்ள சுய அதிகாரத்துக்கு பொதுமக்களின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்தவும் இந்தத் தேர்தல்உதவும்என்றுடொனெட்ஸ் தேர்தல்ஆணையகத்தலைவர் ரோமன்லியாகின் கூறினார். (வ)


# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நன்மையே செய்யுங்கள்

ஒருவன் நல்லவற்றை நினைத்து நற்செயல்களையே செய்தால் அவற்றின் பயன்கள் மொத்தமும் நல்லதாக இருக்கும். இவை அவனது நினைப்பும் முயற்சியும் இல்லாமலேயே அவனை நற்செயல்களில் தூண்டுகின்றன. நல்லது செய்வதிலிருந்து தடுக்க முடியாத மனப்பாங்கு உண்டாகும் அளவுக்கு ஒருவன் மிக அதிகமாக நல்லவற்றைச் செய்வானானால் தன்னையும் மீறி அவன் தீமை செய்ய முயன்றாலும் அவனது மனப்பாங்குகளின் மொத்தமும் சேர்ந்து அவனைத் தீமை செய்ய விடாமல் தடுத்துவிடும். முழுக்க முழுக்க நல்ல மனப்பாங்குகளின் ஆதிக்கத்தில் அவன் இருக்கிறான். அந்த நிலையில் ஒரு மனிதனின் நற்பண்பு நிலைபெற்றுவிட்டது என்று கூறலாம். ஆமை தலையையும் கால்களையும் தன் ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டால் நீங்கள் அதைக் கண்டதுண்டமாக வெட்டிக் சிதைத்தாலும் அது வெளியே வராது. அதுபோல் தன் சங்கல்பங்களையும் புலன்களையும் கட்டுப்படுத்திய மனிதனின் இயல்பு மாறாமல் நிலை பெற்றுவிடும். அவன் அக ஆற்றல்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறான். அவனது சங்கல்பமின்றி அவற்றை வெளிப்படுத்த எதனாலும் முடியாது. நல்ல எண்ணங்களைத் தொடர்ந்து நினைப்பதால் மனத்தின் மேற்பரப்பில் நல்ல குறிக்கோள்களே சஞ்சரிக்கின்றன. அதனால் நல்லது செய்வதற்கான மனப்பாங்கு வலிமை பெறுகிறது. அதன் விளைவாக நாம் புலன்களைக் கட்டுப்படுத்தலாம் என்று உணர்கிறோம். இவ்வாறுதான் குணம் நிலைபெற முடியும். அதன்பிறகு மட்டுமே ஒருவன் உண்மையை அடைகிறான். அத்தகையவன் என்றென்றைக்கும் பத்திரமாக இருப்பான். அவனால் எந்தத் தீமையும் செய்ய முடியாது. நீங்கள் அவனை எந்தச் சூழ்நிலையில் வைத்தாலும் அவனுக்கு அபாயம் இல்லை. எனவே எப்பொழுதும் நன்மையே செய்யுங்கள்.

# பிரிட்டனில் விந்து வங்கி



பிரிட்டனில் கர்ப்பமடைய முடியாத பெண்களுக்கு உதவ விந்து வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டனில் குழந்தை பெற ஆசைப்படும் பெண்களுக்கும், ஓரினச்சேர்க்கையாளர்களுக்கும் உதவும் வகையில் தேசிய சுகாதார சேவை பெர்மிங்காமில் விந்து வங்கி ஒன்றை ஆரம்பித்துள்ளது.
இந்த விந்து வங்கியில் தேசிய சுகாதாரசேவைநோயாளிகளும், ஏனைய தனியார் நோயாளிகளும் கருத்தரிப்பு சிகிச்சை செய்து கொள்ளலாம்.
மேலும் கருத்தரிக்க விரும்பும் பெண்கள் இணையத்தளத்தில் ஆண்களின் உயரம், தலை முடி நிறம், இனம் என அனைத்தையும் தெரிந்து கொண்டு தங்களுக்கு தேவையானவற்றைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
இதற்கு 300-400 பவுண்ட்ஸ் செலவாகும் என்றும், தேசிய சுகாதார மையத்தின் மூலமாக வரும் பெண்களுக்கு கட்டணங்கள் ஏதும் இல்லை என்றும் கூறப்படுகிறது.
பிரிட்டனில் ஆறு தம்பதிகளில் ஒருவருக்கு குழந்தையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | 5 | | 3 | 9 | |
| 9 | 2 | | | | | | 4 | |
| | | 3 | | 9 | 6 | 8 | | |
| | 5 | | | 3 | | 4 | 8 | 7 |
| 7 | | | | 2 | | | | 9 |
| 8 | 9 | 4 | | 6 | | | 1 | |
| | | 8 | 2 | 7 | | 1 | | |
| | 1 | | | | | | 3 | 8 |
| | 4 | 9 | | 8 | | | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 2 | 4 | 5 | 9 | 7 | 8 |
| 9 | 5 | 7 | 8 | 3 | 1 | 4 | 2 | 6 |
| 4 | 2 | 8 | 7 | 9 | 6 | 5 | 3 | 1 |
| 8 | 9 | 5 | 3 | 6 | 2 | 7 | 1 | 4 |
| 7 | 6 | 2 | 4 | 1 | 8 | 3 | 9 | 5 |
| 3 | 4 | 1 | 9 | 5 | 7 | 6 | 8 | 2 |
| 1 | 3 | 9 | 5 | 8 | 4 | 2 | 6 | 7 |
| 2 | 8 | 4 | 6 | 7 | 3 | 1 | 5 | 9 |
| 5 | 7 | 6 | 1 | 2 | 9 | 8 | 4 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: நீங்கள் சாதனை புரிவீர்கள். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கடன் தொல்லை குறைந்து சந்தோசம் நிலவும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். உறவினர்கள் உங்களைத் தேடிவருவார்கள்.



**இடபம்**: குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள மூன்றாம் நபர் தலையீடு வேண்டாம். பரம்பரைச் சொத்துகளில் இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். உத்தியோகத்தில் கவனம் தேவை.



**மிதுனம்**: நண்பர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் பழகுங்கள். உறவினர்களிடம் வீண் விரோதத்தைத் தவிருங்கள். உடன் பிறந்தவர்களிடம் அன்புடன் பழகுங்கள். அவர்களிடம் பாசம் அதிகரிக்கும்.



**கடகம்**: மருத்துவரின் தெளிவான ஆலோசனைக்குப் பின்னரே எந்த மருந்தையும் உட்கொள்வது நல்லது. அதிக உழைப்பும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வேலையில் சாதனைகள் புரியலாம்.



**சிங்கம்**: பிற நாடுகளுக்குச் சென்று பணியாற்ற வாய்ப்பு ஏற்படும். வியாபாரிகள் சிலர் போட்டியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டி வரலாம். குடும்ப உறவினர்களிடம் விட்டுக் கொடுத்துச் செயற்படவும்.



**கன்னி**: வியாபாரிகள் புதிய தொழில் தொடங்கும் போது தகுந்த ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கவும். தொழில் நிமித்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.



**துலாம்**: தொழில் ஆரம்பிக்கும் முன் தகுந்த ஆலோசகரிடம் விவாதித்துச் செய்யவும். பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி, விற்பதில் பணம் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. உத்தியோகத்தர்கள் சக பணியாளர்களை அனுசரித்துப் போகவும்.



**விருச்சிகம்**: நம்பிக்கைக்கு உரிய ஆள்கள் வேலைக்குக் கிடைப்பார்கள். உங்கள் மதிப்பு மரியாதைக்கு பங்கம் விளைவிக்கும் காரியங்களில் ஈடுபட வேண்டாம். உங்களது குடும்ப சூழ்நிலை நன்றாக இருக்கும்.



**தனுசு**: மிகுந்த நன்மைகள் நடக்கும் காலகட்டமிது. பதவி உயர்வில் சிறிது காலதாமதம் ஏற்படலாம். உடன் பணிபுரிபவர்களும் மேலதிகாரிகளும் உங்களுக்குச் சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பொதுவில் நன்மையே நடக்கும்.



**மகரம்**: குடும்பத்தில் பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் அதனால் உயர்பதவி கிடைக்கும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.



**கும்பம்**: நீங்கள் உழைத்த அளவுக்கு, எதிர்பார்த்த பதவிகள் கிடைக்காமல் போகலாம். பொறுமையாக உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யவும். அதிக உழைப்பும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வேலையில் சாதனைகள் புரியலாம்.



**மீனம்**: உறவினர்கள் மற்றும் உடன் பணிபுரிவோரால் மிகுந்த நன்மைகள் உண்டாகும். உங்களது குடும்பச் சூழ்நிலை நன்றாக இருந்தால்தான் வெளிச் சூழ்நிலையும் சிறப்பாக இருக்கும். எனவே குடும்பத்தினரிடம் அன்பாகப் பழகுங்கள்.


## நாளை

**ஐப்பசி-19 புதன்கிழமை | 05.11.2014**

திதி: சதுர்த்தசி பி.இ.05.39 வரை
நட்சத்திரம்: ரேவதி
பி.ப.05.18 வரை

சுபநேரம்:04.34-06.04 வரை
இராகுகாலம்:12.04-01.34 வரை

# அதிரடியான ஆட்டத்தால் அசத்தியது சென்.பற்றிக்ஸ்



யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் நேற்று திங்கள்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிக்கும் இடையிலான ஆட்டத்தின் முதல் கால்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களமிறங்கியதால் ஆட்டத்தின் ஆரம்பமே விறுவிறுப்பானது.

நேரம் செல்லச் செல்ல சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்து புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். ஆனால் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியினர் தமக்கு கிடைத்த புள்ளிபெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். முதல் கால்பாதி ஆட்ட முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 33 புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியினர் 2 புள்ளிகளையும் பெற்றனர். இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் டொறிங்ரன் 12 புள்ளிகளையும், கென்றிஸ்சன் 10 புள்ளிகளையும், சந்தோஷ் 4புள்ளிகளையும், அனிஸ்ரன்3 புள்ளிகளையும் பெற்றனர். மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி சார்பில் சஜித்திரன் 2 புள்ளிகளையும் பெற்றார்.

இரண்டாம் கால்பாதி ஆட்டத்தின் போதும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் புள்ளி பெறும் வேட்டை தொடர்ந்த வண்ணம் இருந்தது. பதிலுக்குத் தமது அணிக்கான புள்ளிகளைப் பெறுவதற்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியினர் கடுமையாக போராடிய போதும் அவர்களால் 4 புள்ளிகளை மாத்திரம் தமது அணிக்காகப் பெறமுடிந்தது. இரண்டாம் கால்பாதி ஆட்ட முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 12 புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி 4 புள்ளிகளையும் பெற்றனர். இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் கென்றிஸ்சன் 5புள்ளிகளையும், சந்தோஷ்4 புள்ளிகளையும்,டொறிங்ரன் 3 புள்ளிகளையும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி சார்பில் அபினாஸ், லியன்டோ ஆகியோர் தலா 2 புள்ளிகளைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 45:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் இருத்தது.

மூன்றாம், நான்காம் கால்பாதி ஆட்டத்தின் போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தமது அணிக்கான புள்ளிகளை பெற்ற வண்ணம் இருந்தனர். பதிலுக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியினரும் மந்த கதியில் தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்றனர். இதில் மூன்றாம் கால்பாதி ஆட்டத்தின்போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 17 புள்ளிகளையும், மானிப்பாய் ஏஞ்ச்ல் சர்வதேசப் பாடசாலை அணியினர் 6 புள்ளிகளையும் பெற்றன்ர். இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் டொறிங்ரன் 12 புள்ளிகளையும், அனிஸ்ரன் 5புள்ளிகளையும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி சார்பில் சஜிந்திரன் 4 புள்ளிகளையும், சிம்ரென் 2 புள்ளிகளையும் பெற்றனர்.

நான்காம் கால்பாதி ஆட்டதிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி யினர் 24 புள்ளிகளையும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியினர் 9 புள்ளிகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் டொறிங்ரன் 12 புள்ளிகளையும் கென் றிஸ்சன் 6 புள்ளிகளையும்.சந்தோஷ் 4புள்ளிகளையும் கிறிஸ்ரன் 2 புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி சார்பில் அபினாஸ் 7 புள்ளிகளையும் சிம்ரென் 2 புள்ளிகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். ஆட்ட முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 87:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த-23)



கிரிக்கெட்டை வளர்க்கும் வகையில் ஆஸ்திரேலிய அமைப்பு ஒன்றினால் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை ஆகியவற்றுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. (த-23)

## விளையாட்டு கழகங்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4
மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆளுநர் கிண்ணம், எவ்.ஓ கிண்ணங்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் வாரங்களில் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி சுற்றுப் போட்டிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு லீக் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. எனவே விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது சமுகம் தருமாறு லீக்கின் தலைவர் அறிவித்துள்ளார். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(த-23)

# பற்றிக்ஸை வீழ்த்தியது யாழ். மத்திய கல்லூரி



யாழ்ப்பாணம், நவ. 4
இலங்கைப்பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. முதல் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் தமது அணிக்கான கோலைப் போட வேண்டும் என்ற எண்ணத்துடன் களம் இறங்கியதால் ஆட்டம் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்தது.

இதன்போது யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் றேம்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதல் கோலை அடித்தார். ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினரும் கோல் பெறுவதற்காக முயற்சிகளை மேற்கொண்டபோதும், அவைபயனளிக்கவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியபோது இரண்டு அணியினரும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தி தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக கடுமையாக மோதிக் கொண்டனர் இரு அணியினராலும் கோல் பெறமுடியவில்லை. ஆட்ட நேர முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது (த-23)

## வவுனியாவில் பூப்பந்தாட்ட பயிற்சி முகாம்



வவுனியா மாவட்ட வீர.வீராங்கனைகளுக்கான கிரீடாசக்தி தெரிவும் பூப்பந்தாட்ட பயிற்சி முகாமும் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் இடம் பெற்றது. இந்தப் பயிற்சி முகாமில் 80க்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கான பயிற்சிகளை வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்றுநர் கமலன் மற்றும் செந்தில் குமாரன் ஆகியோர் வழங்கினர். இந்தப் பயிற்சி முகாமில் வடமாகாண விளையாட்டுத் துறை பணிப்பளர் ராஜா ரணசிங்க வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி லலித் ஜெயசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)

# கோஹ்லிக்காக கொந்தளிக்கும் முரளி

ஒரு தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறியதால் கோஹ்லியை விமர்சிப்பது அற்பமான ஒன்று என முத்தையா முரளிதரன் கூறியுள்ளார். இங்கிலாந்து தொடரில் மோசமான ஆட்டத்தால் இந்திய அணியின் நட்சத்திர வீரர் கோஹ்லி திணறி வந்தார். இதனால் பலரும் அவரை விமர்சனப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் தொடரில் சிறப்பான ஆட்டத்தால் தன்னை விமர்சித்தவர்களுக்குப் பதிலடி கொடுத்தார். மேலும் தற்போது நடந்து வரும் இலங்கை அணிக்கு எதிரான தொடரில் அணித்தலைவராக அணியை வழிநடத்துகிறார்.

இதனையடுத்து இலங்கை அணியின் முன்னாள் சுழல்நாயகன் முத்தையா முரளிதரன் கோஹ்லிக்கு ஆதரவளித்துள்ளார். நேற்று முன் தினம் போட்டி தொடங்கும் முன் முரளிதரன் அளித்த பேட்டியில், கோஹ்லி ஒரு சிறந்த வீரர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை விளையாடி வருகிறார். எல்லோருக்கும் ஒரு மோசமான நிலை வரும். அந்த சமயத்தில் அவரை குறி வைத்து விமர்சிப்பது தவறு.

இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் கோஹ்லி தான். இலங்கை தொடரில் அணித்தலைவராக களமிறங்கியுள்ள கோஹ்லி, இந்த தொடரில் பல விடயங்களை கற்றுக் கொள்வார் என்று கூறியுள்ளார். (த)



# ஜோகோவிச் மீண்டும் சம்பியன்

பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி பிரான்சில் நடந்து வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரும், நடப்புச் சம்பியனுமான நோவாக் ஜோகோவிச் (செர்பியா) 6-2, 6-3 என்ற நேர் செற்றில் 10 ஆம் நிலை வீரர் மிலோ ராவ்னிக்கை (கனடா) தோற்கடித்து மீண்டும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் பாப்-மைக் பிரையன் சகோதரர்கள் பட்டம் வென்றனர். (த)



# புதிய சாதனையை தொட்டார் மிஸ்பா

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் அதிவேகச் சதம் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தான்- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதன் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 570 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. அதன்பின் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலியா 261 ஓட்டங்களில் சுருண்டது.

309 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் பாகிஸ்தான் 2ஆவது இன்னிங்ஸை ஆடியது. 3ஆவது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் 2 இலக்குகள் இழப்பிற்கு 61 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் 4ஆவது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து விளையாடிய யூனிஸ்கான் 46 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். பின்னர் மிஸ்பா உல் ஹக் களம் இறங்கினார்.

அதிரடி ஆட்டம் காட்டிய மிஸ்பா பவுண்டரி, சிக்சராக விளாசி தள்ளினார். இதனால் 21 பந்தில் 4 பவுண்டரி, 4 சிக்சர் அடித்து அரைச்சதம் அடித்தார்.

இதன் மூலம் 24 பந்தில் அதிவேகமாக அரைச் சதம் அடித்து சாதனை படைத்த தென்னாபிரிக்க வீரர் கலிஸின் சாதனையை மிஸ்பா முறியடித்தார்.

தொடர்ந்து விளையாடிய மிஸ்பா 56 பந்தில் 100 ஓட்டங்கள் எடுத்து மேற்கிந்திய வீரர் விவியன் ரிச்சர்ட்ஸின் சாதனையைச் சமன் செய்தார். (த)



# திட்டித் தீர்க்கும் மத்தியூஸ்



இலங்கை அணியின் தோல்விக்கு மோசமான துடுப்பாட்டமே காரணம் என இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியுள்ளார். இந்திய அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்தத் தோல்வி குறித்து மத்தியூஸ் கூறுகையில், ஆடுகளம் துடுப் பாட்டத்துக்கு ஏற்ற வகையில் இருந்தது. ஆனால் இலங்கை துடுப்பாட் டக்காரர்கள் சரியாக ஆடாததால் மிகவும் மோசமாக தோற்றோம். இமாலய இலக்கை எட்ட முதல் 10 ஓவர்களில் சிறப்பாக ஆட வேண்டியது அவ சியம். ஆனால் நாங்கள் முதல் ஓவரில் தடுமாறினோம். எங்களது பந்துவீச் சும் அனுபவம் இல்லாமல் இருந்தது. அவர்கள் நிறைய பாடம் கற்கவேண் டும். பிடிகளை தவறவிட்டதும் அணிக்கு பாதிப்பாக இருந்தது. இந்திய அணியை எப்போதுமே அதன் சொந்த மண்ணில் சந்திப்பது சவாலானது என்று கூறியுள்ளார். (த)

# 20 ஆண்டுகளின் பின் பாகிஸ்தான் அணிக்கு இமாலய பெரு வெற்றி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில், பாகிஸ்தான் அணி 356 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரைப் பாகிஸ்தான் அணி 2-0 எனக் கைப்பற்றியது. பாகிஸ்தான்-ஆஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் போட்டி அபுதாபியில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 570/6 (டிக்ளேர்), ஆஸ்திரேலியா 261 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 293/3 (டிக்ளேர்) ஓட்டங்கள் எடுத்தது. பின் 603 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, நான்காம் நாள் முடிவில், 4 இலக்குகள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்டீவன் ஸ்மித் (97), மிட்சல் மார்ஷ் (47) ஆறுதல் தந்தனர். பிராட் ஹடின் (13), ஜோன்சன் (0), மிட்செல் ஸ்டார்க் (2), நாதன் லியான் (0) ஏமாற்றினர். இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 246 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்த வெற்றியின் மூலம் 20 ஆண்டுகளுக்கு பின்னர் பாகிஸ்தான் அணி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. (த)

## தொடர்ச்சிகள்

### மத

கள் குறித்து இந்த சந்திப் பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையில் மத நல்லிணக்கம் அவசியமானது என்ற பிரிட்டனின் நிலைப்பாட்டையே அஸ்கிரிய மல்வத்து பீடாதிபதிகளும் கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"அளுத்கமவில் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவத்தை பாடமாகக் கொண்டு செயற்பட முடியும். குரோதத்தை தூண்டக் கூடிய பேச்சைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமைக்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிக்கவே பிரிட்டன் விரும்புகின்றது.

போரின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டியது. இலங்கையில் முழு அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடாக அமைந்துள்ளது. குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் ஒன்றை எட்டுதல் போன்றவற்றின் ஊடாக முழு அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### சாட்சியாக

தார். எனது மகன் காணாமற் போனமை தொடர்பில் பல்வேறு இடங்களிலும் முறைப்பாடுகள் செய்துள்ளேன். கடந்த ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலிருந்து எனக்கு துண்டு ஒன்று தந்தார்கள். அதில், கொழும்பு 4 ஆம் மாடிக்கு வருமாறு தெரிவித்தார்கள்.

இதன் போது, எனது மகனை இராணுவத்தினரிடம் கையளித்த சம்பவத்தினை நேரடியாகக் கண்ட சாட்சிகளையும் அழைத்து வருமாறே தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நான், எனது சாட்சிகளை அழைத்துக் கொண்டு கொழும்பு சென்றேன்.

இதன் போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், ஏன் இங்கு வந்தீர்கள் எனக் கேட்டனர். அதற்கு நான், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தினூடாக வழங்கப்பட்ட அறிவித்தலை அவர்களுக்கு கொடுத்தேன். இதன் பின்னர் எனது சாட்சிகளிடம், பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர் என்று அவர் தெரிவித்தார்.

ஆயினும் இதனை, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவினரிடம் நேற்றுத் தெரிவித்த போது அவர்கள் இது தொடர்பில் எந்த அக்கறையும் செலுத்தவில்லை. (ഉ-5)

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினம் இராசையா

ஐந்துவேம்படி, தாவடி கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இராசையா 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் மனைவியும், காலஞ்சென்ற பத்மாசனி மற்றும் ஸ்ரீகந்தராசா (மாருதி மோட்டோர்ஸ், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்), விவேகானந்தன், விபுலானந்தன் ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் விமலாதேவி, ரஜனி, புஷ்பா ஆகியோரின் மாமியும், தக்ஷா, ஷியானி, வினோஜ், நிவேகா, சர்மினோஜ், மயூரகா, சத்வினு, வினோ யனு, மேகலா, சுகன்யா, ரஜீவன், கஜன், பவித்திரா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரமேஸ்வரி மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரதி, சஞ்ஜிப், ஹரிஷ், சுமித்திரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐந்து வேம்படி,
தாவடி கிழக்கு, கொக்குவில்.

(53727) (10)

தகவல்:
**பிள்ளைகள்.**

## முழு உலகத்தின் பார்வையும் மஹிந்த சிந்தனை மேல்தான்

*இப்படிக் கூறுகின்றார் ஜனாதிபதி மஹிந்த*

கொழும்பு, நவ.4
உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் மாத்திரமல்லாது வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் கூட மஹிந்த சிந்தனையை ஆராய்ந்து வருகின்றன என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூட்டுறவு பாதுகாப்பு நிறுவனத்தின் புதிய கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"வெளிநாடுகள், உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதியம் என்பன ஆலோசனைகளை வழங்கினாலும் அந்த ஆலோசனைகளை அப்படியே செயற்படுத்தாது இலங்கைக்கே உரிய பொருளாதார முறையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்தார். (ந)

## மருத்துவ முகாம் இன்று

தென்மராட்சி, நவ.4
தென்மராட்சி கல்வி வலயம், யாழ். சுகாதார சேவைகள் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை இன்று மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.3 மணிவரை நாவற் குழி 300 வீட்டுத்திட்டத்தில் நடத்தவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## வாழ்த்துகின்றோம்



**சிறீதரன் குமுதினி தம்பதியரின் புதல்வியும் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவியுமான செல்வி ஹேஷினி அவர்களுக்கு 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்றமைக்கும் கற்பித்த ஆசிரியை, அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**


Congratulation

நீர்வேலி. (53721)(4.3.6)

அம்மா, அப்பா,
சி.ஏரசி (தங்கை)

## மரண அறிவித்தல்

### செல்வன் சுந்தரநடராசா சுபேசன்



வட்டு மேற்கு, மாவடிச்சந்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சுந்தரநடராசா சுபேசன் (யா/வட்டு மத்தியகல்லூரி க.பொ.த. சா/த மாணவன்) நேற்று முன்தினம் (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சுந்தர நடராசா-லச்சுமி தேவி தம்பதியரின் புதல்வனும், சுதாகரன் (குவைத்), சுஜாத்தா (முன்னாள் ஆசிரியர், மூளாய் அமெரிக்கன் மிஷன்), சுஜித்தா (பல் கலைக்கழக 3ஆம் வருட மாணவி), சுவர்ணா (சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜனகனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடிச் சந்தி,
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

(53741) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வேலையாள் தேவை

பான்ஸி ஹவுஸ் ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை. கணினி அறிவு உடையவர் விரும்பத் தக்கது.

தொடர்புகளுக்கு:
**077 971 1668**

(52743) (10)

## விற்பனைத்துறையில் வேலைவாய்ப்பு

IDEAL VISION

- இளைஞர் யுவதிகளே இதோ அரிய சந்தர்ப்பம்!
- சந்தைப்படுத்தல் பணியாளர் தேவை.
- கல்வித்தகைமை O/L போதுமானது
- வயது எல்லை:18-35

விண்ணப்பத்துடன் நேரடியாக அலுவலக நேரத்தில் சமூகம் தரவும்.
நேரம்: 9.00am-4.30pm (53733)(4.6.3)
T.P: 077 042 7947/021 222 9206
Address No: 177 2nd Cross Road, Jaffna.
பணிப்பாளர். IDEAL VISION Company

## மரண அறிவித்தல்



### பொன்னையா ஜோன் அலோசியஸ் ராஜரட்ணம்

730, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஜோன் அலோசியஸ் ராஜரட்ணம் நேற்று (03.11.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் பேர்க்மன்ஸ் பொன்னையா-மேரி யோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி கிறிஸ் டினா யூடித்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நீக்கிலஸ்-தங்கமேரி தம் பதியரின் அன்பு மருமகனும், ராயூ, நந்தா , றகு ஜனத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜீ றொசானி றமனி றொமானி ஆகியோரின் மாமனும், நிரோஷன், டினுஸன், ருத்ஸன் நிலான்சிகா சரன், இவோன், செரின், அரண், சணன், சேன், சோன், சசின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (05.11.2014) புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ். அடைக்கலமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53742) (10)

தகவல்: (மகன்)
**ராஜரட்ணம் ஆனந்தராஜ்**







உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரத்துக்கு அருகில் 2 பேர் தங்குவதற்கு ஏற்ற சிறிய வீடு தேவை.

தொடர்புகளுக்கு:
**077 7796 222**

(53737) (10)


2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.


## மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையில் உள்ள பாவித்த மோட்டார் சைக்கிள்கள் தேவை.

அழையுங்கள்:
077 908 6737 யாழ்ப்பாணம். (53734) (7.6.3)

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு :★ போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: 021 224 1466/077 489 7865 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்) /077 343 4657(பருத்தித்துறை)
077 593 2007 (புங்குடு)
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.
(53735) (4.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர் இரத்தினசபாபதி சுகீஸ்கரன் (கணித ஆசிரியர்) அவர்களின் அன்புத் தாயார்

### இரத்தினசபாபதி சரஸ்வதி

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் (53739) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி மதியாபரணம் சிவலிங்கம்



துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் சிவலிங்கம் நேற்று (03.11.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் (இன்ளப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி-நெல்லியடி) மனைவியும், சிவரஞ்சினி (நியூசிலாந்து), மனோரஞ்சன் (சுவிஸ்), சிவகலா, மதிவண்ணன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கதிரவேல் (நியூசிலாந்து), ஜானகி (சுவிஸ்), உதயராஜன் (ஆசிரியர், விக்னேஸ்வராக். கல்லூரி) ஆகியோரின் மாமியும், சிவன்கா, கபிலன், மதுஷா, மனோஜா, மகிஷன், நிரூஜா, நிவேதா, லக்ஷன், துஷாந்த் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2014) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கியான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை கிழக்கு, கரவெட்டி.
T.P: 077 6982703

(10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2015

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2015ஆம் திகதி முதல் 31.12.2015ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா 500.00
கேள்விப்படிவம் விநியோகித்தல் - 05.11.2014 - 20.11.2014 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 20.11.2014 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 21.11.2014 மு.ப. 10.30 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 20.11.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு :**

1. கூட்டுறவுச் சங்ககங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2015 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்குரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00உம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி /கருவாடு / கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5. கேள்வியில் சித்தி பெறுபவர் குத்தகைக்கு எடுக்கத்தவறின் இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.
6. சுப்பிரமணியம் பூங்கா சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
   1. சிற்றுண்டிச்சாலை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
   2. சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தம் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
   3. மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.
7. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT, 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
8. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் மாநகர சபைக்கே உரியது.
10. கேள்விப்பதிரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

### இறைச்சிக்கடை குத்தகை - 2015

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 131,250.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 57,225.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 117,600.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 229,425.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 73,500.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 73,500.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 346,500.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 81,900.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 110,800.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 110,800.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 150,150.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 546,650.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 542,200.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 102,700.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 309,750.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 473,550.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 98,200.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 88,850.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 199,500.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 93,300.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 88,850.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 88,850.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 88,850.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 93,300.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 210,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 66,400.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 13,500.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 279,850.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 31,800.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 475,800.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 520,700.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 382,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 397,950.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 448,890.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 378,000.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 301,800.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 115,500.00 |

### பொதுச்சந்தைக் குத்தகை 2015

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,735,200.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,462,900.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,470,000.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,326,150.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 606,400.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 60,900.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 173,800.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 73,000.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 90,300.00 |
| 10 | பஸ்நிலைய மாநகரசபைக் கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள துவி.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 262,500.00 |
| 11 | யாழ் நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 36,750.00 |
| 12 | இந்துவீடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 52,500.00 |
| 13 | புங்கன் குளமீ சந்தை | 2,000.00 | 9,450.00 |
| 14 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 84,000.00 |

மேலதிக விவரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0718628576


**மாநகரசபை அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**
**04.11.2014**

**ஆணையாளர்,**
**மாநகரசபை.**

(C/17541)(10.6.3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை



வடமராட்சி கிழக்கு உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், 123, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், உமையாள்புரம் அ.த.க. பாடசாலை) நேற்று (03.11.2014) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சீதேவிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், புவனேஸ்வரியம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை) அன்புக் கணவரும், கு.இராச லட்சுமியின் அன்புச் சகோதரனும், சந்திரகுமாரி (ஆசிரியை, குமர உதயம் தமிழ் வித்தியாலயம், கொழும்பு), காலஞ்சென்ற சந்திரராணி மற்றும் ஞானச்சந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதரூபன் (பரீட்சைத் திணைக்களம், கொழும்பு), வாசுகி (சுவிஸ்), பிரான்சிஸ்சேவியர் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், டானியல் அனோஜன் (பொறியியல் பீட மாணவன், மொறட்டுவ), ஷெரீனா நிரூபினி (மெதடிஸ்த கல்லூரி, கொழும்பு), பிரசாந்த், பிரியந்த், பிரதீபா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று** (04.11.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இரணைமடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

123, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.
(32, 4/1, றோகினி வீதி, கொழும்பு 6)

(சி/17544) (7.6.3)

தகவல்: **பொ.அற்புதரூபன்**
077 920 9809, 077 129 8210

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் சிவப்பிரகாசம்
**(மண்கும்பான்)**

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாக கொண்ட மயில்வாகனம் சிவப்பிரகாசம் 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்-இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், வசந்திர தேவி (வசந்தி-இந்தியா), குகநேசன் (சோதி), சங்கீதா நகைமாளிகை), சிவநேசன் (மோகன்-பிரான்ஸ்), சுமதி, விஜியநேசன் (விஜி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலஸ்ரீன் (யோகன்), சாந்தினி, பரிமளா, மோகன ராசா (வர்த்தகர் நாரம்பளை), கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, மகாலிங்க சிவம், சங்கரலிங்கம், சுந்தரலிங்கம், பாலசுப்பிரமணியம் மற்றும் வினாயக மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, நல்லநாதசிவம், தவமணி மற்றும் பரமேஸ்வரி, கமலதேவி, செல்லப்பாக்கியம், ஜெயலட்சுமி, தங்கத்துரை, இராசரெத்தினம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பானுரோகா-கஜேந்திரகுமார், நிரோஷன், சங்கீதா-நீறஜன், சயந்தி, வசந், டக்ஷிகா, நிஷாத், திவ்விய பிரசாத், கஜயலக்ஷன், ரனுஜன், திவாஸ்கர், சக்ஷிதா, அனுஸ்கா, மானுயா ஆகியோரின் அன்புப் பேரனும், டக்ஷா, சஹானா, ஹர்ஷயா, சபரீஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53735) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

## நல்லூர் பிரதேச சபை,
## கொக்குவில்.
## 2015ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2015 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 21.11.2014 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற் றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தலைவர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலு வலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக் களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப் படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 20.11. 2014 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவ தொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 01.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2015 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல. | சந்தைகள்,(துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள்) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த ரூபா.) |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உ.ப அலுவலகம்** | | | |
| 01. | திருநெல்வேலிச் சந்தை (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத் துடன்) | 1000.00 | 15000.00 | 17,490,000.00 |
| 02 | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 220,000.00 |
| 03. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக் கடை இல.01 | 500.00 | 5000.00 | 386,210.00 |
| 04. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக் கடை இல.02 | 500.00 | 5000.00 | 275,330.00 |
| | **கொக்குவில் உ.ப அலுவலகம்** | | | |
| 01. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத் துடன்) | 1000.00 | 10,000.00 | 827,420.00 |
| 02 | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 330,550.00 |
| 03. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 117,756.00 |
| 04. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 375,661.00 |
| 05. | கொக்குவில் உப அலுவலக சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 66,000.00 |
| 06. | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 500.00 | 5000.00 | 148,500.00 |
| 07. | கொக்குவில் உப அலுவலக இல. 329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 198,330.00 |

**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி,**
**04.11.2014**

**ப.வசந்தகுமார்,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**


**Jana Digital** 0770731654

## வேலைவாய்ப்பு

✓ **டிஜிற்றல் மெசின் இயக்குனர்** (ஆண்/பெண்)
**Digital machine operator** (Male or Female)
பழகி வேலை செய்ய விரும்புவர்கள் விண்ணப்பிக்கலாம்

✓ **பக்க வடிவமைப்பாளர்** (ஆண்/பெண்)
**Layout Designer** (Male or Female)
CorelDRAW, Photoshop and other Applications.


✓ **காரியாலய உதவியாளர்** (ஆண்)
**Office Assistant** (Male)

உங்கள் சுயவிவரக்கோவையுடன்
**05.11.2014 அன்று**
கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

**ஜனா** டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
**021 221 3233**


## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் யேசுநாயகம்



யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலை யைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் யேசுநாயகம் கடந்த 02.11.2014 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம்-ஆனாசிதம் பதியரின் செல்வப் புதல்வனும், பூரணத்தின் அன்புக் கணவரும், ஸ்ரான்லி சத்தியசீலன் (பிரான்ஸ்), றஞ் சித் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்), பிலிக்ஸ் மகேந் திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வில்பேட் மோகன் ராஜ், தயாழினி (தயா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, ஜெயராணி, அஜந்தா, வதனி, றெஜினோல்ட் ஆகியோரின் அன்பு மாமனும், நிறோசன், சில்வன், றஜன், றொசினி, றொயித், றொசின், அர்லின், அர்னோ, ஆன்சலின், ஜெனிபன், மஜிபன், ஜெனிஷா, சந்திறின், சபின், ஸ்ரெபின் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் நாளை (05.11.2014) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியின் பின்னர் யாகப்பர் ஆலயச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலை.** (C/17545) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை



(முன்னாள் அதிபர், கிளி/உமையாள்புரம் அ.த.க. பாடசாலை, பிரபல் ரோதி))

எமது பாடசாலையில் நீண்டகாலம் அதிபராக இருந்து அரும்பணி யாற்றி ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை அவர்கள் 03.11.2014 திங்களன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் அன்னாரது குடும்பத்தினருடைய துயரில் பங்குகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**கிளி/உமையாள்புரம் அ.த.க. பாடசாலை,**
**ஆனையிறவு-பளை.**

# தொடர்ச்சிகள்

## லயன்

நிலையில் யார் எங்கே இருக்கின்றனர் என்று தெரியாது.

200 வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்களின் லயன் வாழ்க்கைக்கு முடிவுகட்ட வேண்டிய காலம் வந்து விட்டது. மாறி மாறி வந்த அரசுகள் மலையக மக்களின் தேவையை நிறைவேற்றவில்லை.

தற்போதைய நிலையில் 2,000 மக்கள் முகாம்களில் இருக்கின்றனர். இன்னும் 10,000மக்கள் மண்சரிவு அபாயத்துக்குள் இருக்கின்றனர் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நிலையில் அந்த மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. அவர்களுக்குப் பாதுகாப்பான மாற்றிடம் வழங்கவேண்டும்.

தேயிலைத் தோட்டங்கள் இல்லாத பகுதிகளில் குடியமர்த்தப்பட்டால் அவர்கள் கஷ்டத்தை எதிர்நோக்குவர். இவ்வாறான நிலையில் அந்த மக்களுக்கு மாற்றுத் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவும், பாதுகாப்பான பூமியில் தனித்தனி வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமது காணிகளில் சிறு சிறு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதற்கு அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து சிறந்ததொரு திட்டத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்தவேண்டும் - என்றார்.

## ஒரே

வுள்ளது. அதேவேளை 7 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் 43 வயதுக்கு உட்பட்ட பெண் ஆசிரியர்களும், 48 வயதுக்கு உட்பட்ட ஆண் ஆசிரியர்களும் வெளிமாவட் டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். குறித்த வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வலயத்துக்குள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

பட்டதாரி ஆசிரியர்களாக இருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு வெளி மாவட்டம் 8 வருடங்கள் பணிபுரியவேண்டும் என்று முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது. அது 6 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நியமனம் பெற்றவர்களுக்கு, அவர்களது நியமனக் கடிதங்களில் அவர்கள் பணிபுரியும் பாடசாலைகளில் 5 வருடங்கள் பணிபுரிய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் குறித்த பாடசாலையில் கல்வி கற்பித்ததனாலேயே அவர்களுக்கு நியமனம் கிடைத்தது என்ற காரணத்தினால் அவர்களுக்கு 10 வருடங்கள் அதே பாடசாலையில் கல்வி கற்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆயினும் அவர்கள் குறித்த பாடசாலைகளில் ஏற்கனவே பல வருடங்கள் கல்வி கற்பித்துள்ளனர் என்ற காரணம் ஆராயப்பட்ட பின்னர் அவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டது போன்று 5 வருடங்களின் பின்னர் அவர்கள் இடமாற்றம் பெறத் தகுதியுடையவர்கள் என்று தீர்மானிக்கப் பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக 6 வருடங்கள் தேவைப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## அச்சுவேலி

பொறுப்பதிகாரி வலி.கிழக்குப் பிரதே சபையின் தவிசாளர், உள்ளூர் பிரமுகர்கள் பொது மக்கள் கலந்துகொண்டனர். இரவு 7 மணிக்குப் பஸ் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. கொழும்பு பயணத்துக்கான ஒரு வழிக் கட்டணம் ரூபா 750 என அறிவிக்கப் பட்டுள்ளது. 54 இருக்கைகளைக் கொண்ட அரைச் சொகுசு பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு-அச்சுவேலி பஸ் சேவை இரத்மலானையில் இருந்து ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தினசரி இரவு பஸ் சேவை நடைபெறும். (த-11)

## போதனா

அதன்படி சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான பொறுப்பு மத்திய சுகாதார அமைச்சு அறிவுறுத்தலின்படி போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் மத்திய பொறியியல் கட்டட ஒப்பந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டு சுமார் 2 மாதங்களாகின்றபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் வைத்தியசாலையில் இன்றுவரை சிற்றுண்டிச்சாலைக்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதனால் நோயாளர்களுக்கு, அவர்களைப் பார்வையிடுவோர் உணவுப் பொருள்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். உரிய இடம் அமைத்துக் கொடுக்கப்படாமையால்பார்வையிடுவோரும்சிரமங்களுக்கு மத்தியிலேயே அங்கு உணவுப் பொருள்களைப் பெற்றுச் செல்கின்றனர். தவிர்க்க முடியாத சூழ்நிலையிலேயே தற்போது அங்கு சிற்றுண்டிச்சாலை இயங்கி வருகிறது.

முன்னர் இருந்த இடத்தில் உரிய சுகாதார வசதிகள் இன்மையால் அதனை இடைநிறுத்தி உரிய திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் இயங்க வைக்குமாறு அது தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்று கூறியிருந்தது. அதனால் தற்போதுள்ள இடம் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் சுகாதார அமைச்சு அதில் உரிய அக்கறை செலுத்தாமையால் வைத்திய சாலையில் இன்றுவரை சிற்றுண்டிச்சாலைக்கு என்று எதுவித பணிகளும் மேற்கொள்ளப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## நானாட்டான்

துள்ளதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உட் சென்றுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

நானாட்டான் பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் உள்ள பிரதான வீதிகள் உயர்த்தப்பட்டுக் கொங்கிறீட் வீதிகளாக மாற்றப் பட்டுள்ளமையினாலேயே வீதிகளில் உள்ள நீர் வீடுகளுக்குள் செல்வதாக அந்த மக்கள் தெரிவித்தனர். (த-56)

## உரிய மரியாதை

கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத்தீர்வு குறித்து உரிய செயற்றிட்டம் இல்லாமல் இந்த அரசில் தொடர்ந்தும் நீடிக்கக்கூடாது என்ற அங்கலாய்ப்பு எமது ஆதரவாளர்கள் மத்தியில் மேலோங்கி இருக்கிறது.

இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் முக்கியமான தேசிய மட்டத் தேர்தல் நடைபெறலாமென்ற நிலையில், எமது கட்சியின் தயவை நாடியிருக் கின்ற எந்தத் தரப்பாக இருந்தாலும் எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்த சரியான அறிவித்தலில்லாமல் இந்தக் கட்சியை மீண்டும் ஒரு தடவை போடுகாயாகப் பாவிக்கலாம் என எவராவது நினைத்தால் அது நடக்கமாட்டாது என்பதை மிகத் திட்டவட்டமாகக் கூறிவைக்கின்றேன்.

இன்னும் ஒரு கட்டம் எஞ்சியிருக்கிறது. அதற்கு அப்பாலும் ஒரு முக்கியமான தேர்தல் வரவிருக்கின்றது. எனவே, முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் பெறுமான முள்ளவையாகக் கணக்கில் எடுக்கப்படுவதற்கான ஒரு நிலையில்லாமல் நாங்கள் தீர்மானத்துக்கு வரமாட்டோம் என உறுதியாகக் கூறுகின்றேன்- என்றார்.

## அதிகரிக்கின்றது

டாந்தம் அதிகரித்து வருகின்றது. ஆனால் இது தடுக்கக்கூடியது. வயது அதிகரிக்கும்போது இது தொற்றுவதும் அதிகரிக்கும். அதிகமாக ஆண்கள் தொற்றுக்குள்ளாகும்போதும் பெண்களின் இறப்பு வீதமே அதிகமாகவுள்ளது. பரம்பரைக் காரணங்கள், முதலில் இந்த நோய் வந்திருந்தால் தொற்றும் சாத்தியம், உயர்குருதி அமுக்கம் கட்டுப்படுத்தத் தவறுதல்,கொலஸ்ரோல் பாதிப்பு ஆகியவற்றால் இந்த நோய் அதிகம் தொற்றுவதற்குச் சாத்தியம் உள்ளது.

இந்த நோய் ஏற்பட்டால் முகத்தில் சமச்சீரற்ற தன்மை ஏற்படும். திடீரென உடலின் ஒருபகுதி இயங்காது விடல், கதைக்க முடியாது போதல் ஏற்படும். இத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்தியரை நாடவேண்டும்.

இவற்றைத் தவிர்க்க உயர்குருதி அமுக்கம் ஏற்படும் உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். இயன்றளவு பழங்கள், மரக்கறிகளை உட்கொள்ளல், உடற்பயிற்சியைத் தினமும் 30 நிமிடங்களாவது செய்தல் வேண்டும். 30 வீத உடற்பயிற்சி காரணமாக இந்த நோய் தொற்றுவது 70 தொடக்கம் 80 வீதம் குறையும். உப்பின் அளவைக் குறையுங்கள். ஒரு நாளுக்கு ஒரு தேக்கரண்டி உப்பைப் பயன்படுத்துங்கள்.

இன்றைய இளைஞர்கள் சமுதாயம் எதிர்கால நலனில் அக்கறை இல்லாது போகின்றது. அது பாதிப்பையே ஏற்படுத்தவுள்ளது. எனவே மது அருந்துதல், புகைத்தல் உள்ளிட்ட பழக்கவழக் கங்களைக் கைவிடுங்கள் - என்று கூறினர்.

இந்தச் சந்திப்பில் யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் முரளி வல்லிபுரநாதன், சமுதாயத்துறை மருத்துவரும் செயலாளருமான ஆர்.சுரேந்திரகுமாரன், உப தலைவரும் மருத்துவ நிபுணருமான நளாயினி ஜெகதீசன், நரம்பியல் நிபுணரும் பத்திராதிபருமான திருமதி அஜந்தா கேசவ ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-4)

## வடக்குப்

னால் பாதிக்கப்பட்ட சரியான விபரங்களை அரசு இன்னமும் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. எத்தனை பேரை காணவில்லை என்ற விவரங்களை அரசு இன்னும் வெளியிடவில்லை. கிளிநொச்சியில் கல்விக்கான ஒரு கூட்டம் நடத்துவது என்றால் கூடச் சரியான விபரங்களைக் கேட்டறிகிறது இராணுவம். ஆனால் மண்சரிவு ஏற்பட்டு எத்தனை நாள்கள் கடந்துவிட்டன. சரியான விபரங்களை அரசினால் கூறமுடியாதுள்ளது.

கிளிநொச்சி வலயத்தில் கிராம மாணவர்களும் தரம் 05 புலமைப் பரீட்சையில் சாதனைகள் நிலைநாட்டுவதன் காரணமாக கிராம மாணவர்கள் நகரத்திற்குத்தான் செல்லவேண்டுமென்ற நிலைமைகளை மாற்றியுள்ளது. வெற்றிபெற்ற மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். குறிப்பாக செல்வி மதுமிதா விஜயகுமார் மாவட்டத்தில் 183 புள்ளிகளைப்பெற்று முதல்நிலைமைக்கு வந்ததற்குப் பாராட்டுகின்றேன் - என்றார்.

கல்லூரி முதல்வர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடாதிபதி அருளம்பலம் அற்புதராசா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-18)

## நம் நாட்டில்

டும். ஆனால் அரச ஊழியர்களும் பொலிஸாரும் அரசுக்கு சார்பாக மட்டும் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலையில் சுயாதீன தேர்தலொன்றை இங்கு எப்படி நடத்தமுடியும்?

ஒவ்வொரு நாடுகளிலும் தேர்தல்கள் சிறப்பாக நடக்கவேண்டும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பு செயற்படும். ஆனால், அதன் தலைவராக எமது ஜனாதிபதி உள்ளார். இந்த நிலையில், இலங்கையில் தேர்தல்கள் நடக்கும் விதம் முற்றிலும் முரண்பாடானது - என்றார்.

## இராணுவத்திடமே

கையில், "எனது மூத்த மகனை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வட்டுவாகலில் வைத்து இராணுவத்திடம் கையளித்தேன். இராணுவத்தினரின் அறிவுப்புக்கு அமையவே எனது மகன் சரணடைந்தார். வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினர் எனது மகனை மாத்திரம் பொறுப்பேற்கவில்லை. அவருடன் 40 பேர் வரையில் இருந்தார்கள்.

அவர்கள் அனைவரையும் சிவப்பு நிற பஸ்ஸில் ஏற்றினார்கள். எனது மகன் அருகில் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. மகனையும் ஏனையோரையும் அந்த சிவப்பு பஸ்ஸில் ஏற்றி விட்டு எங்களைத் தனித்து அனுப்பினார்கள்.

எங்களது பஸ்ஸின் பின்னாலேயே, எனது மகனை ஏற்றிய பஸ் வந்தது. வவுனியா நகர் வரை எங்களைப் பின்தொடர்ந்து வந்த அந்த பஸ் பின்னர் எங்கே சென்றது என்று தெரியவில்லை."- என்று கூறினார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அவர் தொடர்பில் இருந்தாரா?" என்று ஆணைக்குழுவினர் கேட்டனர். "தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருக்காவிட்டால் பின்னர் ஏன் அவர் வட்டு வாகலில் இராணுவத்தினரிடம் சரணடைய வேண்டும்" என்று என்று அந்தத் தாய் பதிலுக்கு கேள்வி எழுப்பினார்.

"அவர் மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருக்கவில்லை. இங்கிருந்த எல்லோருமே, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பில்தான் இருந்தார்கள். அரச வேலைக்கான வாய்ப்பு இங்கிருக்கவில்லை. அதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பலரும் கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்தார்கள்"- என்றும் அந்தத் தாய் பதிலளித்தார்.

ராஜேந்திரம் தவமலர் என்பவர் சாட்சியமளிக்கையில், "எனது மகன் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டாய ஆள் சேர்ப்பில் கொண்டு செல்லப்பட்டார். அதன் பின்னர், ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் போது ஓமந்தையில் வைத்து இராணுவத்தினர் விசாரணைக்காக அவரைக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் அவரைப் பற்றி எதுவும் தெரியவில்லை" என்று குறிப்பிட்டார்.

அப்போது ஆணைக்குழுவினர், "விசாரணைக்காக இராணுவத்தினர் கொண்டு சென்றதை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டனர். "நான் என்ன பொய்யா சொல்கின்றேன். எனது பிள்ளைக்காக நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்"- என்று அந்தத் தாய் கோபத்துடன் பதிலளித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளராக இருந்தவரது மனைவியும் நேற்று சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில், "எனது கணவரும் நானும் எனது இரண்டு பிள்ளைகளும் போரின் முடிவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தோம்.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்களை சரணடையுமாறு இராணுவத்தினர் தெரிவித்தனர். அதற்கமைய எனது கணவர் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அப்போது அருட்தந்தை பிரான்சிஸ்ஸே இவர்கள் அனைவரையும் பொறுப்பெடுத்துக் கொண்டு சென்றார்.

போராளிகளுக்கு மொழிப் பிரச்சினை இருந்தமையினால், சரணடையப் போகின்றவர்களின் விவரங்களை பிரான்சிஸ் அவர்களே பெற்றுக்கொண்டு இராணுவத்தினரிடம் கொடுத்தார். இதன் பின்னர் எனது கணவரை என்னிடமிருந்து வேறாக்கினர். அவரைப் போல 75 போராளிகளைத் தனிமைப்படுத்தி வட்டுவாகலில் இருந்தபனங்கூடலுக்குள்கொண்டு சென்று வைத்திருந்தனர்.

அப்போது சிலர் குடும்பமாகவும் சென்றிருந்தனர். என்னையும் அவ்வாறு வருமாறு இராணுவத்தினர் சொன்ன போதும், எனது கணவர் என்னை தனது தாயாருடன் செல்லுமாறு தெரிவித்ததால் நான் தப்பித்து இன்று வந்திருக்கின்றேன். எனது கணவர் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் உள்ளிட்ட 75 பேரை ஏற்றிக் கொண்டு பஸ் புறப்பட்டது. அப்போது எனக்குத் தெரிந்த, 4 குடும்பங்கள் அந்த பஸ்ஸில் போராளிகளுடன் சென்றனர். அவ்வாறு சென்றவர்களுக்கு இன்று வரையில் என்ன நடந்தது என்று தெரியாது. குடும்பமாகச் சென்றவர்களில் சிறு குழந்தைகளும் இருந்தனர். அவர்களுக்கும் என்ன நடந்தது என்று இதுவரையில் தகவல் எதுவுமில்லை"- என்று தெரிவித்தார்.

செல்வராணி என்பவர் சாட்சியமளிக்கையில், "1993 ஆம் ஆண்டு இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் எனது மகன் காயமடைந்து ஒரு கால் இழந்த நிலையில் இருந்தார். போரின் முடிவில், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி எனது மகனைத் தூக்கிக் கொண்டு இராணுவக் கட்டுப் பாட்டு பகுதிக்குள் வந்தேன். அப்போது வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினர் எனது மகனை விசாரணைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவித்து என்னிடமிருந்து பறித்தெடுத்துக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் எனது மகனைக் காணவில்லை."- என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இளங்கோவன் கனகாம்பிகை என்பவர் சாட்சியமளிக்கையில், "தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் எனது மகன் இருந்தவர். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி வட்டுவாகலில் வரும் போது இராணுவத்தினர் அவரைச் சரணடையுமாறு பணித்தனர். அப்போது அருட்தந்தை பிரான்சிஸ் எனது மகனை இராணுவத்தினரிடம் கூட்டிச் சென்று சரணடைய வைத்தார். அதன் பின்னர் அவருடன் பலரை பஸ்ஸில் ஏற்றிச் செல்வதைக் கண்டோம். அதன் பின்னர் இன்று வரையில் வீடு திரும்பவில்லை"- என்று கூறினார். (ற-5)

## இலங்கை

கடந்த மாதம் இந்திய இலங்கை பாதுகாப்பு செயலாளர்களுக்கு இடையே இடம்பெற்ற சந்திப்பினை அடுத்தே இந்த விசேட பரஸ்பரம் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ளும் நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது. இன்று ஆரம்பிக்கப்படும் இந்த பயிற்சி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற)

## நாவற்குழி

டுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகின்றது. இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அது தொடர்பில் அறிவித்ததனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர். குறித்த பாலத்தின் ஊடாகத் தண்ணீரை மறுபுறத்துக்கு திறந்து விடும் சுற்று வட்ட கட்டடத்தை அண்மித்து கட்டடத்தின் ஒருபுறம் துப்பாக்கியும் மறுபுறம் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ற-4)

## இராணுவம்

அழைக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் 38 பேரே தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

அதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 12 முறைப்பாடுகளும், இராணுவத்தினருக்கு எதிராக 13 முறைப்பாடுகளும், யாரால் காணாமற்போகச் செய்யப்பட்டனர் என்பது தெரியாது என்று 13 பேரும் சாட்சியங்களை முன்வைத்தனர்.

இதில் 5 பேர் வட்டுவாகல் பாலத்தில் வைத்து இராணுவத்தினரிடம் கையளித்தமை தொடர்பிலும், 4 பேர் வலைஞர்மடம் கடலில் தொழிலுக்குச் சென்றபோது காணாமற்போனமை தொடர்பிலும் ஆணைக்குழு முன்பு சாட்சியமளித்தனர். (ற-5)

## சரமாரியாக

ததாகத் தெரிவித்தார்.

இவ்வாறு நீங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் போது உங்களை யாராவது தடுத்தார்களா ? என்று ஆணைக்குழுவினர் மீளவும் கேள்வியெழுப்பினர். அதற்கு அவர், அவ்வாறு யாரும் எங்களைத் தடுக்கவில்லை. அரசின் அறிவிப்பைக் கேட்டு பாதுகாப்பு வலயங்களுக்குச் சென்றோம்.

பாதுகாப்பு வலயங்களை நாங்கள் தேடித் தேடிச் சென்ற போது, அங்கேதான் குண்டு போட்டார்கள். ஷெல்லடி அந்தப் பகுதி மீது தான் அதிகம் இருந்தது. அதில் பலர் கொல்லப்பட்டனர் - என்று தெரிவித்தார். (ற-5)

## இந்தியாவோடு

ருந்தது. அரசு இந்தியாவு டன் பகைமையை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் செயற்பட்டு வருகின்றது இந்தப் பிரச்சினைக்கு சீனாவை குற்றம் சுமத்த முடியாது"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை வலுவான கட்டமைப்பைக் கொண்டது. போரின் பின்னரான அரசின் அணுகுமுறைகள் பிழையானவை. அரசு சர்வதேச பெறுமதிகளுக்கு உரிய வகையில் மதிப்பளிக்காமை, ராஜதந்திர ரீதியில் முரண்பாடுகளை ஏற்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது.

போரை வென்றெடுத்த அரசு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது. முரண்பாட்டு ரீதியான ராஜ தந்திர அணுகுமுறைகளங் பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

04 NOV 2014

## அதிபர்களின் விவரம் திரட்டல்

தென்மராட்சி, நவ.4
தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் திரட்டப்படவுள்ளன.
கடந்த 2008 ஜூலை முதலாம் திகதிக்கு பின்னர் அதிபர்களாகக் கடமையாற்றி இளைப்பாறியவர்கள் மற்றும் தற்போது அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் ஆகியோரின் விவரங்களே திரட்டப்படுகின்றன.
சம்பந்தப்படுவோர் வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தந்து உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.4
நாவற்குழி மகாவித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் அமரர் சரவணமுத்து நினைவு நிதிய ஆரம்ப நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அரங்கில் இடம்பெறும்.
வித்தியாலய அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சரவணமுத்து, ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடிக் கிளை முகாமையாளர் ம.கோபிகிருஷ்ணா ஆகியோரும் கௌரவ விருந்தினராகவும் வித்தியாலய பழைய மாணவனும் தொழில்நுட்ப உத்தியோகத்தருமான கோ.ஜீவபாலனும் கலந்து கொள்வர்.
அமரர் சரவணமுத்து நினைவு நிதியம் நிகழ்வில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (வ-9)

# தமிழர் பலத்தைப் பிரிக்க அரச சக்திகள் சில திட்டமிட்டு முயற்சி

## கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசன் சாடல்

அம்பாறை, நவ. 4
அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு எதிராக அரசுடன் சில மதகுருமாரும் சில அரசியல்வாதிகளும் முன் னின்று தமிழர்களின் பலத்தை பிரிப்பதற்கு. பல கோணங்களில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டுச் செயற்படுவதாக அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ரி.கலையரசன் தெரிவித்துள்ளார்.
ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவின் கீழ் உள்ள கண்ணகிபுரம் கிராமத்தில் வசிக்கும், கடந்தகால போரால் கணவரை இழந்த 90 பேரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சுயதொழில் வேலைவாய்ப்பு முயற்சி தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;
வடக்கு- கிழக்கு பிரதேசங்களிலுள்ள எம்முடைய தமிழ் மக்கள் தாம் நிம்மதியாகவும், அரசியல் நீரோட்டத்தில் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காக நீண்டகாலமாக போராடி வரும் ஒரு சமூகமாகும். இன்றை வரைக்கும் மாறிமாறி ஆட்சி செய்து வந்த அரசுகள் எதுவுமே தமிழ் மக்களுக்கான ஒருநிலையான தீர்வை முன் வைக்காத நிலைமை தான் உள்ளது.
இதற்காக ஆரம்பத்தில் ஜனநாயகரீதியாகவும், ஆயுதமுனையிலான போராட்டமாகவும், தற்போது சர்வதேச ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்து வருகின்றோம். அவ்வாறான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் கால கட்டத்திலே கிழக்கு மாகாணம் தனிமை யாகப் பிரிக்கப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெற் றது. அம்பாறை மாவட்டத்தில் 3 மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் தெரிவு செய்யப்பட்ட பின் எங்களுடைய பிரதேசத்தில் பெரிய அபிவிருத்தி நடக்கப் போகின்றது என்று நாம் எண்ணினோம்.
பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிசெய்யப் போகிறார்கள், போராட்டத்தில் ஈடுபட்டு கால், கைகளை இழந்து ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வார்கள் என பெரிய அவாவில் இருந்தோம். ஆனால் எதுவுமே நடந்தேறியதாக இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே எந்தவிதமான உதவிகளும் அற்றவர்களாக, ஏழைகளாக, அநாதைகளாக வாழுகின்ற நிலைமைதான் வட கிழக்கு பிரதேசங்களிலும் குறிப்பாக கண்ணகிபுரம் கிராமத்திலும் இருந்து கொண்டிருக்கின்றது.
இவ்வாறான நிலைமையைப் போக்குவதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அன்று முதல் இன்று வரைக்கும் மக்களின் பிரச்சினைக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றது. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதனை எங்களுடைய தலைவர்கள் எதிர்த்தார்கள். அன்று அவர்கள் எதிர்க்காமல் இருந்திருந்தால் நாங்களும் சிங்களம் பேசுகின்ற ஒரு இனமாக மாறியிருப்போம். அவர்கள் எதிர்த்ததன் காரணமாகத்தான் நாங்கள் வடக்கு- கிழக்கில் தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவர்கள் அவ்வாறு எதிர்த்து 20 வருடங்களுக்கு பின்னர் தமிழும் சம அந்தஸ்தைப் பெற்றது. இவ்வாறு பல முன்னெடுப்புக்களை எமது கட்சி முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்று நாம் நிலையான ஒரு தீர்வை நோக்கிய பயணத்தைச் செய்து கொண்டிருக்கின்றோம். அந்தத் தீர்வு வரும்வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உழைத்துக் கொண்டிருக்கும்" -என்றார். (வ)

## 'இனிவரும் தேசிய தேர்தலில் எனது வியூகம்'

### வாசகங்களுடன் மட்டக்களப்பில் போஸ்டர்கள்




மட்டக்களப்பு, நவ.4
'இனிவரும் தேசிய தேர்தலில் எனது வியூகம்' என்ற தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அமைச்சர் பஷீர் சேகுதாவூதின் பெயருடன் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டியில், 'தோற்றால் நான் மட்டும் தோற்பேன், வென்றால் நானும் எமது மக்களும் வெல்வோம். நான் வெல்வதற்கோ, தோற்பதற்கோ முன்பு என்னோடு வேலை செய்யும் என் ஆதரவாளர்கள் வென்று விடுவார்கள். அவர்களுக்கு தோல்வியே இல்லை. எவ்வாறு என்பதை காலம்வரும் போது கூறுகின்றேன்' என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவரொட்டிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளன. (வ)

## குற்றங்களும் கைதுகளும்

கிளிநொச்சி

### போக்குவரத்து விதிகளை மீறிய 13 பேர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகள் மற்றும் பளைப்பகுதி ஆகியவற்றில் வீதி ஒழுங்கு விதிகளை மீறி வாகனம் செலுத்திய 13பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் குறித்த நபர்களை முன்னிலைப்படுத்தினர். இதன்போது நீதிவான் குற்றவாளிகளுக்கு மொத்தமாக 26 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்தார். (வ—55)

கிளிநொச்சி

### வியாபாரிகள் மூவருக்கு எதிராக முறைப்பாடு

கிளிநொச்சி, நவ.4
கிளிநொச்சி பொதுச்சந்தை பகுதியில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்த மூன்று வியாபாரிகளுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பொதுச்சந்தையின் பொதுச் சுகாதார செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கரைச்சி பிரதேச சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்த 3 மீன் வியாபாரிகளுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதாகவும் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(வ—55)

### அனுமதிப்பத்திரம் இன்றி மோ.சை. செலுத்திய பெண் கைது

கிளிநொச்சி, நவ.4
கிளிநொச்சி நகரப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் ஆகியவை இன்றியும், பொலிஸாரின் சமிக்ஞையை மீறியும் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற பெண்ணை பொலிஸார் கைதுசெய்தனர்.
அவர்மீது வழக்கு பதிவு செய்த பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் குறித்த பெண்ணை முன்னிலைப்படுத்தினர். இதன்போது அந்தப்பெண் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பத்தாயிரத்து ஐநூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மீளவும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தினால் கடுமையாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— நீதிவானால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (வ—55)

கிளிநொச்சி

### அனுமதி பெறாது மரம் வெட்டியவர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, பளை, புதுக்காட்டுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பனை மரம் வெட்டியவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக் கிழமை குறித்த நபரை முன்னிலைப்படுத்தியபோது குற்றவாளிக்கு ஆறாயிரத்து ஐநூறு ரூபா தண்டப்பணம் விதித்தார் நீதிவான். (வ—55)

### கவனவீனமாக விபத்தை ஏற்படுத்தியவர் கைது



கிளிநொச்சி, நவ.4
கிளிநொச்சிப் பகுதியில் கவனவீனமாக விபத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குற்றவாளிக்கு நான்காயிரத்து ஐநூறு ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.
அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கிளிநொச்சி வீதிப் போக்குவரத்து பொலிஸார் கடந்த வெள்ளிக் கிழமை நீதிமன்றில் அவரை முன்னிலைப்படுத்தினர். அதையடுத்து குறித்த குற்றச் சாட்டுக்களுக்கு 4,500 ரூபா தண்டப்பணம் விதித்து உத்தர விட்டார் நீதிவான். (வ—55)

## பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

### ஐ.நா. நிபுணர் குழு புதிய எச்சரிக்கை

நியூயோர்க், நவ.4
வெப்பவாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நிவர்த்தி செய்ய முடியாத பாதிப்புக்களை உலக நாடுகள் சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கும் ஆய்வறிக்கை ஒன்றை பருவ நிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ளது. புவி வெப்பமடைந்து வருவதற்கு மனிதர்களின் செயற்பாடுகளே முக்கிய காரணம் என்று இந்த 40 பக்க அறிக்கை கூறுகிறது.
புவியின் வெப்பம் ஆபத்தை உண்டாக்கும் அளவுக்கு அதிகரிப்பதைத் தடுக்க வேண்டுமாயின், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியோடு, உலகத்துக்குத் தேவையான மின்சாரம் முழுமையாகவே கரிம வெளியேற்றம் இல்லாத உற்பத்தி முறைகளிலிருந்து பெறப்பட வேண்டும் என்று இந்த அறிக்கை எச்சரிக்கிறது.
புவி வெப்பமடைவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைச் சமாளிக்க பெரும்பாலான நாடுகள் தயாராகவே இல்லை என்று கோபன்ஹேகனில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டபோது பேசிய ஐ.நா. தலைமைச் செயலர் பான் கீ-மூன் கூறினார்.
பருவநிலை மாற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஏழை மக்களும் பலவீனமான சூழ்நிலையில் உள்ளவர்களுமே என்று கூறிய பான் கீ- மூன், பருவ நிலை மாற்றங்களுக்கு அதிகம் பங்களித்தவர்கள் இவர்கள் அல்ல என்று தெரிவித்தார்.
பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான புதிய உலகளாவிய ஒப்பந்தம் ஒன்றை எட்ட சர்வதேச நாடுகள் விவாதித்து வருகின்றன.
அடுத்த ஆண்டின் இறுதிக்குள்ளாக இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுவிடும் என்று- அவர்கள் நம்புகின்றனர். (வ)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடத்தும்

## அழகியற்கல்வியில் நமதடையாளம்....?

### கருத்தரங்கு

காலம் : 05.11.2014 புதன்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம்.

கலைஞர்கள் மற்றும் பேராளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.



BCHS

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

## After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்கள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

05.11.2014@3.00pm | 08.11.2014@8.00am | 09.11.2014@11.00am | 10.11.2014@9.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 02 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

C175371(7.8.31)


## சங்கிலியன் பூங்காவில் மலர்க்கண்காட்சி

வடமாகாண விவசாய அமைச்சு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மாபெரும் மலர்க் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. வடக்கு மாகாண சபை நவம்பர் மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப் படுத்தி மரநடுகையை ஊக்குவித்துவருகிறது. இதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த மலர்க் கண்காட்சியை வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்து வைப்பார். (த)


## VACANCY
## பணிநிலை வெற்றிடம்

- **Layout Designer** (Male or Female)
  பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
  CorelDRAW, Photoshop and basic applications.
- **Office Assistant** (Male)
  காரியாலய உதவியாளர் (ஆண்)
- **Digital machine Operator** (Male or Female)
  டிஜிற்றல் மெசின் இயக்குனர் (ஆண்/பெண்)
  பழகி வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

உங்கள் சுயவிபரக்கோவையை இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

@ : ideaslanka@gmail.com

மேலதிக விபரங்களுக்கு :
021 221 2505

RiNi Ads & ideas ADVERTISING



## சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி....

செங்கன் விசா முதன்முறையாக 100 % விசா
உறுதிப்பாட்டுடன் 2 வருட விசா
2 வருடங்கள் படிக்க பகுதி நேரமாக உழைக்க அரியவாய்ப்பு
ஞாயிறு தவிர்ந்த எல்லா நாள்களும் திறந்திருப்போம்
(அனைத்தும் நிபந்தனைக்குட்பட்டது)

### திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்

இல. 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 9016
அரச பதிவிற்குட்பட்டது பதிவிலக்கம் PV 82703






**வர்த்தக தடகள சாம்பியன்ஷிப் 2014 இன் ஒட்டுமொத்த சாம்பியன்களாக வெற்றி பெற்ற SLT குழுவினருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!**

இவ் வருடத்தின் வர்த்தக தடகள சாம்பியன்ஷிப் ஒட்டுமொத்த சாம்பியன்களாக வெற்றி வாகை சூடிய SLT தடகள விளையாட்டு குழுவினரின் அர்ப்பணிப்பு, குழுவாக செயற்படல் மற்றும் திடமான நோக்கத்திற்காக கிடைத்த வெற்றியே இது.

www.slt.lk | துரித அழைப்பு 1212

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

PHOENIX OBM


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.